
# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



மாவடிச் சோமாஸ்கந்தர்,
திருவேகம்பம், காஞ்சிபுரம்.

மாலை 6] சோபகிருது - ஐப்பசி—நவர்பர் 1963 [மணி 2

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



மதுரை—நாராயணபுரம் வித்வத் ஸதஸ்ஸில், ஸ்ரீகாஞ்சி
காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய
சுவாமிகள் அவர்கள் ஆசியுரை
வழங்கி யருளுதல்.

## பொருள் அடக்கம்


1. சோமாஸ்கந்த மூர்த்தம்
2. எழுத்து நிலைமாற்றம்
3. சேக்கிழார் விளக்கும் செம்பொருள்
4. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
5. கண்ணுயிருப்பவன் கண்ணன்
6. ஸ்ரீ வைஷ்ணவ ஆச்சார்யர்கள்
7. செய்யூர்க் கல்வெட்டுக்கள் 2
8. திருமூலர் பரம்பரை
9. திருக்கோயில் வழிபாட்டுமுறை
10. தொண்டை நாட்டுத் திருப்பதி யநுபவம்
11. எண்ணுயிரம் கல்வெட்டு
12. அன்பின் என்பு
13. செய்திகள்



ஆண்டுச் சந்தா ரூ. 10/- ★ தனி இதழ் விலை ரூ. ஒன்று.


## சந்தா தாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை 34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்தமாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப் பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்தல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.


—ஆசிரியர்.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 6] சோபகிருது ஐப்பசி-நவம்பர் 1963 [மணி 2


# சோமாஸ் கந்த மூர்த்தம்



சோமாஸ்கந்தர், மாமல்லபுரச் சிற்பம்.

## முன்னுரை

சோமாஸ் கந்த மூர்த்தம் என்பது, சிவபிரான் உயிர்களின் கருமேனி கழிப்பதன் பொருட்டுக் கொண்டருளிய திருமேனிகளுள் சிறந்ததொன்று. சிவபிரான் எத்துணையோ பற்பல திருவுருவங்களை எடுத்தருளினர் என்று நூல்கள் கூறுமாயினும், நடராஜர் – தட்சிணா மூர்த்தி என்னும் திருவுருவங்களைப் போன்று, தனிப் பெருஞ் சிறப்புடையதாகப் போற்றப் பெறுவது சோமாஸ்கந்த மூர்த்தம் ஆகும்.

எல்லாச் சிவாலயங்களிலும் சோமாஸ் கந்த மூர்த்தம் சிறப்புற வைத்து வழிபடப்பெறும். சோமாஸ் கந்தரே பெரும்பாலும் எல்லாச் சிவாலயங்களிலும் உற்சவ மூர்த்தியாக விளங்குதல் காணலாம்.

## திருவாரூர் நான்மணி மாலை

சிவபெருமான் ஸ்கந்த மூர்த்தியைத் தமக்கும் உமாதேவியாருக்கும் நடுவே இருக்கச் செய்து எழுந்தருளி யிருக்கும் திருவுருவமே, சோமாஸ் கந்த மூர்த்தம் எனப்படும். ஸ+உமா+ஸ்கந்த: என்னும் வட சொற்கள் மூன்றும் சந்தியாம் போது 'ஸோமாஸ்கந்த:' எனவரும். மூர்த்தம் — திருவுருவம். இத்திருவுருவத்தின் இயல்பினைச் சிறந்ததொரு சொல்லோவியமாகத் திருவாரூர் நான்மணி மாலைச் செய்யுட் பகுதி ஒன்று வரைந்து காட்டுகின்றது.

## சொல்லோவியம்

இறைவனும் இறைவியும் சிங்காதனத்தில் அமர்ந்திருக்கின்றனர். பளிங்கு நிறமுடைய இறைவனும், நீலநிறமுடைய இறைவியும் ஒருங்கு வீற்றிருக்கும் தன்மை, கங்குலும் பகலும் கலந்தினி திருக்கும் காட்சியைப்போன் றுள்ளது. வலப்பக்கத்தில் இறைவனும், இடப் பக்கத்தில் இறைவியும் இருக்க, அவ்விரு வர்க்கும் நடுவில் 'நாகிளங் குழவி' யாகிய முருகன் வீற்றிருக்கின்றான்.

'மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்' ஆதலின், குழந்தையாகிய முருகனை அன்பு பெருகவும் உள்ளம் உருகவும், இறைவனும் இறைவியும் முறை முறையே நோக்கி எடுத்துத் தழுவி உச்சி மோந்து அணைத்து மகிழ்தலில், ஒருவரின் ஒருவர் இகலி முந்திக் கொண்டு இன்புறு கின்றனர். மேலும், 'மக்கள் சொற் கேட்டல் செவிக்கு இன்பம்' ஆதலின், தமது பச்சிளங் குழவியாகிய முருகனின் திருவாயி னின்று எச்சிலாகிய செங்குமுதத் தேறல் ஒழுக எழும் மழலைத் தீஞ்சொற்களை, எழுதாக் கிளவி யாகிய வேதங்களைப் போலக் கருதிக்கேட்டு மகிழ்கின்றனர்.

சிங்கம் சுமந்த செழுமணித் தவிசில்
கங்குலும் பகலும் கலந்தினி திருந்தாங்கு,
இடம்வலம் பொலிந்த இறைவியும் நீயும்
நடுவண் வைகும் நாகிளங் குழவியை
ஒருவிரின் ஒருவிர் உள்ளம் நெக்குருக
இருவிரும் தனித்தனி ஏந்தினிர் தழீஇ,
முச்சுடர் குளிர்ப்ப முறைமுறை நோக்கி
உச்சி மோந்தும், அப் பச்சிளங் குழவி
நாறுசெங் குமுதத் தேறலொ டொழுகும்
எழுதாக் கிளவியின் ஏழிசை பழுத்த
இழுமென் குரல மழலைத் தீஞ்சொற்
சுவையமுது உண்ணும் செவிகளுக்கு, ஐய!
என் பொருளில் புன்மொழி போக்கி
அருள்பெற அமைந்தது, ஓர் அற்புதம்
[உடைத்தே!

—திருவாரூர் நான்மணி மாலை.

இவ்வழகிய இனிய கருத்தும் சொல்லோ வியமும், காசிக்கலம்பகம் என்னும் நூலின் கவிதை யொன்றிலும் சிறப்புறத் தீட்டிக் காட்டப் பெற்றுள்ளது.

## ஒருதலைக் காமம்

இத்தகைய சிறப்பு மிக்க சோமாஸ்கந்த மூர்த்தத்தின் அருமைப்பாட்டினைப் பிறிதோ ரிடத்திலும் குமரகுருபர சுவாமிகள், பின்வரும் கருத்து அமையச் சுவை பொருந்த நன்கினிது எடுத்து, அன்புடன் பாடி மகிழ்கின்றார் :

"பெருமானே! தாங்களும் உமாதேவி யாரும் உலகுயிர்கள் அனைத்திற்குமே தாயும் தந்தையுமாக விளங்குபவர் அல்லரோ? இங் ஙனம் உலகுயிர்கள் எல்லாவற்றிற்கும் அம்மை யப்பர் என விளங்கும் நீங்கள் இருவரும், உல குயிர்கள் ஆகிய பிற குழந்தைகள் இருக்கவும், முருகன் ஆகிய ஒரு குழந்தையை மட்டுமே மடித்தலத்தில் எடுத்துவைத்துக் கொண்டு, முத்தம் கொடுத்து அணைத்து மகிழ்கின் றீர்களே! இது நடுவு நிலை தவறிய பட்ச பாதச் செயல் (ஒருதலைக் காமம்) ஆகும் அன்றோ?"

வள்ளைவாய் கிழித்துக் குமிழ்மறித் தமர்ந்த
மதர்அரிக் கண்ணியும் நீயும்
மழலைநா றமுதக் குமுதவாய்க் குழவி
மடித்தலத் திருத்திமுத் தாடி
உள்ளம்நெக் குருக உவந்துமோந் தணைத்தாங்கு
உவந்தனிர் இருத்திரால்! உலகம்
ஒருங்குவாய்த் திருக்கு ஒருதலைக் காமம்
உற்றவா றென்கொலோ? உரையாய்!

—மதுரைக் கலம்பகம்

## திரிவேணி சங்கமம்

குமரகுருபர சுவாமிகள் பதினேழாம் நூற் றுண்டின் பிற்பகுதியில் விளங்கிய தலைசிறந்த அருட் பெருங் கவிஞர் (கி.பி. 1625—1688). மதுரையில் இருந்து அரசு புரிந்த திருமலை நாயக்க மன்னரால் (கி.பி. 1623—1659) பெரி தும் மதித்துப் போற்றப் பெற்ற சிறப்புடையவர். தமிழ் நாட்டினின்று யாத்திரையாகச் சென்று, காசியில் நெடுங்காலம் வதிந்தவர். அங்கே குமாரசுவாமி மடம் அமைத்தவர். திருச்செந் தூர் முருகனின் திருவருள் பெற்றவர். இத் தகைய பெருஞ் சிறப்பு மிக்க குமரகுருபரர்

சோமாஸ்கந்த மூர்த்தம் பற்றி ஓர் அழகிய கருத்தை அரிய இனிய கவிதையாக வெளியிடுகின்றார்.

வடநாட்டிலுள்ள **திரிவேணி சங்கமம்** மிகவும் புகழ்பெற்ற தொன்றாகும். **கங்கை, யமுனை, சரசுவதி** என்னும் மூன்று பேராறுகளும் ஒன்று கலந்து கூடும் இடமே, திரிவேணி சங்கமம் எனப்படும். யாத்திரை செல்பவர்கள் அங்குச் சென்று நீராடுதலை மிகவும் சிறப்பாகக் கருதிப் போற்றுவர்.

குமரகுருபரர் வடநாட்டில் ஏறத்தாழ 30 ஆண்டுகள் வாழ்ந்திருந்தவர் எனவே அவர் அவ்வப்போது திரிவேணி சங்கமம் சென்று திருமுழுக்குச் செய்து மகிழ்ந்திருத்தல் கூடும். அதனாற் சோமாஸ்கந்த மூர்த்தம் பற்றிப் பாடக் கருதும் அவர், திரிவேணி சங்கமத்தினை நினைவு கூர்ந்து, இரண்டினையும் இணைத்து இயைத்து இனிது பாடுகின்றார்.

சிவபெருமானும் உமாதேவியும் முருகப் பெருமானும் ஆகிய மூவரும் சோமாஸ்கந்த மூர்த்தமாக ஒருங்கே வீற்றிருத்தல், திரிவேணி சங்கமம் போன்ற அழகிய நல்ல காட்சியாகத் திகழ்கின்றது. சிவபெருமான் தன் மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித் திருத்தலால், வெண்மை நிறமுடைய கங்கை யாற்றைப்போல விளங்குகின்றான். உமாதேவியார் தனது நீல நிறத்தால், யமுனை நதியைப் போலத் திகழ்கின்றாள். சிவந்த நிறம் வாய்ந்த முருகனோ, கலங்கிச் சிவந்து பெருகிவரும் சரசுவதி நதியைப்போலக் காணப்படுகின்றான்.

**தம்மேனி வெண்பொடியால்**
**தண்ணளியால் ஆரூரர்**
**செம்மேனி கங்கைத்**
**திருநதியே — அம்மேனி**
**மானே யமுனை! அந்த**
**வாணி நதியும் குமரன்**
**தானே ! குடைவேம் தனித்து.**

—திருவாரூர் நான்மணிமாலை

இப்பாடலில் முறையே கங்கை யமுனை சரசுவதி என்னும் நதிகள், இறைவனும் இறைவியும் முருகனும் ஆகிய மூவருமாக உருவகம் செய்யப் பெற்றிருக்கும் திறம், அறிந்தின்புறற் பாலது.

### சச்சிதானந்தம்

கடவுட் பெரும் பொருளின் இயல்பினைக் கவிஞர்களும் ஞானிகளும் பலவகையாகச் சிறப்பித்து விதந்து வியந்து பாடுங்கால், எத்தனையோ வெவ்வேறு பலவகைகளி **லெல்லாம்** பாடுவர். ஆயினும், அவர்கள் அனைவரும் கடவுட் பெரும்பொருள் **சத்து-சித்து-ஆனந்தம்** என்னும் மூன்றன் வடிவாகத் திகழ்கின்றது என்பதனை, ஒருமுகமாக ஒத்து உடன்பட்டுப் புகழ்ந்துரைத்துப் போற்றுவர்.

**உலகநிலை முழுதாகி ஆங்காங் குள்ள**
**உயிராகி உயிர்க்குயிராம் ஒளிதா னகிக்**
**கலகநிலை அறியாத காட்சி யாகிக்**
**கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ண தாகி**
**இலகுசிதா காசமதாய்ப் பரமா காச**
**இயல்பாகி இணையொன்றும் இல்லா தாகி**
**அலகில்அறி வானந்தம் ஆகிச் சச்சி**
**தானந்த மயம்ஆக அமர்ந்த தேவே**

—மகாதேவமாலை

எனவரும் திருப்பாடல், கடவுள் சத்து-சித்து-ஆனந்த மயம் ஆக விளங்குந் திறனை, இனிது விளக்கப் போதிய சான்றாகும்.

* 'நம் இந்திய நாட்டுப் பழம் பெருஞ் சான்றோர்களும், தத்துவ ஞானிகளும், தவநெறிச்

---

* "The view of this world which India has taken is summed up in one compound Sanskrit word, **Satchidananda.** The meaning is that Reality, which is essentially one, has three phases.

The first is **Sat** ; it is the simple fact that things are, the fact which relates us to all things through the relationship of common **existence.**

The second is **Chit**; it is the fact that we know, which relates us to all things through the relationship of **knowledge.**

The third is **Ananda**; it is the fact that we enjoy, which unites us with all things through the relationship of **Love.**"

—**Rabindranath Tagore,**
The Message of the Forest.

செல்வர்களும் உலகையும் கடவுளையும் பற்றி ஆராய்ந்தறிந் துணர்ந்திருந்த கருத்துக்கள் அனைத்தையும், சச்சிதானந்தம் என்னும் சுருக்கம் மிக்க சொற்றொடர் ஒன்றே, தெளிவுற விளக்கி நிற்கின்றது' என நம் இந்திய நாட்டுப் பெருங் கவிஞராகிய இரவீந்திரநாத தாகூர் இயம்புவர்.

உள்பொருள் ஆகத் திகழும் கடவுட் பொருள் ஒன்றே சத்து+சித்து + ஆனந்தம் என்னும் முப்பெரும் பண்பும் கூறும் உடையதாக ஒளிர்கின்றது. சத்து-உள்ளது, உண்மை. சித்து-அறிவு. ஆனந்தம்-இன்பம். எனவே சச்சிதானந்தம் என்பதனைத் தமிழில் உண்மை-அறிவு-இன்பம் என வழங்குவர்.

உண்மையறி வானந்த உருவாகி
எவ்வுயிர்க்கும் உயிராய், நீரின்

தண்மை, அனல் வெம்மையெனத் துணையகலா
திருந்து, சராசரங்கள் ஈன்ற

பெண்மையுரு வாகியதன் ஆனந்தக்
கொடி,மகிழ்ச்சி பெருக யார்க்கும்

அண்மையதாய் அம்பலத்துள் ஆடியருள்
பேரொளியை அகத்துள் வைப்பாம்

—திருவிளையாடற் புராணம்

இங்ஙனம் சத்து சித்து ஆனந்தம் எனும் மூன்று இயல்புகளோடு ஏகமாய்ச் "சச்சிதானந்த சிவம்" என அமூர்த்த நிலையில் இருக்கும் உண்மையையே, மூர்த்த நிலையிலும் சோமாஸ்கந்தர் திருவுருவம் பிரிவற விளக்குகின்றது என்பது பெரியோர்களின் கருத்து. இறைவன் சத்து; இறைவி சித்து; முருகன் ஆனந்தம் என விளங்குதலைச் சமயஞான நூல்கள் சாற்றுகின்றன.

மல்லல்வளம் கனிந்தபுகழ்க் கமலேசர்
திருவுருவும், வாம பாகத்து

அல்லமர்பைங் குழலுமையாள் திருவுருவும்,
இருவருக்கும் அமுதம் ஆன

கொல்லயில்வேற் பசுங்குழவி திருவுருவும்,
அவ்வுருவாம் குணங்கள் மூன்றின்

நல்லுரு!ஆ தலின் அன்றோ? இவர் அகில
காரணராய் நவில்கின் றாரே!

—குமரகுருபர சுவாமிகள்

பொருள்உள சத்து ; நிரந்தரம்
பொருவலும் அந்தை அணைந்தவிர்

அருளுரு சித்து ; நிரம்பிடும்
அதிக மதர்ப்பெனும் இன்பமும்

ஒருமுகம் உற்றசொ லின்கண்,முன்
உளது சிவப்பொருள் ; நள்ளது

திருவுறு சத்தி; நல் அந்தரம்
திகழ்வது சுப்பிர மண்யமே

—பாம்பன் சுவாமிகள்,
தகராலய ரகசியம்.

* வேதாகம உபநிடதங்கள் எல்லாம் விதந்து கூறும் சத்து சித்து ஆனந்தம் என்னும் இம்முப்பெரும் பண்புகளின் திருவுருவாக விளங்குவதே சோமாஸ்கந்த மூர்த்தம் என்றும், இதுகிறித்தவ சமயத்திற்கூறப்பெறும் பரமபிதா, தேவகுமாரன், பரிசுத்த ஆவி என்னும் முப்பொருள்களின் இயல்பிற்கு ஒத்த தன்மை யுடையதாகக் காணப்படுகின்றது என்றும், சைவ சித்தாந்தப் பேரறிஞரும் சான்றோரும் ஆக விளங்கிய திருவாளர் ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை அவர்கள் குறிப்பிடுவர்.

## கச்சியப்ப சிவாசாரியர்

கந்தபுராணம் பாடியருளிய கச்சியப்ப சிவாசாரியர் ஒரு மாபெருங் கவிஞர். காஞ்சிபுரம் குமரகோட்டத்தில், சிவாசாரியராக விளங்கி, முருகனை வழிபட்டு அருள்பெற்ற பெருந்தகை. அவர் பகலுக்கும் இரவுக்கும் இடைநடுவே போதரும் மாலைக் காலத்தின் இயல்பினை வருணனை செய்யத் தலைப்படுங்கால், அம்மைக்கும் அப்பனுக்கும் நடுவே குழந்தை வடிவில் முருகன் அமர்ந்திருக்கும் சோமாஸ்கந்த மூர்த்தத்தினையே, தமது கவித்திறமும் பக்தியுணர்வும் தோன்றப் பாடுகின்றார்.

---

* "Our idea of God is Sat-Chit-Ananda, symbolised in the form of **Somaskanda** (Sa+Uma+Skanda) and this is the same as God the **Father**, God the **Mother** or Holy ghost, and God the **Son**, and I have quoted in some other place the definition of these terms from **Bishop Westcott**, God as pure being or **spirit**, God as **light** that links to him all humanity, and God as Love."

—**J.M. Nallaswamy Pillai**, B.A.,B.L ,
Studies in Saiva Siddhantha, p. 193.



மாவடிச் சோமாஸ்கந்தர், திருவேகம்பம், காஞ்சிபுரம்.

ஏல வார்குழல் இறைவிக்கும்
எம்பிரான் தனக்கும்
பாலன் ஆகிய குமரவேள்
நடுவுறும் பான்மை,
ஞால மேலுறும் இரவொடு
பகலுக்கும் நடுவாய்
மாலை யானதொன் றழிவின்றி
வைகுமாறு ஒக்கும் !

—கந்தபுராணம்.

இப்பாடலில் ஏலவார் குழலாள் என்றது, காஞ்சிபுரத்திலுள்ள காமாட்சி யம்மைக் குரிய ஒரு திருப்பெயர். "ஏலவார் குழலாள் உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற கால காலனைக் கம்பன் எம்மானைக் காணக் கண் அடியேன் பெற்ற வாறே" என்பது சுந்தரர் தேவாரம்.

காஞ்சியில் திருவேகம்பநாதர் கோயிலுக்கும், ஸ்ரீ காமாட்சியம்மை கோயிலுக்கும் இடைநடுவே முருகன் எழுந்தருளிவிளங்கும் குமரகோட்டம் அமைந்திருத்தல், சோமாஸ்கந்த மூர்த்தத்தின் தத்துவ நுட்பத்தினைப் புலப்படுத்துவதாகும் என்பதும், ஈண்டு அறிந்து இன்புறத் தகுந்தது.

## சேக்கிழார் சுவாமிகள்

இத்தகைய சிறப்பு மிகுந்த சோமாஸ்கந்த மூர்த்தம் பற்றித் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமான் அவர்கள், அறுபான்மும்மை நாயன்மார்களின் வரலாறு கூறும் தமது பெரிய புராணத்தில் ஓர் இடத்திற் குறிப்பிடும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுகின்றார்கள். அடியார்களுக்கு அருள் செய்யுங் காலங்களிலெல்லாம் இறைவன் அம்மையும் அப்பனுமாக விடைமேல் எழுந்தருளி வந்தனன் எனவே குறிப்பிடும் சேக்கிழார் சுவாமிகள்,

"மலைபயந்த
தைய லோடும் சரவணத்துத்
தனய ரோடும் தாம் அணைந்தார்"

எனச் சிறுத்தொண்ட நாயனுர் ஒருவருக்கு மாத்திரம் இறைவன் அம்மையும் அப்பனுமாக மட்டுமே யன்றி, முருகன் ஆகிய குழந்தையுடனும் ஒருசேரச் சோமாஸ்கந்த மூர்த்தமாக எழுந்தருளி வந்து அருள்புரிந் தருளினன் எனப் பாடுகின்ருர்.


சிறுத்தொண்டர் ஒருவர் மட்டுமே யன்றி, அவர்தம் குடும்பம் முழுவதுமே தம்முடைய கடினமான நிபந்தனைகளுக் கெல்லாம் உட்பட்டும் உடன்பட்டும் பணிபுரிந்து, அமுது செய்வித்துத் தம்மை விரும்பி வழிபட்டு அன்பு செய்தனராதலின், சிவபிரானும் அவர்களைத் தம் குடும்பத்துடன் எழுந்தருளிப் போந்து ஆட்கொண் டருளினர் போலும்! சிறுத்தொண்டர் சிவபிரானையும், திருவெண்காட்டம்மை — சந்தனத்தம்மை ஆகிய இருவரும் உமாதேவியையும், சீராள தேவர் முருகப் பெருமானையும் என்றும் பிரியாதே இறைஞ்சி இருக்கும் பேறு பெற்றனர்.

கொன்றை வேணி யார்தாமும்
பாகங் கொண்ட குலக்கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தரும்தம்
விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனைவியார்
நீடும் மகனுர் தாதியார்
என்றும் பிரியா தேஇறைஞ்சி
இருக்க உடன்கொண் டேகினர்

—பெரியபுராணம்.

## குடும்ப வாழ்விற் குலவும் இன்பம்

பழந்தமிழ் மக்கள், மனிதசமுதாய வளர்ச்சிக்குக் குடும்பவாழ்வு மிகவும் இன்றியமையாதது என உணர்ந்திருந்தனர். இல்லறம் என்னும் நல்லறம் ஆகிய குடும்பவாழ்வு செழித்தால்தான், நாடும் சமுதாயமும் நலம் பெற்ரேங்கித் திகழ்தல் இயலும். குடும்பவாழ்வு செழித்து நலங் குலவப் பெறுமாயின், குவலய வாழ்விலும் அன்பும் அறனும் நிறைந்து, இன்பமும் பொருளும் மிகுந்து, மண்ணகமே விண்ணகமாய் மாறிப் பொலிந்து மாட்சிமையுறும். குடும்பவாழ்க்கை நலம் பெற வளர்ந்து செழித்தற்கு, ஒருவனும் ஒருத்தியும் முறைப்படி



சோமாஸ்கந்தர், திருத்துறைப்பூண்டி,

மணந்து கோடலும், இனிய நல்ல மக்கட்பேறு எய்துதலும் இன்றியமையாதன.

மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு


—திருக்குறள்.

கணவனும் மனைவியும் குழந்தையும் ஆகிய முப்பொருட்டன்மை (Trinity) திகழ்வதே, குடும்ப வாழ்வின் அரும் பெருஞ் சிறப்பு. *

"ஆண்மானும் பெண்மானும் ஆகிய இரண்டிற்கும் இடையே, அவை ஈன்றெடுத்த மான் மறி ஒன்று இருந்தாற் போல, இனிய தமது புதல்வனைத் தமக்கு இடையில் வீற்றிருக்கப் பெறும் கணவனும் மனைவியும் மகிழ்ச்சியுடன் விளங்கும் காட்சி, மிக்க பேரின்பம் விளைவிப்பதாகும். இவ்வுலகத்திலேனும் மேலுலகத்திலேனும் அதற்கு இணையானது வேறுபிறிதெதுவும் இல்லை". இவ்வுண்மையைப் பின்வரும் சங்க இலக்கியப் பாடல் செவ்விதின் உணர்த்தும்:

* "The perfect and complete marriage in its full development is a **trinity**."

—**Prof. Havelock Ellis,** Studies in Psychology, [Vol. II p. 508.



சோமாஸ்கந்தர், மன்னார்குடி.

மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வன் நடுவணன் ஆக, நன்றும்
இனிது மன்ற, அவர் கிடக்கை! முனிவின்றி
நீல்நிற வியலகம் கவைஇய
ஈனும், உம்பரும் பெறலருங் குரைத்தே
—ஐங்குறு நூறு, 401.

இங்ஙனம் கணவனும் மனைவியும் குழந்தையும் ஆகிய முப்பொருட் டன்மை (Trinity) ஒரு சேரத் திகழும் இணையற்ற குடும்பவாழ்வின் இன்ப நலத்தினையும், சிறப்பினையும் எழிலுற விளக்கிக்காட்டும் இனிய அடையாளம் (Symbolism) ஆகத் திகழ்வதே, சோமாஸ் கந்த மூர்த்தம் எனப்படும்.

முடிவுரை

* சோமாஸ்கந்த மூர்த்தம் தமிழ் நாட்டுக்கே தனிப் பெருஞ் சிறப்பாக உரியது. இந்திய நாட்டின் வேறு பிற எந்தப் பகுதிகளிலும் காணப்படாமல், தமிழ் நாட்டில் மட்டுமே தனிப் பெருஞ் சிறப்பியல்பாகச் சோமாஸ்கந்தர் திருவுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

சமண பௌத்த சமயங்களின் விளைவாகத் துறவறமே சால்புடைத் தென்னும் கொள்கை பெரிதும் பரவி வந்த காலையில், மக்கட் சமுதாயம் வளர்ந்தோங்கி நிலைபெறுதற் பொருட்டுக் குடும்ப வாழ்வின் நலங்களையும், இல்லறமே நல்லறமாதலையும் வலியுறுத்தித் தெளிவுறுத்துதல், பக்தி இயக்கத்தைப் பரப்பி நாட்டு மக்கள்பால் மறுமலர்ச்சி யுணர்வுகிளர்ந்தெழச் செய்தருளிய ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் அரும் பெருங் கடப்பாடு ஆயிற்று. அவ்வகையிற் குடும்பவாழ்வின் அளப்பரு நலங்களையும், அரும் பெருஞ் சிறப்பினையும் விளக்குவதாகப் போற்றிப் பரப்பப்பெற்ற திருவுருவே சோமாஸ்கந்த மூர்த்தம் எனலாம். மாபெரும் யோகியாக விளங்கும் சிவபெருமானே, மிகப்

---

* "The form of Siva in the **Somaskanda** type is, as far as I can see, confined only to Tamilnad..............What I want to convey is that a scene of **supreme domestic felicity**, with the husband **Siva** on one side and the wife **Uma** sitting or even standing a little to his left with the 'ever-boy' **Kumara Skanda** sitting or standing as a tiny child between them, is seen only or mostly in the sculptures of Tamilnad.........

**Domestic felicity and repose** have come to be concentrated, ironically enough, in **Siva**, the deity associated with cremation-ground and bizarre tastes, complete unworldliness and so on with all negations of positive bliss as humans of even highest morals understand it. May we not look upon this development as a supreme group-exercise in compensatory synthesis?"

**—Prof. G. S. Ghurye, Gods and Men, p. 47-49**

பெரிய போகி (குடும்பி) யாகவும் திகழ்வது, வியப்பிற் குரியதொன்றன்றோ ?

பல்லவப் பேரரசர்கள் அமைத்த சிற்பங்களில், சோமாஸ்கந்தர் திருவுருவம் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம் (கயிலாச நாதர்-ஏகாம்பரநாதர்), வேதாரணியம், திருப்புள்ளிருக்குவேளூர் முதலிய பலஇடங்களில் அமைந்துள்ள சிவாலயங்களில், சிவலிங்கத்திற்குப் பின்புறம் உள்ள கருவறைச்சுவரில் சோமாஸ்கந்தர் திருவுருவம் அழகுற அமைக்கப்பட்டிருத்தல் காணலாம்.

ஒருசிறந்த தலைமகன், தனக்குரிய இனிய நல்ல வாழ்க்கைத் துணைவியுடனும், அறிவு ஆற்றல் பண்பு நலங்களிற் சிறந்த மக்கட் பேற்றுடனும், இல்லறம் என்னும் நல்லறம் நடாத்தி, "வையத்து வாழ்வாங்கு வாழ்தல்" வேண்டும் என்னும் ஒப்பற்ற உயரிய கருத்தினையே, சோமாஸ்கந்த மூர்த்தம் துகளற உணர்த்துகின்றது.

சோமாஸ்கந்த மூர்த்தத்தை அன்புடன் வழிபடுவோர், கணவனும் மனைவியுமாய் இல்லற நெறிநின்று இணையிலா இன்பம் துய்த்து, நல்ல மகப் பேறும் சந்தான வளர்ச்சியும் பெற்று இம்மையிற் சிறந்து வாழ்வதுடன், மறுமையில் வீடு பேறும் அடைவார்கள்.

தொல்லை யுலகம் போற்றெடுக்கும்
சோமாஸ் கந்தர் தமைத்தாழின்,
நல்ல மகவும் சந்தானத்
தொடர்பும் இனிது நல்குவார்.

—பேரூர்ப் புராணம்.

**Somaskandar Photos :** By courtesy of **'Institut Francais'**, D' Indologie, Pondicherry.



மதுரை வித்வத் ஸதஸ்ஸிற் கலந்துகொண்ட சிற்பக் கலைஞர்கள்.

# எழுத்துநிலை மாற்றம்

## முன்னுரை

ஒரு மொழியின் வளர்ச்சியிலும் போக்கிலும் காணப்படும் பல்வேறு இயல்புகளையும், மொழி நூல் அறிஞர்கள் (Philologists) ஆராய்ந்து விளக்குவர். அவற்றுள் "எழுத்துநிலை மாற்றம்" என்பதும் ஒன்று.

மக்கள் கவனக் குறைவினாலும், விரைவாகப் பேசுவதனாலும், ஒரு சொல் அல்லது சொற்றொடரில் உள்ள எழுத்துக்களை மாற்றிக் கூறிவிடுவதுண்டு. பின்னர் அச்சொற்களே நாளடைவில் மக்களிடையில் இயல்பாக வழங்கத் தலைப்பட்டு, இலக்கியங்களிலும் இடம் பெற்றுவிடும்.

எடுத்துக் காட்டாக, நம் தமிழ் மொழியில் வைசாகி(விசாகநட்சத்திரத்தை முதன்மையாக உடையது) என்னும் சொல்லே 'வைகாசி' எனவும், மிஞிறு என்னும் சொல்லே 'ஞிமிறு' எனவும், சிவிறி என்பதே 'விசிறி' எனவும், தசை என்பதே 'சதை' எனவும் எழுத்துக்கள் நிலை மாறி வழங்கக் காண்கின்றோம். 'வஸி' எனற் பாலதே ஸிவ என மாறிற்று என்று வடமொழியாளர்கள் கூறுவர். Brid என்னும் பழைய சொல்லே Bird என ஆங்கிலத்தில் வழங்குவதாயிற்று. Crul என்பதே Curl எனமாறி வழங்குகின்றது. இவை போன்ற எழுத்து நிலை மாற்றங்கள், ஆங்கிலத்தில் Metathesis எனப்படும்.

## மொழி மாற்று

இங்ஙனம் சொற்கள் மட்டுமேயன்றி, ஒரோவழி சொற்றொடர்களும் தம் நிலை மாறிப் பிறழ்ந்து வழங்குதல் உண்டு.

> சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
> யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
> கானக நாடன் சுனை

என்னும் பழைய செய்யுள் ஒன்றில், 'சுரை மிதப்ப-அம்மி ஆழ' என வருதற் குரிய சொற்றொடர்கள், 'சுரைஆழ-அம்மி மிதப்ப' எனமாறி வந்திருத்தல் காணலாம் ...இவ்வாறே,

> ஆலத்து மேல குவளை; குளத்துள
> வாலின் நெடிய குரங்கு

எனவரும் செய்யுளில், "ஆலமரத்தின் மேல் நீண்ட வாலையுடைய குரங்குகள் உள்ளன; குளத்தில் குவளை மலர்கள் மலர்ந்திருக்கின்றன" என்னும் பொருளில் "ஆலத்து மேல வாலின் நெடிய குரங்கு; குளத்துள குவளை" என வருதற் குரிய சொற்றொடர்கள் முறை பிறழ்ந்து வந்திருத்தல் காணலாம். இச் செய்யுட்கள் "மொழிமாற்றுப் பொருள் கோள்" முறைக்கு மேற்கோளாக இலக்கண நூல்களில் எடுத்தாளப் பெறும்.

## ஸ்பூனரிஸம் :

இங்கிலாந்து தேசத்தில் ரெவரண்ட் டபிள்யூ. ஏ. ஸ்பூனர் (Rev.W.A. Spooner,D.D.) என்னும் பேரறிஞர் ஒருவர், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் புதுக் கல்லூரியின் (New College) விடுதிக் காவலர் (warden) ஆக இருந்தார். பேரறிவு சான்ற அவர், தமது அறிவாராய்ச்சிகளின் மிகுதிப் பாட்டால், தம்மை மறந்த உணர்வு நிலையில் (Absent-mindedness) சில சமயங்களில் சொற்களை நிலையும் முறையும் மாற்றிக் கூறிவிடுவ துண்டாம்! Dear Queen என்பதனை Queer dean என்றும், Bulging bins என்பதனை Bilging buns என்றும், Crushing blow என்பதனை Blushing crow என்றும் பிற வாறும் அவர் கூறிவிடுவாராம்.

இங்ஙனமே ஒரு சிலர் 'I say, you stand up' என்பதற்கு மாறாக 'you say, I stand up' என்றும்; 'I propose a hearty vote of thanks' என்பதற்கு மாறாக 'I propose a voty of heart of

thanks' என்றும் பிறவாறும் அவசரத்தில் நாக்குத் தவறி மாற்றிக் கூறி விடுவதுண்டு.

இன்னோரனைய பிழைபாடுகளைக் குறிப்பதற்கு மொழிநூலறிஞர்கள் ஸ்பூனர் என்னும் அப்பேரறிஞரின் இயல்பினை நினைந்து, 'Spoonerism' எனவே ஒரு குறியீடு அமைத்து விட்டிருக்கின்றனர். இம்முறையில் நிகழ்ந்த ஒரு சுவையான நிகழ்ச்சியை (Anecdote), இங்கு வாசகர்களின் பொருட்டுக் குறிப்பிடுதல் நலம் பயக்கும் !.

## ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்(1873-1942)

திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளி விளங்கியிருந்த ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் அவர்களை அறியாதவர்கள், பொதுவாகத் தமிழ் நாட்டிலும் - சிறப்பாகச் சமய உலகத்திலும் ஒருவரும் இருக்க மாட்டார்கள். அவர்களைச் சுருக்கமாக 'ஞானியார் சுவாமிகள்' என்றே, தமிழ் கூறும் நல்லுலகம் சிறப்புறக் குறிப்பிட்டுப் போற்றி வந்தது—வருகின்றது ! அவர்கள் வீர சைவ சமய மரபைச் சார்ந்தவர்களே யாயினும், சைவ வைணவ சமரச நோக்குடையவராகத் திகழ்ந்து, தமிழுக்கும் சமயத்துக்கும் அளப்பருந் தொண்டுகள் ஆற்றியிருக்கின்றனர். அவர் ஒப்புயர்வற்ற பெருநாவலர். அவர்தம் நிகரற்ற நாவன்மை கிறித்தவ இஸ்லாமிய சமயப் பெருமக்களையுங்கூட, இணையற்ற இனிய தமது சமயச் சொற்பொழிவுகளில் ஈர்த்து ஈடுபடச் செய்விக்கும். தமிழும் வடமொழியும் ஆங்கிலமும் தெலுங்கும் கன்னடமும் ஆகிய பலமொழிகளைத் துறைபோகக் கற்றுணர்ந்தவர் அவர்! தோற்றப் பொலிவினாற் சுந்தரரையும், வயது முதிர்ச்சியால் அப்பரையும், ஞானப் பேரொளி நலத்தாற் சம்பந்தரையும், கசிந்துருகும் உளநெகிழ்ச்சித் திறனால் மணிவாசகரையும், பக்திநெறி யொழுக்கத்தாற் சேக்கிழார் பெருமானையும், புலமைமாட்சியினால் சிவஞான சுவாமிகளையும் ஒரு சேர நினைப்பிக்கும் பெருந்தகை ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்.

## திருவாசகப் பாடல்

அவர்கள் ஒரு சமயம் ஒரு பேரவைக்குத் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்கள். இடையில் அங்கிருந்த ஓதுவாமூர்த்திகள் ஒருவரை ஒரு பாடல் இசைக்குமாறு பணித்தார்கள். ஓதுவாமூர்த்திகள்,

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா! ஆர்கொலோ சதுரர்?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்.
யாதுநீ பெற்றதொன் றென்பால் ?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்!
திருப்பெருந் துறையுறை சிவனே !
எந்தையே! ஈசா! உடலிடங் கொண்டாய்!
யான்இதற் கிலன் ஓர்கைம் மாறே!

என ஒரு திருவாசகப் பாடலை இனிமையாகப் பாடினார். யாவரும் அவர் பாடிய இசை யினிமையில் ஈடுபட்டு மிகவும் மகிழ்ந்தனர். அப்பாடலில் ஒரு சிறு தவறு அமையப் பாடினார் என்பதை ஒருவரும் உணர்ந்து கொள்ளவில்லை. ஓதுவாமூர்த்திகள் மிகச் சிறந்த ஒருதிருவாசகப் பாடலைச் சமயோசிதமாக எடுத்து அருமையாகப் பாடினார் என்றே அனைவரும் வியந்து இன்புற்றனர்.

## நயத்தக்க நாகரிகம் :

ஆனால் ஞானியார் சுவாமிகள் ஒருவர் மட்டும், ஓதுவாமூர்த்திகள் அப்பாடலின் பொருள் அருமையினை ஆழ்ந்து அறிந்து கொள்ளும் வாய்ப்பு இன்றி, ஏதோ தாம் ஊன்றிக் கவனியாமல் இளமையில் மனப்பாடம் செய்துவிட்ட முறையில், பிழைபடப் பாடுதலைக் கவனித்து விட்டார்கள். ஆயினும் அவர் அதனை வெளியிற் காட்டிக் கொள்ளவில்லை.

எனைத்தும் குறுகுதல் ஓம்பல், மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு

எனத் திருவள்ளுவர் அருளிச் செய்திருத்தலின், அவ்வளவு பெரிய மக்கள் மன்றத்தில், அவருடைய பிழையினை எடுத்துக்காட்டித் திருத்துதற்குச் சுவாமிகள் முற்பட்டிலர்! உலகியலுணர்வாம் இங்கிதம் நன்கு மிகக் கைவந்து தேர்ந்த, பரம கருணாமூர்த்தியல்லரோ சுவாமிகள் ?

ஒரு சில அறிஞர்கள் பிறருடைய பிழைகளை எடுத்துக் காட்டுதலிலேயே, தமக்குத் தனிப் பெரும் சிறப்பு இருப்பதாகத் தவறுகக்

கருதிக் கொண்டு, இல்லாத பிழைகளையும் இருப்பன போலக் கற்பனை செய்து பொல்லாத முறையில் எடுத்துக்காட்டி, வீண் விவாதங்களை யும் பூசல்களையும் எழுப்பிக் கலாம் விளைத்துக் கொண்டே காலம் கழிப்பர். ஆனால் ஞானியார் சுவாமிகளோ, பிறர்செய்யும் பிழைகளை மறைத் துப் பிழையில்லன போலக் காட்டித் திருத்திக் காத்தருளும் பெருந்தகைமை மிக்கவர்கள்!

''நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
வல்லா ராயினும் புறம்மறைத்துச், சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதின் இயக்கும்''

—மலைபடுகடாம் (77-80)

'' நயத்தக்க நாகரிகப் பண்புநலம்'' அவர் கள்பால் இயல்பாக அமைந்திருந்தது. எனவே பிறர் உணரா வகையிலும், ஓதுவா மூர்த்தி களின் உள்ளம் நோகாமலும், தம் கடமையில் தவறாமலும், ஏற்றபெற்றியிற் பின் வருமாறு பேசி அவரை இனிது திருத்தியருளினார்.

## மலையும் மடுவும் :

சுவாமிகள் தமது சொற்பொழிவின் இடை யில் தமிழ் மொழியின் அருமையினையும், திரு முறைகளின் பெருமையினையும், சிவநெறிச் சான்றோர்களின் சிறப்பினையும் விளக்கிக் கொண்டு செல்லுபவர் போல, இயல்பான போக்கில்,

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா! ஆர்கொலோ சதுரர் ?

எனவரும் திருவாசகப் பாடலை ஓதுவா மூர்த் திகள் மிக இனிமையாகவும் உருக்கமாகவும் பாடினார்கள். இவர்கள் பாடிய இதனையே ஒரு சிலர்,

தந்ததென் றன்னைக் கொண்டதுன் றன்னைச்
சங்கரா! ஆர்கொலோ சதுரர்?

எனத் தம் 'சதுரப்பாடு' தோன்றப் பாடி விடுவ துண்டு. மேல்நோக்காகப் பார்ப்பவர்களுக்கு வேறுபாடு எதுவுமே தெரியாது. மிகவும் உற் றுக் கவனித்தால்தான், இரண்டிற்கும் இடையே யுள்ள வேறுபாடும் எழுத்துநிலை மாற்றமும் விளங்கும். 'உ' 'எ' என்னும் இரண்டு எழுத் துக்கள் இங்குத் தம் நிலை மாறி விடுமாயின், பொருள் மருளாக — அர்த்தம் அனர்த்தமாக முடிந்தொழியும்.

''தந்தது (உ) ன் றன்னைக்
கொண்டது (எ)ன் றன்னை ''

என்பதற்கும்,

''தந்தது (எ)ன் றன்னைக்
கொண்டது (உ)ன் றன்னை''

என்பதற்கும் இடையே, மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடுண்டு. இவ்விரண்டில் முன் னையதே சரியான பாடம். பின்னது பிழை பாடுடையது.

## பொருள் வேறுபாடு

முன்னையதின்படி, தருதலும் கொள்ளு தலும் ஆகிய இருசெயல்களுமே இறைவன் செய்தவையாகும். பின்னையதின்படி, தந்ததும் கொண்டதும் ஆகிய இருசெயல்களும் மாணிக்க வாசகரே செய்தனவாக முடியும். உகர எகரங்கள் ஆகிய எழுத்துக்களின் நிலைமாற்றத் தால், இப்பொருள்மாற்றமும் ஏற்படுகின்றது. தமிழ் '' உயர்தனிச் செம்மொழி'' யாதலின், அதன் ஒவ்வோர் எழுத்தும் அமைப்பும் நுண்பொருள் உடையதாகும். எனவே, தமிழ்ப் பாடல்களிலுள்ள ஒருசிறு எழுத்தைத் தானும், நாம் நம் விருப்பம் போலெல்லாம் மாற்றுதல் கூடாது. தமிழ்ப் பாடல்களை நாம் எழுத்துப் பிழையறக் கற்றல் வேண்டும்.

''ஒருபிழைக்கா அரனார்முன்
உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணம் என்று
அறைவதும் அற்புதமாமே''

எனப் பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்துச் செய்யுளின் பகுதியை, ஈண்டு நாம் நினைவு கூர்தல் வேண்டும்.

''தந்தது (உ)ன் தன்னை... '' என்றால், ''நீ உன்னை எனக்குத் தந்தாய் ; நீ என்னை ஏற்றுக் கொண்டாய்'' எனப் பொருள்தரும்.

"தந்தது (எ)ன் தன்னை..." என்றால், "யான் என்னை உனக்குத் தந்தேன்; யான் உன்னை எனக்கு எடுத்துக்கொண்டேன்" எனப் பொருள் படும்.

## எல்லாம் இறைசெயல்

நமது திருமுறையாசிரியர்கள் பசுகரணங்கள் நீங்கிப் பதிகரணங்களைப் பெற்றுச் சிவமாந் தன்மைப் பெருவாழ்வு எய்தியவர்கள். சிவஞான முதிர்ச்சியில் தலைசிறந்து விளங்கியவர்கள். எனவே, அப்பெருமக்கள் தமக்கென ஒரு செயலும் உடையர் அல்லர்! "எல்லாம் சிவன் செயல்" என்று உணரப் பெற்றவர்களாதலின், அவர்கள் எதனையும் "நான் செய்தேன்" என்று எண்ணுவதில்லை. 'நான் செய்தேன்' 'பிறர் செய்தார்' 'எனது' 'யான்' என்னும் இக் கோணை, ஞான எரியால் வெதுப்பி நிமிர்த்துத் தாம் செவ்வே நிற்பவர்கள் தாம் சிவஞானிகள் ஆவர். அத்தகையோர்க்கே இறைவன் நேரே தனையளித்து நிற்பன், வினை ஒளித்திட்டோடும்.

"நான்செய்தேன் எனும் அவர்க்குத்
தான் அங்கு இன்றி
நண்ணுவிக்கும் போகத்தைப்
பண்ணுவிக்கும் கன்மம்."

—சித்தியார் 305.

'நம் செயல் ஒன்றும் இல்லை. 'எல்லாம் இறை செயல்' என்னும் உணர்வு வரப் பெற்றால் தான், நாம் ஞானநிலை எய்தப் பெறுவோம். அப்போது தான் இறைவன் தன்னை நமக்குத் தந்து, நம்மில் அவன் உறையத் தலைப்படுகின்றான்.

"நம்செயல் அற்றிந்த நாம்அற்ற பின், நாதன்
தன்செயல் தானேஎன் றுந்தீபற
தன்னையே தந்தான்என் றுந்தீபற"

—திருவுந்தியார்.

## செயல் மாண்ட சிறப்பு

மாணிக்கவாசகர் ஞானப் பெருந்தலைவர். அவர் தம்செயலை யெலாம் இழந்து, எல்லாம் சிவன் செயலேயாகத் தெளிந்து கைவந்தவர். முன் பெல்லாம் உலகியல் நிலையில் இருந்த போது, அவரும் கூட 'நான் இதனைச் செய்தேன்' 'அதனைச் செய்தேன்' என்று எண்ணியிருந்தாராம். ஆனால் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற பிறகு, அவருக்கு 'என்னுடைய செயல் இது' என்ற உணர்வு அறவே மாண்டு அகன்றொழிந்து விட்டதாம். மணிவாசகர் பெற்ற சிவஞான முதிர்ச்சியின் சிறப்பினை விளக்கும் செய்தி இது! இச் செய்தியினை அவரே பின்வருமாறு பாடியருள்கின்றார்!

கயல்மாண்ட கண்ணிதன் பங்கன்
எனைக் கலந்து ஆண்டலுமே
அயல் மாண்டு, அருவினைச் சுற்றமும்
மாண்டு, அவனியின் மேல்
மயல்மாண்டு, மற்றுள்ள வாசகம்
மாண்டு, என்னுடைய
செயல்மாண்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ

—திருவாசகம்.

## அஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

'இறைவன் என்னைக் கலந்து ஆண்டு கொண்ட உடனே, என்னுடைய செயல் மாண்டது' என்று பாடியருளும் மாணிக்கவாசகர், இறைவன் தன்னைத் தமக்குத் தந்ததும், தம்மை இறைவன் தன்பால் ஏற்றுக் கொண்டதும் ஆகிய இரு செயல்களுமே இறைவனாற் செய்யப் பெற்றவை என்னும் கருத்தில்,

"தந்தது (உ)ன் றன்னைக்
கொண்டது (எ)ன் றன்னை"

எனப் பாடியிருப்பரே யன்றி, தந்ததும் கொண்டதும் ஆகிய இரு செயல்களும் தாம் செய்தனவாகப் பொருள்படும்படி,

"தந்தது (எ)ன் றன்னை
கொண்டது (உ)ன் றன்னை"

எனப் பாடியிருத்தல் இயலாது. அங்ஙனம் பாடியிருந்திருப்பின், அஃது அஞ்ஞான நிலையைக்

# சேக்கிழார் விளக்கும் செம்பொருள்

## முன்னுரை

தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானுக்குப் பலசிறச் சிறப்புகள் உண்டு. சேக்கிழார் பெருமானின் வாயிலாகவே, நாம் நமது சைவ பரிபாடைச் சொற்களையும் சிறந்த சம்பிரதாய ஒழுக்கங்களையும் தெரிந்துகொள்ளப் பெறுகின்றோம்.

"பார்கொண்ட **தொண்டர்வரலாறு** சொல்புராணம் அம்பலவர் அருளால் அமைந்தபடி தெரித்திட, **உலகெலாம்** எனும் சுருதி நாப்பண்ணும் ஈற்றும் பொருத்திப் பேர்கொண்ட **சைவபரிபாடை** அறிவரிய **சம்பிரதாயம்** முதல் யாவும் பிறங்கத் தெரித்து எம்மை ஆண்ட குன்றைப் பிரான்" என வரும் சேக்கிழார் பிள்ளைத் தமிழ்ச் செய்யுள் இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும்.

## சேக்கிழார் சிறப்பு

இது பற்றியே சேக்கிழார் பெருமானை நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், ஞானசிரியர் எனப் பலவகைகளில் அறிஞர்கள் புகழ்ந்து போற்றுகின்றனர்.

"நாடிய விரிநூல் சொற்றிடு திறனுல் நல் **நூலாசிரியன்**; நகு பாசுரம் முதல் உரை செய்தலினுல் நவில் **உரையாசிரியன்**; நீடிய பரசமயக் குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனைசெய் நிலையாற் **போதகா**

---

(60-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுவதாகுமேயன்றி, மெய்ஞ்ஞான நிலையினை உணர்த்துவ தாகாது.

## அதிகாரம் இல்லை

'உ' 'எ' என்னும் இரண்டு சிறு எழுத்துகளின் நிலை மாற்றத்தால், எத்தகைய விபரீதப்பொருள் நேர்ந்து விடுகின்றது என்பதனை மெய்யன்பர்கள் கருத்தில் இருத்துதல் வேண்டும். திருமுறைப் பாடல்கள் போன்ற தெய்விக நூல்களில், ஓர் எழுத்தைக் கூட்டவோ குறைக்கவோ மாற்றவோ நமக்கு அதிகாரம் இல்லை.

"ஆயக் கடவேன் நானேதான்?
என்னதோ இங்கு அதிகாரம்?"

என மணிவாசகர் பாடியிருத்தல் காணலாம். எனவே, திருமுறைகளில் வரும் ஒவ்வொரு சொல்லையும் எழுத்தையும்கூட, நாம் செவ்விதின் ஊன்றிக் கவனித்து உணர்ந்து ஓதுதல் வேண்டும் ... ... என்னும் கருத்துப்பட ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தம் சொற்பொழிவின் கண் செவ்விதின் அறிவுறுத்தி யருளினர். அவையினர் அனைவரும் அளவிலாப் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள்.

## முடிவுரை :

இச் சுவைமிகு செய்தி, தெய்விகப் பனுவல்களை ஓதி யுய்ய விரும்பும் நம்மனோர் உள்ளத்தில் என்றும் நின்று நிலைபெறுதற் குரியதாகும்.

தொகையாலும் வகையாலும் சொலமேற்கொள்
பொருள்விரித்துச் சுவைமிக் கோங்கும்
நகையோடு, பொருள்செறிந்த நல்லுவமை
நன்மேற்கோள் நயமும் காட்டித்
தகையாய வழக்கோடு, சாத்திரத்தின்
நுணுக்கங்கள் தகவிற் சாற்றித்
திகையாவும் ஒளிபரப்பும் திருப்புலிசை
ஞானியர்தான் சிந்தை செய்வாம்

—ஆசிரியர்.

சிரியன்; இவை நிகழ்தொறும் ஆடிய ஞானத்திறன் உறலால் ஞானசிரியனும் நீ என்று, ஆன்றோர் பலரும் புகழப்படுபவ! அகிலம் எலாம் சென்று கூடிய புகழ்சால் குன்றத்தூரன் கொட்டுக சப்பாணி! கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி!" என்று பாராட்டிப் பரவிப் பெருங்கவிஞர் **மீனாட்சி சுந்தரம் பிள்ளை** அவர்கள் மிக மகிழ்வுறுகின்றார்.

சேக்கிழார் பெருமான், திருமுறைகளை நன்கினிது பயின்று உணர்ந்தவர்களுள் தலைசிறந்த பெரும் புலவர். திருமுறைகளின் சீரிய செம்பொருள்களை விளக்கும் செயலினும், சேக்கிழார் சுவாமிகள் பெறலருந்திறன் பெற்றுயர்ந்தொளிர்ந்தவர்.

"அவையகம் வியக்கும் **முப்புலவர்** அருள் முக்கனி அருந்தமிழ்ச் சுவை யனைத்தும் ஆராய்ந்து எடுத்துப் பல் செய்யுள் முகமா அறிய அறிவித்த பெரு நாவலன்" எனவும்,

"**தமிழ்மறை** யடங்கு பல மந்தணமும் வெள்ளிடைத் தவிரும் வெற்பென விளங்க, வெப்பரிய முழுமதிக் குடை நிழற்று **அநபாயன்** மேய அவையகம் நயந்து வியந்து மெய்ப்பாட்டினொடு பாராட்டி மகிழ, மேல்மேல் விரித்தருளிய பிரான்! செப்பரிய **குன்றையம்பதி அருள் மொழித்தேவன்**" எனவும் வரும் பொருண்மொழிகளால், இவ்வுண்மையினை யாவரும் இனிதுணரலாம்.

சேக்கிழார் பெருமான் தெய்வம் மணக்கும் தமது பெரிய புராணத்தின் கண், பல தேவாரத் திருப்பாடல்களுக்குத் திருவருள், உணர்வு கொண்டு, தமது சீரிய கூரிய நுண்மாண் நுழை புலம் தோன்ற, அரிய பெரிய பொருள் விளக்கங்களைச் செய்தருளுகின்றார்.

தமது வாழ்நாள் முழுவதும் பெரிய புராணத்தினைப் பயின்றும் பயிலுவித்தும் மகிழ்ந்த பெருமை சான்ற பெருங்கவிஞர் ஏருகிய மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், அவற்றின் அருமை பெருமைகளையெல்லாம் உணர்ந்தே, "**நகுபாசுரம் முதல் உரைசெய்தலினால் நவில் உரையாசிரியன்**" எனத் திறந்தெரிந்து பாராட்டிச் சிறந்தெடுத்துப் புகழ்ந்து பாடினார். பாம்பின்கால் பாம்பன்றோ அறியும்?

### மண்ணில் நல்ல வண்ணம்

இங்ஙனம் சேக்கிழார் பெருமான் செம்பொருள் காட்டி விளக்கம் செய்தருளிய தேவாரத் திருப்பாடல்கள் பலவற்றுள், ஒன்றினை மட்டும் ஈண்டுக் குறிப்பிடுதல் சாலும்:

**"மண்ணில் நல்ல வண்ணம்**
**வாழலாம்; வைகலும்**
**எண்ணில் நல்ல கதிக்கு**
**யாதும் ஓர் குறைவிலை;**
**கண்ணில் நல்லஃது உறும்**
**கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும்**
**பெருந்தகை இருந்ததே"**

என்னும் தேவாரப் பாடல், சைவ மெய்யுணர்வு சிறிதேனும் உடையவர் யாவராயினும், அவர்கள் அனைவரும் அறிந்ததொன்று. திருமண அழைப்பிதழ்களிலும், திருமண நிகழ்ச்சிகளிலும் வாழ்த்துரை கூறும் காலங்களில், இத் தேவாரப் பாடலை இந்நாளில் எல்லோரும் மிகுதியாகப் பயன்படுத்திவருதல் மகிழ்தற்கு உரியது.

இப்பாடல் நம் அனைவராலும் நன்கினிது உணரப் பெற்ற தொன்றேயாயினும், இப்பாடல் சம்பந்தரால் எங்கே பாடப் பெற்றது என வினவினால், நம்மிற் பெரும்பாலோர் **கழுமலம்** என அப்பாடலில் வருவது கொண்டு, அது **சீர்காழியிற்** பாடப் பெற்றது எனவே விடை கூறுவோம். இந்தப்பாடல் திருஞானசம்பந்தப் பெருந்தகையால் எப்போது? எங்கு? எந்தச் சூழ்நிலையில்? பாடப் பெற்றது என்பதனை நாம் சிந்தித்துணர்ந்து கொள்ளப் பெருமையால், இங்ஙனம் நாம் தவறான விடையையே கூற முற்படுதல் இயல்பேயாகும்.

சேக்கிழார் சுவாமிகள் திருஞானசம்பந்தப் பெருந்தகையின் உணர்வினொடு, தம்முணர்வு ஒன்றி இயைந்து

நின்று உணர்ந்த அனுபவத்தினைத் தெய்வத் திருவருளாற் பெற்று, இத்திருப் பாடல் சம்பந்தர் **மதுரையில்** இருந்த போது பாடப் பெற்ற தென்றும், அதற் குரிய சூழ்நிலை இது வென்றும், நம்மனோர் உய்யத் தெருட்டி யருளுகின்றார். அத் திறம் அவர்க்கே யன்றிப் பிறர்கட்கும் இயலுங் கொல்?

## ஏகாரத்தின் பொருள்கள்

"**மண்ணில் நல்லவண்ணம்**" என்னும் தேவாரப் பாடல் மதுரையிற் பாடப் பெற்றது என்பதனைச் சேக்கிழார் பெருமான் எங்ஙனம் அறிந்தனர்? "பெண்ணில் நல்லாளொடும் **பெருந்தகை இருந்ததே**" எனவரும் அடியில் ஈற்றிலுள்ள ஏகாரமே, திருவருள் துணையினால் சேக்கிழார்க்கு அக் குறிப்பைப் (Clue) புலப்படுத்தியது.

> **"தேற்றம் வினவே பிரிநிலை எண்ணே**
> **ஈற்றசை இவ்வைந்து ஏகா ரம்மே"**

என்பது **தொல்காப்பியம்**. இதனோடு 'இசைநிறை' என்ற ஒன்றையும் சேர்த்து **ஏகாரப் பொருள்கள் ஆறு** என்பர் நன்னூல் இயற்றிய **பவணந்தி முனிவர்**.

'அவர்களுள் இவனே நல்லவன்' என்பது **பிரிநிலை**. 'நீயே இங்ஙனம் கூறினாய்?' என்பது **வினா**. 'இவனே அதனை எடுத்தான்' என்பது **தேற்றம்**. 'என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே' என்பது **ஈற்றசை**. 'நிலனே நீரே தீயே வளியே விசும்பே' என்பது **எண்**. 'ஏயே இவள் ஒருத்தி பேடியோ' என்பது **இசைநிறை**. ஏகார இடைச்சொற் குறிக்கும் இவ் ஆறு வகைப் பொருள்களுள், "பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என்னும் வரியின் இறுதியில் உள்ள ஏகாரம், **ஈற்றசை** (பொருளில்லாதது) எனவே நாமெல்லாம் பெரும்பாலும் கொள்வோம். ஆனால், சேக்கிழார் சுவாமிகளோ திருவருளின் துணையால், அது வேறு பொருள் குறிப்பது என உணர்ந்து கொண்டு, நமக்கும் விளக்கிக் காட்டியருளியிருக்கின்றார்:

## சிவபாத இருதயர்

திருஞான சம்பந்தப் பெருமான் பாண்டி நாட்டில் சிவநெறியைச் செழிப்பித்துத் திருநீற்றொளி பரப்பி, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மகிழ்ந்து வணங்க, மதுரையின்கண் அரசாங்க விருந்தினராகச் சிலநாள் தங்கியிருந்தார்.

அப்போது தம் அருமைத் தவப்புதல்வரின் பிரிவைத் தாங்கலாற்றாத **சிவபாத இருதயர்**, அவரைக் காணுதற்குக் கழி பெரு வேட்கை மீதூர்ந்து, பாண்டி நாடு நோக்கிப் புறப்பட்டு மதுரையைச் சென்று அடைந்தார். மதுரையில் திருஞான சம்பந்தர் தங்கி யிருந்த திருமடத்தை வினவித் தெரிந்து கொண்டு தேடியடைந்தார். அங்கிருந்த அன்பர்கள் அவரை வணங்கி வரவேற்று, அவர்தம் வரவினைத் திருஞான சம்பந்தருக்கு மகிழ்ச்சியுடன் அறிவித்தனர்.

பெருமான் அதுகேட்டு "**எப்பொழுது வந்தருளிற்று?**" என வினவி எதிர் எழுந்தருளினர். சிவபாத இருதயர் முன் தொழுது சென்றணைந்தார். பெருமான் அவரை எதிர் தொழுது மகிழ்ந்தார்.

உலகியல் தந்தையைக் கண்ட திருஞான சம்பந்தருக்குத் தம்முடைய அருளியல் தந்தையின் நினைவு எழுந்தது. தம் "**தாயும் தந்தையும்**" நலமா? என்று உசாவி யறியும் வேட்கை அவர்பால் மிக்கெழுந்தது. ஏனைய உயிர்கட்கெல்லாம் பொதுவாக அம்மையப்பனாய் விளங்கும் இறைவன், திருஞான சம்பந்தர் திறத்தில் உண்மையிலேயே அம்மை அப்பனாய் எழுந்தருளி, இளங் குழவிப் பருவத்திற்றானே ஆண்டு கொண்டு தண்ணளி புரிந்தனன் அல்லனோ? அத்தகைய அம்மையப்பரின் நலத்தை வினவியறிய அவருள்ளம் விரைந்தது. அம் மன எழுச்சியால், பெருமான் சிவபாத இருதயரை நோக்கி,

> **"அருந்தவத்தீர்! எனையறியாப்**
> **பருவத்தே எடுத்தாண்ட**
> **பெருந்தகை, எம்பெருமாட்டி**
> **யுடன் இருந்ததே?"**

எனத் திருப்பதிகம் போற்றிசைத்தார். அத் திருப்பதிகமே "மண்ணில் நல்ல வண்ணம்" எனத் தொடங்குவதாகும். அத்திருப்பதிகம் இத்தகைய ஒரு பொருந்திய சூழ் நிலையிலேயே திருந்த அருளிச் செய்யப்பட்டது என்பதனைச் சேக்கிழார் பெருமான், "காலம் இடையிட்ட வற்றையும், தேயம் இடையிட்ட வற்றையும் காணும் ஞானக்கண்" (Intuition) கொண்டு, திருவருள் துணையால் உணர்ந்து நமக்கும் உணர்த்தி யருள்கின்றார்.

## வினைப் பொருள்

திருஞானசம்பந்தரின் உணர்வோடு, சேக்கிழார்பெருமானின் உணர்வும் ஒன்றி இயைந்து நின்று தினைத்திருந்தா லன்றி, இச் சூழ்நிலையை அவர் இனிதுணர்ந் திருத்தல் இயலுமோ? சேக்கிழாருக்கு இச் சூழ்நிலையின் பெற்றி யுணர்தற்குப் பெரிதும் உதவியது, "பெருந்தகை இருந் ததே" எனவரும் ஈற்றடியில் உள்ள ஏகாரமே யாகும். நம்போன்றோர் அவ்வேகாரத்தினை "ஈற்றசை" என்றோ "பிற" என்றோ எளிதாக எண்ணி, எள்ளித் தள்ளிவிடுவோம். ஆனால், சேக்கிழார் பெருமான் தேவாரத் திருப்பாடல்களில் ஒரு சிறு எழுத்தினையும் பொருளற்ற தெனப் புறக்கணிக்க உள்ளம் ஒருப்படுவரோ? சேக்கிழார் அவ் வேகாரத்தினை வினைப்பொருள் குறித்ததெ‌ன நுண்ணி தின் எண்ணி யுணர்ந்தார்.

"மண்ணின்நல்ல என்றெடுத்து
மனத்தெழுந்த பெருமகிழ்ச்சி
உண்ணிறைந்த காதலினுல்
கண்ணருவி பாய்ந்தொழுக
அண்ணலார் தமைவினவித்
திருப்பதிகம் அருள்செய்தார்
தண்ணறும்பூஞ் செங்கமலத்
தார்அணிந்த தமிழ்விரகர்"

எனத் தாம் நுண்ணிதின் எண்ணி யுணர்ந்த செம்பொருளைச் சேக்கிழார், நாமும் உணர்ந்து மகிழ விளக்கி யிருத்தல் காணலாம்.

இச் செய்யுளின்கண் "அண்ணலார் தமை வினவித் திருப்பதிகம் அருள் செய்தார்" எனவரும் வரியில் அமைந்துள்ள வினவி என்னும் ஒரு சொல்லே மிகவும் உயிர்ப்புடையதாய்,அத் திருப்பதிகத்தின் கருத்து முழுவதனையும் சுருக்கித் தொகுத்துத் திரட்டி யுணர்த்தி நிற்கின்றது. இங்ஙனம் இங்கு ஏகாரம் வினைப் பொருள் பயந்து வந்தது என்பதனைக் குறிப்பதற்கு வினவி என்னும் ஒரு சொல்லைப் பெய்து, பொருளைத் தெளிவு படுத்தி யருளிய சேக்கிழாரின் அருமைப்பாடு அனைவரும் வியக்கத் தகுவது. அன்றியும்,

"போதையார் பொற்கிண்ணத்து
அடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத்
தானெனை ஆண்டவன்!
காதையார் குழையினன்
கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும்
பெருந்தகை இருந்ததே?"

என வரும் அத் திருப்பதிகப் பாடலின் கருத்தைத் தழுவி, அதன் குறிப்புப் பொழிப்புரை போல,

"அருந்தவத்தீர்! எனை அறியாப்
பருவத்தே எடுத்தாண்ட
பெருந்தகை,எம் பெருமாட்டி
யுடன் இருந்ததே"

என விரித்துரைத்து அருளிச் செய்திருக்கும் அழகு, நம்மனோர்க்கு ஆராப் பெரு விருந்தாய் அமைகின்றது.

## முடிவுரை

சேக்கிழார் பெருமான் விளக்கியருளும் இன்னோரன்ன செம்பொருள்கள் பலவற்றையும் தெளிந்துணர்ந்து உய்ய, நாம் அனைவரும் திருவருளை வழுத்துவோமாக!

---

[திரிபுவனம் மகா கும்பாபிஷேக விழாவில் நிகழ்ந்த பன்னிரு திருமுறை மாநாட்டில், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் திருமுன்னிலையில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம். (4-9-68) —ஆசிரியர்]

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

( முன் இதழ்த் தொடர்ச்சி )

பெற்றவர் அருகே நின்ற பெரிய நம்பிகளை நோக்கி "ஸ்வாமீ! பெரியார்க் காட்பட்டக் கால் பெருதபயன் பெறுமாறு" என்று ஆழ்வார் ஸாதித்தது அடியேன் விஷயத்தில் எவ்வளவு உண்மை! தேவரீருடைய திருவடி சம்பந்தம் கிட்டியிருக்கையாலேயே பெரிய பெருமாள் அடியேனை இவ்விதம் வாழ்வித்து அவ்வுண்மையைக் காட்டியருளினார் என்று வினயத்தோடு கூறினார்.

பெரிய நம்பிகள் இராமாநுசரை மார்போடு அணைத்துக்கொண்டு "கலியும் கெடும் கண்டு கொண்மின்" என்று அன்று ஆழ்வார் மேல் வரும் பொருளாக உரைத்தது இன்று வெளிப்படையாயிற்று, உடையவரே! என்றதும் அக் கோஷ்டியிலிருந்து அனைவரும் அப்பெயரைப் பன்முறை உரக்க விளித்து ஆனந்தக் கூத்தாடி அகமகிழ் வெய்தினர். பின் பெரிய நம்பிகள் இராமாநுசரை நோக்கி "உடையவரே! இனி பெருமாள் நியமனப்படி காரியம் ஆராய்ந்தருளப் பாரீர்" என்று கூற மற்ற முதலிகளும் "கோயிலிலுள்ள நிறைவு குறைவுகளை யெல்லாம் தேவரீர் ஆராய்ந்து பணி கொள்ள வேணும். இப்படி எழுந்தருள்க" என்று பிரார்த்தித்து அவரைப் பெரிய திருமண்டபத்துக்கு எழுந்தருள் வித்தனர்.

உடையவரும் பெரிய திருமண்டபத்தில் தினமும் எழுந்தருளி இருந்து கூரத்தாழ்வான், முதலியாண்டான் இவர்களுடன் திருவரங்கன் கருவூல அறைகள் பலவற்றையும் திறக்கச் செய்து அவற்றிலுள்ள இக்ஷ்வாகு காலம் தொடங்கி அன்றளவும் புண்ணியாத்மாக்களால் அரங்கனுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட, திருவாபரணங்களனைத்தையும் நன்கு கடாக்ஷித்து அவற்றிலுள்ள நவரத்தினங்களையும் ஆராய்ந்து சோதித்து மறுவுற்றவைகளை அகற்றி நல்லவை பதிப்பித்து எல்லா அணிகளையும் புதுக்கினார். அவையத்தனையையும் கணக்கிட்டு உரிய காவலரிடத்தே ஒப்படைத்தார். பெருமாள் திருவரங்க நாயகி மற்றைய எம் பெருமான்கள் இவர்களுக் கணியப்பெறும் பட்டு, சேலை, பீதாம்பரம் உத்தரீயம் முதலிய யாவற்றையும் நன்கு நோக்கிச் சிதைந்தவை நீக்கிச் செப்பம் செய்தார். இதேபோன்று மணி விளக்கு, கத்தூரி சந்தனம் முதலிய கலவைகள் பலவும் விழிகளால் நோக்கிக் கண்டதில் தீமைகள் கடிந்தார். நலமுற விளங்கும் மண்டபம் பலவும் நாடிமற்றவை புதுக்கிடுவான் செலவுகள் கொடுத்துத் திருமடைப்பள்ளி அனைத்தையும் திருந்துற நோக்கிப் புதுப்பித்தார். திருமதில் முழுதும் நோக்கிப் பழகின புதுக்கினார். கோபுரங்களைப் பரிசீலித்து அங்கு ஆக்கிய உருவங்களில் அழிந்தவை சமைத்து அலங்கரித்தார். மற்றும் தோப்புகள், பொய்கைகள் நந்தவனங்கள் முதலியவற்றை நேரே போய்ப்பார்த்து அவற்றிலுள்ள குறைபாடுகளையெல்லாம் களைந்தார். பாணர், கவிஞர், மற்றும் பல்வகை வாச்சியம் வாசிப்போர் மற்றும் கோயில் கைங்கர்யங்களில் ஈடுபட்டோர் அனைவரையும் அவரவர் துறைகளிலே சோதனை பண்ணித் தகுதி யற்றவரைநீக்கி, தகுதியற்றவராய் முன் அகற்றப்பட்டவரை மீண்டும் வருவித்து அவரவரை அவ்வவர் துறையிலே நிறுத்தினார்.

இங்ஙனம் உடையவர் திருவரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்து வாழும்

நாளிலே ஒருநாள், முன்பு இராமாநுஜராலே கச்சியினின்றும் வேங்கடத்துப் பெரிய திருமலை நம்பியிடம் வட்டமணி கோவிந்தபட்டரை அல்வழியினின்றும் மீட்டு நல்வழிப் படுத்தி யருளும்படி ஸ்ரீ முகத்தோடு அனுப்பப் பட்ட வைஷ்ணவர் தம்முகத்திலே ஒரு வெற்றியொளி வீசவந்து உடையவர் திருவடிகளிலே தெண்ட னிட்டு நின்றார். உடையவரும் அவரை இனங் கண்டு அவர் முகப் பொலிவை நோக்கி நாம் இவரை அனுப்பிய காரியம் வெற்றியாயிருக்க வேண்டும் என்று நிச்சயித்தார். பின் அவரை முகமன் வினவி “ஸ்வாமீ! எப்பொழுது எழுந் தருளினீர்? அங்கே வேங்கடவன் காரிய மெல்லாம் செவ்வனே நடைபெறுகின்றனவா? பெரிய திருமலை நம்பிகள் திருமேனி பாங்காக எழுந்தருளி யிருக்கின்றனரா? என்றெல்லாம் நலம் வினவிப் பின் “ஆமாம்! தேவரீர் போன காரியம் என்னவாயிற்று?” எனக்கேட்டார். ஸ்ரீ வைஷ்ணவரும் ‘யாவும் நலமே! அடியேன் போன காரியத்தைக் கூறுகிறேன், விரிவாகக் கேட்டருள வேணும்’ என்று கூறத் தொடங் கினார்.

அடியேன் தேவரீர் ஸ்ரீ முகத்தோடு போய் நம்பியைத் தண்டம் ஸமர்ப்பித்தேன். அவர் அதனை வாங்கி நோக்கி “இது நாமே செய்யக் கடவதாயிற்றே. நாம் செய்யவேண்டியதை இதுவரை செய்யாததை இந்த ஸ்ரீ முகம் எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதாய்த் தோன்றி நம்மை எழுப்பியிருக்கிறது போலும்”! என்று தேவரீருடைய யோசனையை மிகவும் உகந்து தம் ஸ்ரீ பாதத்து முதலிகளுடனும் அடியேனுடனும் எழுந்தருளினார். அனைவரும் காளத்திபோய்ச் சேர்ந்து அங்கே ஒரு குளக் கரையிலே தங்கியிருந்தோம். கொஞ்சநேரம் செல்லவே உள்ளங்கை கொணர்ந்த நயினார் (கோவிந்தபட்டர்) சிவாபிஷேகத்துக்கு நீரெ டுத்து வருவதற்காக ஒரு குடமும் கையுமாக ஏதோ சில சுலோகங்களை முணுமுணுத்துக் கொண்டே வந்தார். எங்க ளனைவரையும் சற்றுத் தூரத்தே கண்டவர் நிறுத்தி எங்கள் பக்கமாக எங்களைப்பார்த்தபடியே சென்றார். பெரியதிருமலைநம்பி அவரைநோக்கிக் “கொன் றைமுடியானைக் குளிர நீராட்டினால் என்னுனக் குண்டாம் பயன்?” என்று வினவ, அவர்தம் முகத்தே ஐயக் குறிதோன்ற நம்பியை ஏறிட்டு நோக்கிச்சற்று நின்று பின் ஒன்றும் பேசாது போய் விட்டார். பெரிய திருமலை நம்பிகள் தம் மனத்தே ஏதோ எண்ண மிட்டவராய் “அவன் செய்யும் சேமத்தை எண்ணித் தெளி வுற்ற” சிந்தை யராய் எங்களனைவரையும் அழைத்துக்கொண்டு திருமலைக் கெழுந்தருளி விட்டார்.

சில நாள் கழித்து மீண்டும் நம்பிகள் எங்களை அழைத்துக் கொண்டு காளத்தி போனார். அன்றும் முன்பு சொன்னகுளத் தருகே ஒருமரத்தடியில் தங்கியிருந்தோம். நயினார் வரவு நோக்கினோம். கொஞ்சம் கழித்து முன்னாள் போல் அவர் நீர் கொணரக் குடத் தோடுவர நம்பிகள் கண்டு ஒரு கணம் எண்ண மிட்டார். மறுகணம் “என்மனம் சூழ வரு வானாய் உறங்குவான்போல் யோகு செய்வான் தானே உணர்வைப்பெற ஊர்ந்து அவனுறங்கு கின்றானே” என்று கூறிக் கொண்டே ஒரு ஓலை நறுக்கில் தம்முடைய பரமாசார்ய திவ்ய சூக்தியிலுள்ள “ஸ்வாபாவிகா நவதிகாதிசயே சித்ருத்வம்” என்ற சுலோகத்தை எழுதி நயினார் வரும் வழியிலே இடுவித் திருந்தார். அவ் வழியே வந்த நயினாரும் வழியில் கிடந்த நறுக்கை எடுத்து வாசித்துப் பார்த்துக் கொண்டே சென்று அதனை ஒருபுறத்தே போட்டுவிட்டுக் குளத்துக்குப் போய்விட்டார். நீரெடுத்துத் திரும்புகையில் என்ன நினைத் தனரோ? தாம் முன்பு எறிந்த விடத்தே தேடி அந்த நறுக்கை மீண்டும் எடுத்தார். படித்தார். படித்துக்கொண்டே எங்கள் பக்கல் வந்தார். வந்ததும் நம்பிகளை நோக்கி அவ்வோலை நறுக்கை நீட்டி “இது உங்கள் கையிலிருந்து நழுவின பொருளாக இருக்குமோ?” என்று கேட்டார். அவர் வாய்திறந்து கேட்பதை எதிர் பார்த்தே இருந்தவர் போன்று நம்பி அவர் வார்த்தைகளை வைத்தே “வேறு சிலர் பொருள் நழுவுமே அன்றி எங்களது நழுவும் பொருளல்ல” என்று பதி லிறுத்தார். நயினார் பண்டிதனாகையாலே நம்பி உரைத்த உட்பொருளை உணர்ந்தவனாய் அவ்விதப் பேச் சினின்றும் மெல்ல நழுவ நினைத்து “அது கிடக்கட்டும்! நீங்கள் எல்லோரும் ஓரிடத்திலே சேர்ந்திருக்கைக்கு அடி என்? என்று பேச்சை வேறு வகையாகத் திருப்ப முயன்றான். நம் பியோ ஓலையை அவன் பார்த்துப் பொருள் புரிந்து கொண்டான். நம் பொருள் நழுவு வதல்ல என்றதும் இப்பேச்சைமாற்றி நழுவ

எண்ணுகிறான். இப்போதே இவர் உள்ளத்தே உறைக்கும் படி செய்து விடவேண்டும் என்று அவன் வினாவிற்குப் பதிலாக "மார்க்கம் கலக்க மற்றிருக்கையாலே" என்றார். அவர் நம்பியின் எண்ணப்படியே தத்துவவிசாரத்திலே மனம் திரும்பியவனாய் "கேவலருக்கு மார்க்கமுண் டோ?" என்ன நம்பி "பொருள்கையுண்டாய்ச் செல்லுமவனுக்கு அடுப்பது இது வன்றோ!" என்றார். நயினார் மீண்டும் பேச்சைத்திருப்ப வுன்னி இப்போது உங்களில் யாரேனும் உறவி னரை வழிவிடவந்தீர்களோ? என்று கேட்க, நம்பியும் அவரைவிடாது "அதுவல்ல; கற வைகள் கொள்ள வந்தோம்" என்றார். நயினார் அநுஷ்டாதாக்களுக்குப் பசுபாத தூளி பவித்திர மன்றோ என்ன, நம்பி "அது இடமறிந்து நேர் படில் நல்லது" என்றார். அவர் "குறுக்கு நெடுக்காகில் பேதமென்ன?" என்ன, இவர் "செவ்வையிருக்கத் திர்யக் காகையே பேதம்" என்றார். நயினார் "இது புதிய வார்த்தைக் கட்டுகளோ?" என்ன, நம்பி பழைய வார்த் தைக் கட்டுகளும் இப்படியே என்றார். நயினார் "அப்படியாயின் இதில் பூர்வவிசாரம் வேண் டாவோ?" என்ன நம்பி "பரத்துவத்திலே காண் விசாரமிருப்பது" என்றார். நயினார் மேல் ஒன்றும் பேசாதவராய் நம்பியைப் பன் முறை ஏற இறங்கப் பார்த்துப் பின் நேரே தம்மிருப் பிடம் நோக்கிப் போயினார். ஆனால் அவர் போகும் போது அவ்வோலை நறுக்கும் அவ ரிடமே இருந்தமையாலும், வழியிலே பன்முறை தலையைப் பலவாறு அசைத்துச் சென்றமை யாலும், வழியே போகாமல் பன்முறை வழிதவறி இடறியமையாலும் அவர் உள்ளத்தே அவ் வோலை நறுக்கிலுள்ள சுலோகத்தையும், நம்பி களோடு அவர் செய்த சல்லாபங்களிலே சூத் ரங்கள் போன்று நம்பி உரைத்த வாக்குகளையும் பற்றி ஒரு தீவிர ஆராய்ச்சி நடைபெறுகிறதென் பதை நாங்கள் உணர்ந்தோம். நம்பியும் "அவர் உள்ளம் நெகிழ்ச்சியுற்று விட்டது இனி அவர் மீளுகை சாத்தியமே. அவர் ஆராய்ச்சி யிலேயே அவரைச்சில நாள் விட்டால் பண்டி தனுகையாலே தானே தெளிவு பெறுவார். இப்போது நாம் திருமலை செல்வோம்" என்று மீளவும் திருமலைக் கெழுந்தருளி விட்டார். ஸ்ரீ வைஷ்ணவர் சற்று நிறுத்தினார்.

இவற்றை எல்லாம் மிகவும் ஆர்வத்தோடும் ஆத்திரத்தோடும் கேட்டுவந்த இராமானுஜர் கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் நோக்கி "கேட்டீர்களா! கோவிந்தனுக்கு ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீ சூக்தி (சுலோகம்) நெஞ்சிலே உறைத்திருக்கிறது. ஆனால் வாய் மாத்திரத் திலே சில விதண்டா வாதங்கள் செய்ய முயன்றிருக்கின்றான். நம்பிகளின் பதில்களிலே உள்ளோடிய உண்மைப் பொருள்களின் சாயையை அவன் சாஸ்திர பண்டிதனா கையாலே உணர்ந்து கொண்டிருக்கின்றான். அதனால் தான் பதில் பேசாது போயிருக்க வேண்டும். "கூடஸ்தோக்ஷர உச்யதே: அமரர்கள் ஆதி முதல்வன்: தேஹீ ஸன்மார்க் கவர்த்தன: நெறிவாசல் தானேயாய் நின்றான்; கச்சிந்மாம் வேத்திதத்வத: யானே நீ என் உடைமையும் நீயே; ஞானேனவீன: பஹு பிஸ்ஸமான: என் நினைந்து போக்குவர் இப்போது; யேவாலலாட பலகேலஸதூர்த்துவ புண்ட்ரா: தவளப் பொடிக்கொண்டு நீறிட் டிடுமின்; ஊர்த்துவ புண்ட்ரம் த்வீஜாதீனும்! நீறுசெவ்வே இடக்காணில்; வேத மூலப் பிர மாணத்: மிக்கவே தியர், நால் வேதம்; நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே, நாராயணாத் ருத்ரோஜாயதே: நாராயணன் படைத்தான் நான் முகனை, நான்முகனும் தான் முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்." என்பன முதலிய இதிகாச புராணங்களிலேயும் ஆழ் வார்கள் சூக்திகளிலும் விவரிக்கப் பட்டிருக்கிற அர்த்தங்கள் எல்லாம் அவன் மனத்திலே ஓடி யிருக்கும் அல்லவா! அதனால்தான் அவன் நம்பிகள் கூறியதிற்குப் பதில் உரைக்காமல் போயிருக்கிறான். அப்படி அவன் போனதால் தான் "அவன் திரும்பும் வழியிலே வந்து விட்டான்" என்று நம்பியும் கூறியிருக்கிறார். என்று கூறி அந்த ஸ்ரீவைஷ்ணவரைப் பார்த்து "சரி மேல் நடந்ததைச் சொல்லும்" என்ன அவர் கூறுவாராயினார்.

சுவாமி! அந்த கோவிந்த பட்டருக்குத் தேவரீருடைய சம்பந்தம் இருக்கையில் ஏற்றம் பழுதாகுமோ! இனிமேல் நடந்ததைக் கூறு கிறேன். மற்றொரு நாள் நம்பிகள் மீண்டும் கோவிந்த பட்டரைக் காணத் திருவுள்ளமாகித் திருவேங்கடச் சிந்தா மணியைத் திருவடி தொழுது எங்களுடன் புறப்பட்டுக் காளத்தி போய் அங்கே அதன் எல்லை நிலத்தோப்பு ஒன்றிலே எழுந்தருளினார். அவர் ஆசனத்தே வீற்றிருக்க அடியேனும் முதலிகளும் சூழ

இருந்தோம். நம்பிகள் திருவாய்மொழி வியாக்கியானம் பிரசாதித் தருளினர். அங்கே பூக் கொய்யவந்த உள்ளங்கை நயினர் (கோவிந்த பட்டர்) ஒரு பாதிரி மரத்திலே ஏறி யிருந்தார். தற்செயலாக நம்பிகள் "திண்ணன் வீடு" என்ற திருவாய் மொழிக்கு அர்த்தம் அருளிச் செய்து கொண்டிருந்தார். மூன்று பாட்டுகள் ஆயின. முத்தமிழ் வித்தகரான நயினரும் மரத்திலிருந்தபடியே நம்பிகள் அருளிச் செய்த அர்த்தங்களைக் கேட்டுக் கொண்டே பூப்பறிக்கையைத் தவிர்ந்திருந்தார். அடுத்த பாட்டாகிய

"தேவும் எப்பொருளும் படைக்கப்
பூவில் நான் முகனைப் படைத்த
தேவன் எம்பெருமானுக் கல்லால்
பூவும் பூசனையும் தகுமே?"

என்ற பாசுரத்தை நம்பிகளும் நாங்களும் ஒரு மிடறாகச் சேவித்து முடித்ததும், நயினர் திடுமென மரத்திலிருந்து குதித்தார். தரித்திருந்த உருத்திராக்க மாலையையும் பிய்த்து வீசினர். "தகாது, தகாது" என்று கதறிக்கொண்டே அடைவுகெட வந்து நம்பி திருவடிகளிலே விழுந்து கிடந்தார். ஞான சூன்யனையும், நெறியற்றவனையும், துன்பக்கடலில் மூழ்கி உழல்கின்றேன். "நீசனேன் நிறை யொன்று மிலேன்" என்று புலம்பித் தன்வர்த்தமானத்தையெல்லாம் கூறுவாராயினர். ஐயோ! உபய விபூதிநிர்வாகத்திற்கு முடி சூடினவன் இருக்க, கல்லெடுத்துக் கல் மாரி காத்த கற்பகம் இருக்க, அகலகில்லேன் இறையும் என்று அலர் மேல் மங்கை உறைமார்பன் இருக்க, பீதகவாடைப் பிரானர் இருக்க அடியேன்,

'காணிலும் உருப்பொலார்
செவிக்கினாத கீர்த்தியார்
பேணிலும் வரந்தர மிடுக்கிலாத
தேவரை ஆணம் என்றடைந்து'

என் வாழ்வை அவம் போக்கி விட்டேனே! பெருமலராகிய பெருந்துழாய் வனம் இருக்கப் பெருங்குடம் இருகையால் எடுத்துப் பேய்ச் சுரைக்கல்லவா இதுவரை நீர் வார்த்தேன்! சுவாமீ! அடியேனை "உய்விப்பேன்" என்று தேவரீர் வாக்களித்தால் தான் தேவரீர் திருவடியை விடுவேன்" என்று நம்பிகள் திருவடியைப் பற்றிக்கொண்டு கிடந்தார். நம்பியும் எங்கள் முகநோக்கி "சுத்தியோகம் உண்டான படிகண்டீரே! ஸ்ரீ ஆளவந்தார் கிருபை பண்ணும் படிக்கு ஒன்றும் குறைவில்லை" என்று அருளிச் செய்துகொண்டே நயினரைப் பிடித்தெடுத்து அவர் உடம்பைத் தடவி ஸ்பர்சதீக்ஷை அளித்து, இன்சொல் முகமன் கூறி அவரை குளிரக் கடாக்ஷித்து, அவருக்கு அபயப் பிரதானம் அளித்து, அவரோடு அளவளாவிக் கொண்டிருந்தார். இச் செய்தியைக் காளத்தியிலுள்ளார்கேட்டு பெருந்திரளாக நம்பிகளிடம் வந்து "இங்ஙனம் இவரை அம்மான் பொடியிட அடுக்குமோ? (சொக்குப் பொடியிட அடுக்குமோ? (சொக்குப் பொடியிட்டு மயக்குதல்) என்ன, நம்பியும் "எங்கள் வழி தனிச் சிறப்புடையது. நாங்கள் அசல் வழி வருகிறோம் அல்லோம். பொடியிடுதல் எங்கள் தொழில் அல்ல. வேண்டுமானல் உங்கள் நயினரையே கேட்டுக் கொள்ளுங்கோள்" என்று நிதானமாகப் பதில் கூறினர். அவர்களும் "வாரும் நயினரே" என்று நயினர் கையைப் பிடிக்க, அவர் பிடித்த கைகளை உதறித்தள்ளி நம் கையை நீங்கள் பிடிக்கவாவது! இனி, உங்களுக்கும் எனக்கும் பிணையில்லை!" என்று வெறுப்புடன் கூறிக் காளத்தி கோயிலின் கருவூலத்திறவு கோல், இலச்சினை மோதிரம் முதலிய எல்லா சம்பந்தத்தையும் அவர்கள்பால் எறிந்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார். காளத்தி சைவர்களும் நயினரைத்திரும்ப அழைக்கலாம் என்ற ஆசை அழிந்து நம்பியை நோக்கி "நேற்றே இச் செய்தியைக் கேட்டு தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்யாதே எங்கள் பிரான் வழிக்கு வருவான் ஏன்? என்று உங்களுடனே இன்று சண்டைக்கு வருவதாக நிச்சயித்து இருந்தோம். ஆனல் இரவில் காளத்தி நாதர் எங்கள் கனவிலே வந்து" பௌத்தர் முதலிய புறச்சமயிகளாலே வேதசாஸ்திரங்கள் மறைக்கப்பட்டு நிற்க, அந்நாஸ்திகத்தை அழிக்கைக்கு "க்வசித் க்வசித் மஹாபாகா:" (அங்கங்கே சில பெரியோர் தோன்றுவர்) என்று புராணம் கூறியபடியும், "தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய" (அறந்தலை நிறுத்தவும்) என்று ஸர்வேசுவரன் பணித்தபடியும் "கலியும் கெடும் கண்டு கொண்மின்" என்று ஆழ்வார் அருளியபடியும், இளையாழ்வார், யமுனைத்

# கண்ணுயிருப்பவன் கண்ணன்

திரு. வித்வான். V. S. ஸ்ரீநிவாஸாசார்யார், மதுரை.

( முன் இதழ்த் தொடர்ச்சி )

மேலும், தெய்வப்புலவர் திருவள்ளுவரும், ''தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது கொல் தாமரைக் கண்ணுனுலகு'' என்ற குறளில் 'தாமரைக்கண்ணுன்' என்ற தொடரால் திருமாலின் கண்ணழகைக் கூறியிருக்கிருர், இவற்றிற் கெல்லாம் ஆதாரமாக வேதமும் ''கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ'' என்ற வாக்கியத்தால் ''அப்பொழுதலர்ந்த தாமரை மலரோடு ஒருபுடை ஒப்புச் சொல்லலாம் படி அழகான கண்ணழ குடையவன் பகவான்'' என்று கூறியிருக்கிறது.

பகவானுக்குரிய இத்தகைய கண்ணழகுடைய பெருமையையே ''கண்ணன்'' சொல்லால் ஆழ்வார் பல இடங்களில் அருளிச் செய்திருக்கின்ருர் என்பதும், ஆகவே இச்சொல்லுக்கு இப்படியும் ஒரு பொருள் உண்டு என்பதும் இதனுல் விளக்கப்பட்டதாயிற்று.

## 5. கண்ணுக்கு இனியன் கண்ணன்

இனி, கண்ணுக்கு இனியன் கண்ணன் என்ற பொருளும் உண்டு என்பதுபற்றி நோக்குவோம். கண்ணுக்கு இனிமையா யிருத்தலாவது ''எப்போதும் அவனையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். அவனைக் காணுதபோது கண் ஒருவகையாக அழிந்தே விடும்'' என்று

---

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை ... ...

துறைவர்; கோவிந்தபட்டர், கூரத்தாழ்வான் முதலியாண்டான் ஆகிய இவர்கள் அநந்த சேஷாசன வைநதேய சங்கசக்ர அம்சங்களாக ஞாலத்தில் அவதரித்து மற்றும் இப்படியே பிறசின்னங்களும் அவதரித்து இருப்பது பகவதாக்ஞைப்படி நமக்குப்பிரியமானது ஒன்று தான். ஆனுல் கோவிந்த பட்டருக்கு, முன்பு காசியில் வாசம் செய்யும் விருப்பு ஒரு சிறிது இருந்தபடியாலே அந்த புத்தியைத் தவிர்க்கைக்கு நாமே உள்ளங்கை கொணர்ந்த வியாஜமிட்டு இங்கு அழைத்து வந்ததொழிய மற்றில்லை என்று அருளினுர். அது உண்மையாகவே முடிந்து விட்டது. உங்களுடையவர் உங்களுடன் சேர்ந்தார்'' என்று சொல்லி மனத் தாங்கலோடு திரும்பிப் போனுர்கள். இச்செய்தியைக் கேட்ட கோவிந்தபட்டர் மனைவியும் அங்கு ஓடோடியும் வந்து நம்பிகள் திருவடிகளிலே தண்டம்சமர்ப்பித்து நின்ருள். நம்பிகள் கோவிந்த பட்டரையும், அவர் மனைவியையும் கூட்டிக் கொண்டு திருமலைக்கு எழுந்தருளிக் கோவிந்தருக்கு உடனேயே உபநயநாதிகளைச் செய்வித்து நெடு மாலருவி சமீபத்துக் குளக்கரையிலே அவ்விருவருக்கும்பஞ்சசம்ஸ்காரமும் செய்வித்தார். பின்னர் நம்பிகள் கோவிந்த பட்டருக்கு திருப்பல்லாண்டு தொடக்கமான ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்த அர்த்தங்களை ஓதுவித்தார். கோவிந்தரும் அர்த்த பஞ்சக ஞானத்திலே தேறி நின்று தேவுமற்றறி யாதே, ஆசார்யன் திருவடிகளே கதியாக, ஒழிவில் காலமெல்லாம் நம்பி திருவடிகளிலே சிந்தையாலும், சொல்லாலும் செய்கையினுலும் வழுவிலா அடிமை செய்து கொண்டுகிருதார்த்தராய் இருக்கிருர். இவை அனைத்தையும் நேரிலே சேவித்தபடியாலே இந்நற் செய்தியைத் தேவரீரிடம் விண்ணப்பிக்க வேண்டும் என்று பெரிய திருமலை நம்பிகளிடம் விடை கொண்டு வந்தேன்'' என்று கூறி முடித்தார். உடையவரும் கூடியிருந்த முதலிகளும் இவ்வரலாற்றைக் கேட்டு நம் பெருமாளின் திருவருளை எண்ணி வியந்தனர். உடையவர் அந்த ஸ்ரீவைஷ்ணவருக்கு ஸ்ரீபாததீர்த்தம் சாதித்துக் கௌரவித்தார்.

( தொடரும் )

அவனிடத்தில் கண்ணுக்கு உண்டான ஈடு பாடேயாகும். இப்படிக் காண்போருடைய கண்ணுக்கு தர்சனியனுய் இருத்தல்பற்றி-அதாவது இனியனுயிருந்தல் பற்றி "கண்ணன்" என்றுவழங்குவதுண்டு என்பதற்குப்பாசுரங்கள் மூலம் ஆதாரங்களைக் காண்போம்.

ஆழ்வாருடைய கண்கள், எம்பெருமானைக் காணுதபோது படும்அலமாப்பைத் தெரிவிக்கும் பாசுரங்களைக் கண்டால், கண்ணுக்கு இனியனு யிருத்தல் பற்றியே அவனை காணப் பெருத போது கண்கள் அவ்வளவு துன்பப்படுகின்றன என்பது நன்கு புலனுகும். அப்படிப்பட்ட பாசுரங்களில் சிலவற்றைக் காண்போம்.

"காண்காண் என விரும்பும் கண்கள் கதிரிலகு
பூண்தா ரகலத்தான் பொன்மேனி" என்றும்,

"பைகொள் பாம்பேறி உறைபரனே! உன்னை
மெய்கொள்ளக் காண விரும்பும் என்கண்களே"
என்றும்,

"வெய்யார் சுடராழி சுரிசங்க மேந்தும்
கையா! உன்னைக் காணக்கருதும் என்கண்களே"
என்றும்,

'விளங்க ஒருநாள் காணவாராய் விண்மீதே' என்றும்,

'தாமரைநீள் வாசத்தடம்போல் வருவானே ஒருநாள் காண வாராயே' என்றும்,

'உன்னை எந்நாள் கண்டு கொள்வனே' என்றும்,

'கொண்டல் வண்ணு தொண்டனேன் உன் கழல் காணஒருநாள் வந்து தோன்ருயோ' என்றும்,

'கூவியும் காணப்பெறேன் உன்கோலமே' என்றும்,

'காரார் திருமேனி காணுமளவும்' என்றும்,

'அழைப்பன் திருவேங்கடத்தானைக்காண' என்றும்,

'என் கருமாணிக்கமே, என் கண்கட்குத் திண்கொள்ள ஒரு நாள் அருளாய் உன்திருவுருவே' என்றும்,

'கன்னலங்கட்டி தன்னைக் கனியை இன்னமுதம் தன்னை என்நலங் கொள்சுடரை என்று கொல்கண்கள் காண்பதுவே'

என்றும், வருகின்ற பாசுரங்களைக் கூர்ந்து கவனித்தால், ஒரோரு பாசுரத்திலும், ஆழ்வார் ஆறியிருந்தாலும் அவரது கண்கள் ஆறியிரா. அவை எம்பெருமானுடைய இனிமையை நன்கு அறிந்திருப்பன ஆதலால். அவரைவிட அதிகமாக விரைகின்றன என்ற கருத்துத் தெள்ளிதின் உணரப்படுகிறதல்லவா? இப்படி ஆழ்வார் கண்கள் எம்பெருமானது இனிமையை அறிந்து அவனைக்காணவிரையும் காரணத்தால் கண்ணுக்கு இனியன் என்பதை அறிந்தோம். இனி ஆழ்வாரே வெளிப்படையாகக் கண்ணுக்கு இனியன்என்பதையும் அதனுல் அவன் கண்ணு என்று அழைப்பதற்குரியவன் என்பதையும் ஒருவாறு வெளியிட்டிருக்கிருர். அதையும் காணலாம்.

காணுமாறரு ளாய்என்றென்றே
கலங்கிக் கண்ணநீர் அலமரவினையேன்
பேணுமாறெல்லாம் பேணி நின்
பெயரே பிதற்றுமாறரு ளெனக்கு அந்தோ
காணுமாற ருளாய் காகுத்தா
கண்ணு தொண்டனேன் கற்பகக்கனியே
பேணுவாரமுதே பெரிய தண்புனல்
சூழ் பெருநில மெடுத்த பேராளா

என்ற பாசுரத்தில் காணவேணும் என்றுதான் படும் அலமாப்பையும், அப்படிதான் அலமாப்பு அடைவதற்குக் காரணம் அவன் கண்ணுக்கு இனியனுயிருக்கிற தன்மையையும் ஆழ்வார் புதமாக வெளியிட்டிருக்கிருர்.

ஒருதரம் ஆர்த்தியோடு அவன் காலில் விழுந்து வேண்டிக்கொண்டதுபோல மீண்டும் மீண்டும் தொடர்ந்து நோற்ற நோன்பு முதலிய நான்கு திருவாய் மொழிகளில் ஆழ்வார் தொடர்ந்து சரணுகதி பண்ணினுர். அதனுலும் எம்பெருமானைக் காண முடியவில்லை. சரணுகதிக்கு மேலான உபாயம் வேறு இல்லை. இதுவே அவனைக் காணப் பலிக்கவில்லையே.

இனி நாம் அவனைக் காண முடியாது. காணு மல் உயிர்வாழ முடியாது. ஒருவகையாக நம் உயிரை விட்டிடுவோம் என்று துணிந்தவர் அதற்குச் சமானமான தூது விடுகையை அஞ் சிறை மடநாராய் முதலிய திருவாய் மொழி களிலும், மடலெடுத்தலை மாசறு சோதி முதலிய திருவாய் மொழிகளிலும் வெளிப்படுத்தினர். இவ்வாறு அவனைக் காண்பதற்குத்தான் கீழே பட்ட இந்நோவுகளை இப் பாசுரத்தில்வரும் கலங்கிக்கண்ணநீர் அலமர வினையேன் பேணு மாறெல்லாம் பேணி'' என்ற வாக்கியத்தால் உணர்த்தினர். இப்படி நோவு பட்டாவது கண்டு அனுபவிக்கவேண்டிய மிக மிக இனி யன் அவ்வெம்பெருமான் என்பதை, ''காகுத்தா! கண்ணு! தொண்டனேன் கற்பகக் கனியே! பேணுவாரமுதே!'' என்ற விளிக்கும் சொற்க ளால் உணர்த்தி யிருக்கிறுர். இப் பகுதியை மட்டும் சிறிது விரிவாய் அனுபவிப்போம்.

எம்பெருமானை நோக்கி விளித்துக் கூறும் சொற்களான காகுத்தா! கண்ணு! கற்பகக் கனியே! அமுதே! என்பவற்றிற்குத் தனித் தனியே சிறப்புப் பொருள் வேறுவேறு இருப்பி னும் எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒரு பொருள் சொல்ல வேணுமானுல் தர்சநீயன் அதாவது போக்யன் அதாவது இனியன் என்று சுருக்க மாகக் கூறலாம். இப்படியே வ்யாக்யானத்தி லும் ஆசாரியர்கள் ஒருவாறுகூறியிருக்கிறுர்கள். இக் கருத்தைத்தான் தமிழ் மொழிக்கேற்ப ''கண்களால் எப்பொழுதும் காணத் தகுந்த வன்'' என்றும் ''இனியன்'' என்றும் கூறி வரு கிறேம். கண்ணன் என்பதற்கு, தர்சநீயன் அதாவது கண்ணுக்கு இனியன் என்றபொருளை விளக்குவதற்காகவே இப் பாசுரத்தில் அமைந் திருக்கும் கண்ணு என்ற சொல்லுக்கு மேற் கோளாக இவ்விடத்தில் ஒரு ஸ்ரீராமாயண சுலோகத்தையும், ஸ்ரீபாகவத சுலோகத்தையும் எடுத்து அழகுறத் தெளிவுபடுத்தி யிருக்கி றுர்கள்.

அதாவது இராமபிரான் அரண்யம் சென்ற பொழுது அரண்யவாஸிகளான ரிஷிகள் இராம பிரானைப் பார்க்க வந்தார்கள், இராமபிரான் ஜடை, மரவுரி இவைகளை அணிந்து கொண் டிருந்தான். ஸாமுத்ரிகா லக்ஷணப்படி அமைந்த அவயவங்களோடு கூடின அவன் திருமேனி மிகவும் ஒளிவிட்டுக் கொண்டு மையோ, மரகதமோ, மறிகடலோ மழை முகிலோ என்றெல்லாம் நோக்கும்படி அமைந் திருந்தது. திருமேனியின் மென்மைத் தன்மை யைப் பார்த்தால், அஞ்ச வேண்டாத அவன் விஷயத்திலும் அவனுக்கு என்ன வருமோ? என்று அஞ்சுபவர்களான பிராட்டியும், இளைய வனும் சற்று நெருங்கிக் கண்ணுல் பார்த்தார் களானுல் அத்திருமேனி அவர்கள் பார்வை யையும் தாங்காமல் தீயில்பட்ட பூப்போல வாடி விடுமாம். இத்தன்மையைமென்மைஎன்பர். இப் படி தாமஸ வேஷம் சோபை, மென்மை இத்தன் மைகளோடு கூடின சுந்தர புருஷனுக இராம பிரானை, வனத்திலே சருகு இலை தின்று வாழும் ரிஷிகள் கண்டு உள்ளமும் உறுப்புக்களும் உருகி வியந்து காணுத பொருளைக் கண்டவர் போல் நின்றனர். இப்பொருளை,

**ரூபஸம்ஹநநம் லக்ஷ்மீம் ஸௌகுமார்யம் விசேஷத: |**
**தத்ருசு: விஸ்மிதாகாரா: ராமஸ்ய வநவாஸிந: ||**

என்கிற சுலோகத்தில் காணலாம்.

இப்படியே கிருஷ்ணுவதாரத்திலும் ஒரு நிகழ்ச்சி. பஞ்சலக்ஷம் கோபியரையும் பிரிய விட்டுக் கண்ணன் மறைந்திருக்கும் சமயம். கண்ணன் தீம்புகளுக்கு ஆளான கோபியர் அனைவரும் ஒன்று சேர்ந்து கண்ணனைத் தேடி அலைந்தார்கள் அப்பொழுது கண்ணனைப் பற்றி அவர்கள் உள்ளத்தில் கடுமையான கோபம் குடிகொண்டிருந்தது. ''இந்த சமயம் அத் தீம்பன் நம் முன்வருவானுயின் அவனை அப் படியேபிடித்துப் பொடி செய்து விடவேண்டும்'' என்று பற்களைக் கடித்துக் கொண்டு குமுறிக் கொண்டிருக்கிறுர்கள் கோபியர்கள். இந் நிலையில் அம்மாயக் கண்ணனும், புன்முறுவ லுடன் கூடின தாமரை மலர் போன்ற முகத் தையும், பீதாம்பரம், வனமாலை இவற்றை அணிந்த திருமேனியையும் உடையனுய், மன் மதனுக்கும் மன்மதனுகத் திடீர் என்று அக் கோபியர் கூட்டத்தில் தோன்றினுன். அப் பொழுது அவர்களிடம் குடிகொண்டிருந்த கோபம் போன இடம் தெரிய வில்லையாம். ''எழுதுங்கால் கோல்காணுக்கண்ணே போல் கொண்கன் பழிகாணேன் கண்ட இடத்து'' என்ற குறளில், ஒரு தலைவி பேசிய அனுபவம் தான் இவ்வரலாற்றிற்குப் பொருத்தமாகத் தெரிகிறது.

அதாவது ஒரு நாயகியிடம் அவள் தோழி சென்று "உன் நாயகன் உன்னை விட்டுப்பிரிந்து செல்வது போல் குறிப்புக்கள் தெரிகின்றன. அவன் கடியன்; கொடியன். இதையறிந்தும் நீ அவனிடத்தில் சினவாது நடக்கிருயே ஏன்" என்ருள். அதற்குத் தலைவி கூறினுள். "உண்மைதான். அவனைக் காணுதபோழ்து அவனுடைய தவறுகள் வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றன. அதனுல் சினம் உண்டாகிறது. ஆனுல் அப்படிப்பட்ட நாயகனைக்கண்முன் கண்டவுடன் அவனிடம் ஏற்பட்ட குற்றம் எனக்குத் தெரியவே இல்லை. அதனுல் அவனிடம் எனக்குக் கோபம் சிறிதும் உண்டாவதில்லை. நாம் கண்ணுக்கு மை தீட்டிக் கொள்கிருேமே. தோழி! முன்புள்ள பொருள்களை எல்லாம் காணும் நம் கண், கோலை மையில் தோய்த்துக் கண்ணில் இட்டுக் கொள்ளும் பொழுது கோலில் மையிருப்பினும் அம் மையைத் தெரிந்து கொள்ள முடிய வில்லையே! இது என்ன ஆச்சர்யம். கண்டாயா? அப்படித் தான் நம் தலைவர் குற்றமும் அவரைக் காணுத போது புலனுகி அவரைக் கண்ட போது கட் புலனுகாமல் மறைந்து விடுகிறது. ஆகையால் அவரிடம் எனக்குச் சினம் சிறிதும் உண்டாவதில்லை. இதற்கு நான் என்செய்வேன், என்று தலைவி கூறினுள்" என்பதாம்.

இப்படித்தான் கண்ணனிடம் கோபியர்க்கு உண்டான கோபமும் அவன் வடிவழகைக் கண்டதும் பறந்து விட்டது. ஆகவே மேற் கூறிய பாசுரத்தில் கண்ணு என்ற சொல்லுக்கு, கண்ணுக்கு இனிமையை உடையவன் என்ற பொருளை உணர்த்த இத்தனை மேற் கோள்கள் காட்டி, தண்டகாரண்ய ரிஷிகள் உன் அழகைக் கண்டு அனுபவித்தது போலவும், உன்னைக் காணப் பெருது நொந்த கோபியர்கள் உன்னைக் கண்டு வாழ்ந்தாற்போலவும் நானும் உன்னைக் கண்ணுரக் கண்டு அனுபவித்து வாழ வேண்டும். அவர்களுக்கு உன்னைக் காட்டியது போல் இப்பொழுது எனக்கும் உன்னைக்காட்ட வேண்டும். நீ காணத்தகுந்தவன். தர்சநீயன் என்ற கருத்தைச் சுருக்கமாகச் சிலவாய சொற்களில் அழகாக விரிவுரை வரைந்திருக் கின்ருர் ஆசார்யர்கள். இதனுல் கண்ணுக்கு இனியன் கண்ணன் என்பது தெளிவாகும்.

"கலந்து மணி இமைக்கும் கண்ணு!" என்ற பாசுரத்திலும் "அதிசயிதமான திருமேனி அழகால் (கண்ணுக்கு இனியனுனவனே!) தர்சநீயமானவனே!" என்ற பொருள் கொள்ளும் படி அமைந்திருப்பதும் அனுபவித் தற்கு உரியது.

தன்னைக் காணவேணும் காணவேணும் என்று அலமரும் ஆழ்வாருடைய கண்களுக்கு, எம்பெருமான் ஒரு சமயம் தன் தர்சநீயமான திருமேனியை அனுபவிக்கும்படி காட்டிக் கொடுத்தான். அப் பொழுது ஆழ்வார் பரம ஸந்தோஷம் அடைந்தார். அவனைக் காணப் பெருமையால் உடைந்த அவரது உள்ளமும் ஒருவாறு நிலையைப் பெற்றது. போக வேண்டிய உயிரும் உறுதியாய் நின்றது. இக்கருத்தையும்,

"கலைப்பல் ஞானத்து என் கண்ணனைக் கண்டுகொண்டு நிலைப் பெற்று என்நெஞ்சம் பெற்றது நீடுயிரே!"

என்ற பாசுரத்தால் ஆழ்வாரே தெரிவித்திருக்கிருர். இப்பாசுரத்தில், "கண்ணனைக் கண்டு கொண்டு நெஞ்சம் நிலைபெற்றது. உயிர் நீடு பெற்றது" என்றது கூர்ந்து கவனித்தற்குரியதாகும்.

இது காறும் கூறியவாற்ருல் 'கண்ணுக்கு இனியன்' என்ற பொருளிலும் கண்ணன் சொல்லுக்கு வழக்கு உண்டு என்பது பெறப்பட்டது.

## 6. கண்ணேட்டமுடையவன் கண்ணன்

இனி, கண் என்ற சொல்லுக்குக் கண்ணேட்டம் என்ற பொருளிருப்பதால் அக் குணத்தை உடையவன் என்ற கருத்திலும், கண்ணன் சொல் வழங்கலாமன்றே. அவ் வழக்கும் அருளிச் செயலில் காண்பதற்கு முன் கண்ணேட்டம் என்பதன் பொருளைத் தெளிவு செய்து கொள்வோம்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் "கண்ணேட்டம்" என்று தலைப்பிட்டு ஓரதிகாரத் தால் இக் குணத்தை மிகவிரிவாக விளம்பியிருக்கிருர். அதற்குத் தெள்ளு பரிமேலழகர் செய்த உரையைத் துணைக் கொண்டு அக் கருத்தை இனிக்காண்போம்.

(தொடரும்)




இராமர், லக்ஷ்மணர், சீதை.
ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோயில், சென்னை.

# ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள்

திரு. R. ஸ்ரீனிவாசராகவாசாரியார், M.A.,B.O.L., சென்னை.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## ஸ்ரீமந்நாதமுனிகள்

### அவதாரம்

வீர நாராயணபுரம் என்று வடமொழியில் கூறப்படுகிற காட்டுமன்னார் கோயிலில் ஸ்ரீமந் நாதமுனிகள் அவதரித்தார். காட்டுமன்னார் கோயில் தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு மேற்கேயுள்ள சிறியவூர். இவர் தகப்பனார் பெயர் ஈச்வரமுனிகள். இவர் சடமர்ஷண கோத்திரத்தில் ஓர் உட்பிரிவான 'சொட்டைக் குலத்தை'ச் சேர்ந்தவர். இவர் பிறந்தது கலியுகம் 3685-வது ஆண்டில். அதாவது கி.பி. 582-வது ஆண்டில் என்று கொள்ளலாம். சோபகிருது ஆண்டு ஆனித் திங்கள் அனுஷ நட்சத்திரத்தில் இவர் அவதரித்ததாக முன்னோர்கள் உறுதியாகக் குறிப்பிடுகிறார்கள். இப்பொழுது இவருடைய வர்ஷத் திருநட்சத்திரம் ஆனி அனுஷத்தில் வைஷ்ணவக் கோயில்களிலும், வைஷ்ணவர் இல்லங்களிலும் வெகுவாகக் கொண்டாடப்படுகிறது.

### திருமணமும் ஆசிரியர் பதவியும்

இவர் இளமையிலேயே தம் தகப்பனாரிடத்தில் வேதங்கள், சாஸ்திரங்கள் முதலியவைகளைப் பயின்றார். சிறு பிராயத்திலிருந்தே ஸ்ரீமந் நாராயணனிடத்தில் பக்தி கொண்டிருந்தார். வங்கிபுரத்தாச்சி என்பவரின் பெண்ணான அரவிந்தப்பாவை யென்பாளைத் திருமணம் செய்து கொண்டு இனிது இல்லறம் நடத்தி வந்தார். தம் குலத்தில் பரம்பரையாக வந்த யோக சாஸ்திரத்தில் மிகவும் பயிற்சி பெற்றிருந்த இவர் இளமையிலேயே பெரிய யோகியாகத் திகழ்ந்தார். இவர் பெருமையைக் கண்டவர்கள் இவர் ஸாதாரண மனிதர் அல்லர் என உறுதியாக நம்பினர். கஜவக்த்ரர் (யானை முகத்தர்) என்ற நித்யஸூரியே நாத முனிகளாக அவதரித்துள்ளதாகக் கருதினர். இவரும் தம் இளமையிலேயே அத்தகைய பெருமைக்குரியவராயிருந்தார். இவர், காலத்தால் ஆதிசங்கரருக்குப் பிற்பட்டவர். விசிஷ்டாத்வைத மதத்தைப் பரப்பிய முதல்ஆசார்யர். உண்மையில் ஸ்ரீமந் நாராயணனே இவ் விசிஷ்டாத்வைத மதத்திற்கு முதல் ஆசார்யர். திருமகள் இரண்டாவது. ஸேனை முதலியார் (விஷ்வக்ஸேனர்) மூன்றாவது ஆசார்யர். நம்மாழ்வார் நான்காவது ஆசார்யர் ஆவார்கள். ஆயினும் முதல் மூவர் இந் நிலவுலகத்தைச் சேர்ந்தவர்களல்லர் ஆகையாலும், நம்மாழ்வார் ஆழ்வார் என்ற பெரியபிரிவில் சேர்ந்தவர் ஆகையாலும், ஸ்ரீமந்நாதமுனிகளையே வைஷ்ணவர்கள் முதல் ஆசார்யராகக் கொள்ளுகிறார்கள். இவர் ந்யாய தத்வம் யோகரஹஸ்யம் என்ற இரண்டு நூல்களை வடமொழியில் இயற்றியுள்ளார்.

### பிள்ளைப் பேறு

உரிய காலத்தில் ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு ஒரு குமாரர் அவதரித்தார். அக் குமாரருக்கு ஈச்வரமுனி யென்று பெயர். ஸ்ரீமந்நாதமுனிகள் தம் குமாரருக்கு உரிய காலத்தில் உபநயனம் முதலிய செய்வித்து வேத வேதாங்கங்கள் முதலியவைகளைக் கற்பித்துப் பரம்பரை ஸொத்தாகிய யோகத்தையும் கற்பித்தார். பிள்ளைக்குத் திருமணம் ஆகியது. குடும்பப் பொறுப்பைப் பிள்ளை யேற்றுக் கொண்டார்.

## வடநாடு செல்லுதல்

அப்பொழுது ஸ்ரீமந்நாதமுனிகள் தம் மனைவியாருடன் வடநாடெழுந்தருளி அங்குப் பல திவ்ய தேசங்களில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான்களைச் சேவிக்க விரும்பியவராய்த் தங்கள் குலதெய்வமாகிய காட்டுமன்னார் கோயில் எம்பெருமானாகிய மன்னனாரிடம் விடைபெற்றுக் கொண்டு வடநாடெழுந்தருளினார். வடமதுரை சாளக்கிராமம் துவாரகை அயோத்யை முதலிய திவ்ய தேசங்களுக்கு எழுந்தருளி அங்குள்ள புண்யதீர்த்தங்களில் நீராடி யெம்பெருமான்களையும் திருவடி தொழுதார். கடைசியில் யமுனை யாற்றங்கரையிலுள்ள கோவர்த்தனம் என்கிற திவ்யதேசத்தில் வெகு நாள் எழுந்தருளியிருந்தார்.

## தம் ஊர் திரும்புதல்

வடநாட்டுக்குப் போய் அங்கேயே வெகு நாள் தங்கிவிட்ட நாதமுனிகளை மறுபடியும் தம்மிடம் அழைத்துக் கொள்ள வேண்டுமென்று திருவுள்ளம் கொண்ட காட்டுமன்னார் கோயில் எம்பெருமானாகிய மன்னனார், நாதமுனிகளுடைய கனவில் தோன்றி 'வீரநாராயணபுரத்துக்கு வருமாறு நியமித்தார்'. உடனே நாதமுனிகளும் கோவர்த்தனத் தெம்பெருமானாகிய யமுனைத் துறைவரிடம் விடைபெற்றுக்கொண்டு தம் ஊருக்குப் புறப்பட்டார். வழியில் காசி, புருஷோத்தமம், ஸ்ரீஜகந்நாதம், ஸிம்மாசலம், அஹோபிலம், திருப்பதி, சோளசிங்கபுரம், காஞ்சீபுரம், திருவயிந்திரபுரம், திருக்கோவலூர் முதலிய திவ்ய தேசங்களை ஸேவித்துக் கொண்டு திருவரங்கத்துக் கெழுந்தருளி ஸ்ரீரங்கநாதனையும் ஸேவித்துவிட்டு, காட்டுமன்னார்கோயிலுக்கெழுந்தருளி ஸ்ரீமன்னனாரை ஸேவித்தார். வடநாடு சென்று திரும்பிய நாதமுனிகளிடம் எல்லா வைஷ்ணவர்களும் மிகவும் அன்பு செலுத்தி ஆராதித்தனர். ஸ்ரீமந் நாதமுனிகள் தம்மையண்டின எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் சாஸ்திரங்களைக் கற்பித்ததோடு எம்பெருமானுக்கும் திருமாலை கட்டி ஸமர்ப்பித்தல் முதலிய கைங்கரியங்களையும் செய்து கொண்டிருந்தார்.

## திருவாய்மொழி காணல்

ஒருநாள் ஸ்ரீநாதமுனிகள் கோயிலில் எம்பெருமானைத் தொழுது கொண்டிருக்கையில், ஆழ்வார் திருநகரியிலிருந்து வந்த சிலஸ்ரீவைஷ்ணவர்கள் மன்னனார் முன் நின்று, நிரம்பிய பக்தி வெள்ளப்பெருக்குடன்,

**"ஆராவமுதே! அடியேனுடலம் நின்பாலன்பாயே**
**நீராயலைந்துகரைய உருக்குகின்ற நெடுமாலே!**
**சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை**
**ஏரார் கோலம் திகழக்கிடந்தாய்! கண்டேன் எம்மானே!**

என்று தொடங்கும் பதினொரு பாசுரங்களைச் சொல்லித் தொழுதனர். அதைக் கேட்டுக் கொண்டிருந்த நாதமுனிகள், யோகத்தினால் கடவுளை அனுபவிப்பதிலும் இத்தகைய பாசுரங்களைக் கூறி அனுபவித்தல் நன்றென நினைத்து, அவர்களிடமிருந்து அப்பாசுரங்களை யறிந்து கொண்டு, பதிகத்தின் முடிவில் பாசுரத்தில் 'குருகூர்ச் சடகோபன் ... ... சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்' என்றிருப்பது கண்டு, இப்பதிகம் ஆயிரம் பாக்களடங்கிய பெரிய நூலின் ஒரு பகுதியென அறிந்து, மிகுந்த பாசுரங்களும் உங்களுக்குத் தெரியுமா? என்று அவ் வைணவர்களைக் கேட்டார். அவர்கள் தங்களுக்குத் தெரியாதென்றும், தாங்கள் திருக்குடந்தையில் பெரியோர்கள் இப்பாசுரங்கள்பதினொன்றையும் ஆராவமுதன் முன்பு அனுஸந்திக்கக் கேட்டறிந்துகொண்டோம் என்றுசொல்லிப்போயினர். ஸ்ரீமந்நாதமுனிகள் காலம் தாழ்த்தாது திருக்குடந்தைக் கெழுந்தருளி யங்குள்ள பெரியார்களைப் பணிந்து விசாரித்தார். அவர்கள் தங்களுக்கு 'ஆராவமுதே! ...' என்று தொடங்கும் பதினொரு பாட்டுகள் தவிர மற்றவை தெரியாதென்றனர். நாதமுனிகள் அங்கிருந்து நம்மாழ்வார் அவதாரஸ்தலமாகிய ஆழ்வார் திருநகரிக்கே சென்று அங்குள்ள பெரியார்களை விசாரித்தார். அவர்களில் ஒருவராகிய பராங்குசதாஸர் என்பவர் 'திருவாய்மொழி' என்ற நூல் ஒன்று இருந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதைப்பற்றி யொன்றும் எங்களுக்குத் தெரியாது. நம்மாழ்வாரைப்பற்றி மதுரகவியாழ்வார் செய்தருளிய 'கண்ணிநுண் சிறுத்தாம்பினால்' என்றுதொடங்கும் பதினொரு பாசுரங்களையறிவோம். இப் பதினொரு பாசுரங்களையும் பன்னீராயிரம் தடவை பக்தியுடன் ஜபம் செய்பவர்களுக்கு நம்மாழ்வார் ப்ரத்யக்ஷமாவார் என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறோம்

தேவரீர்கள் அவ்வாறு செய்து நம்மாழ்வாரைப் ப்ரத்யக்ஷமாக ஸேவித்துத் திருவாய் மொழியைப் பெறலாம்' என்று கூறினர். ஸ்ரீமந்நாத முனிகளும் நம்மாழ்வார் எழுந்தருளியிருந்த திருப்புளியாழ்வார் (புளியமரம்) கீழே, 'கண்ணி நுண் சிறுத்தாம்பைப்' பன்னீராயிரம் தடவை ஜபம் செய்தார். எம்பெருமான் பிராட்டி இவ்விருவர்களுடைய ஆணையால் நம்மாழ்வார் மதுரகவிகளோடு நாதமுனிகளுக்கு யோகத்தில் ப்ரத்யக்ஷமாகி திவ்ய சக்ஷுஸ் (ஞானக் கண்) ஸையும், திருவாய்மொழி ஆயிரம் மற்ற மூவாயிரம் ரஹஸ்யங்கள் ரஹஸ்யார்த்தங்கள் வ்யாஸசூத்ரம் ஸூத்ரார்த்தங்கள் முதலியவைகளையும் அருளி மறைந்தார். ஸ்ரீமந்நாத மூனிகளும் திருவாய்மொழி முழுவதும் அறிந்து அநுஸந்தானம் பண்ணத் தொடங்கி விட்டார். திருநகரியிலுள்ள பெரியோர்கள் வியந்தனர். "முன்பு திருமங்கையாழ்வார் தம் வாழ்நாளில் திருவரங்கம் ஸ்ரீரங்கநாதனுடைய உத்தரவு பெற்று இங்கிருந்து (ஆழ்வார் திருநகரியிலிருந்து) நம்மாழ்வாரை (விக்ரஹத்தை) திருவரங்கத்துக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போய் மார்கழி மாத வளர்பிறை ஏகாதசி முதல் பத்து நாட்களில் வடமொழி வேதங்களுடன் திருவாய்மொழியையும் ஸ்ரீரங்கநாதன் திருமுன்பு பாராயணம் செய்வித்து, அப்பத்து நாட்கள் நடக்கும் உத்ஸவத்திற்குத் திருவத்யயநோத்ஸவம் என்று பெயரிட்டு, உத்ஸவம் முடிந்தவுடன் நம்மாழ்வாரை மறுபடியும் திருநகரிக்கு எழுந்தருளப் பண்ணினர். இவ்வாறு ஒவ்வோராண்டும் நடந்து வந்தது. காலக் கோளாறுல் இவ்விழா இப்பொழுது நின்றுவிட்டது. திவ்யப்ரபந்தமும் ஓதுவாரற்று மறைந்தொழிந்து விட்டது" என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம்" என்று ஸ்ரீமந்நாதமுனிகளிடம் கூறினர். உடனே நாதமுனிகள் ஸ்ரீரங்கம் எழுந்தருளித் திருமங்கையாழ்வார் அருளைப்பெற்று ஸ்ரீரங்கநாதனிடமிருந்து திருமுகவோலை யனுப்பி ஆழ்வார் திருநகரியிலிருந்து நம்மாழ்வாரை யெழுந்தருளச் செய்து, மார்கழி மாதம் வளர்பிறை ப்ரதமை முதல் தசமி வரையில் உபாங்கங்களாகக் கருதப்படுகிற முதலிரண்டாயிரம் பாசுரங்களையும், ஏகாதசியிலிருந்து பத்து நாட்களில் நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியையும், இருபத்தோராம்நாள் நாலாவது ஆயிரத்தையும் பாராயணம் செய்வித்தார். இவ்விருபத்தொரு நாள் நடக்கும் முழு உத்ஸவத்துக்குத் 'திருவத்யயநோத்ஸவம்' என்று பெயர் சூட்டினர்.

இவ்வாறு மறைந்துபோன நாலாயிர ப்ரபந்தத்தை மறுபடியும் யோகத்தில் நம்மாழ்வார் அருளால் கண்டுபிடித்ததுவும், நின்றுபோயிருந்த திருவத்யயநோத்ஸவத்தை ஸ்ரீரங்கத்தில் மறுபடி நடத்திவைத்ததுவும் இவ்விரண்டு பெருமைகளும் ஸ்ரீமந்நாதமுனிகளைச் சார்ந்தவை. பிறகு ஸ்ரீமந்நாதமுனிகள் மறுபடியும் திருக்குடந்தைக்கு எழுந்தருளி, தாம் திருவாய்மொழியைக்கண்டு பிடித்ததற்கு முதற் காரணமாயிருந்த அத்திருப்பதியிலும் திருவத்யயநோத்ஸவம் நடக்கும்படி செய்வித்தார். இவ்வுத்ஸவம் இப்பொழுது வைஷ்ணவ ஸ்தலங்கள் எல்லாவற்றிலும் நடந்துவருகிறது. இது நாதமுனிகளுடைய மூன்றுவது பெருமை.

## தமிழ்மறையில் இன்னிசை காணல்

பிறகு நாதமுனிகள் வீரநாராயணபுரம் சென்று மன்னனுருக்குக் கைங்கர்யம் செய்து கொண்டிருந்தார். அந்நாளில் நாலாயிரம் பாசுரங்களையும் இயல் இசைகளோடு பொருத்தித் தம் திருமாளிகைக்கு இரு பக்கங்களிலும் இருந்த கீழையகத்தாழ்வான் மேலையகத்தாழ்வான் என்பவர்களுக்குப் போதித்தார். ஸ்ரீரங்கத்திலும் திருவத்யயநோத்ஸவ காலத்தில் அரையர்கள் என்ற சிலரைக்கொண்டு தாம் அமைத்த தேவகானத்தோடு எம்பெருமான் திருமுன்பு நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தைப் பாடும்படி செய்வித்தார். ஸ்ரீதேசிகன்,

**காளம் வலம்புரியன்ன நற்காதலடியவர்க்குத்**
**தாளம் வழங்கும் தமிழ்மறையின்னிசைதந்த**
**வள்ளல்**
**மூளும் தவநெறி மூட்டிய நாதமுனி கழலே**
**நாளும் தொழுதெழுவோம் நமக்கார் நிகர்**
**நானிலத்தே**

என்று இப்பகுதியை விவரிக்கிறார்.

## சோழனிடம் வெகுமதி பெறுதல்

பின்பொருபொழுது, நாதமுனிகளால் பரப்பப்பட்ட தேவகானத்தில் வல்லவளாயிருந்த ஒரு நடனமாதும், மனுஷ்யகானத்தில் வல்லவளாயிருந்த மற்றொரு நடனமாதும் இருவரும் கங்கை கொண்ட சோழபுரத்தில் அரசன் முன்னிலையில் பாடி நடனமாட, தேவகானத்தைச் சுவைக்கத் திறனற்ற அரசன், மனுஷ்ய கானத்தில் வல்லவளாயிருந்தவளுக்கு வெகுமதி யளித்

# செய்யூர்க் கல்வெட்டுக்கள் 2

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனுர், M.A., M.O.L., Ph.D.

## கோவிலாட்சி

சோழர்க்கு முற்பட்ட பல்லவர் காலத்தில் திருவொற்றியூர் போன்ற பெரிய கோவிலின் ஆட்சி ஒரு குறிப்பிட்ட குழுவினரிடம் இருந்தது. அக் கூட்டத்தார் ஊரவையார் மேற்பார்வையில் இருந்தனர் (158 of 1902). காவேரிப்பாக்கம் பெருமாள் கோயில் போன்ற நடுத்தரக் கோவில்கள் மடத்தார் மேற்பார்வையில் இருந்தன. திருக்கோவலூர் திருத்தணிகை முதலிய ஊர்க் கோவில்கள் ஊரவையார் மேற்பார்வையில் இருந்தன (228, 435 of 1902 முதலியன).

சோழர் காலத்தில் பெரிய பாளையம், அகத்தியான் பள்ளி போன்ற சிறிய கோவில்கள் அர்ச்சகர் பொறுப்பிலேயே விடப்பட்டுள்ளன (309 of 1908, 505 of 1904). சில கோவில்கள் மாஹேசுவரர் என்ற சைவர் ஆட்சியில் இருந்தன (486 of 1922). திருக்கள்ர் கோயில் மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் ஆண்டார்கள் ஆட்சியில் இருந்தது; மூன்றும் இராசராசன் காலத்தில் மாஹேசுவரர் ஆட்சிக்கு மாற்றப்பட்டது (S.I.I. 3.260). சில கோயில்கள் கோயிலைச் சார்ந்த மடத்துத் தலைவர்கள் ஆட்சியில் இருந்தன (101, 121 of 1925). சில கோயில்கள் ஊரவையார் மேற்பார்வையில் இருந்தன (362 of 1917, 160 of 1929, 332 of 1910). நடுத்தர வருவாயுள்ள பெரிய கோயிலில் கோயிலுக் கென்றே தனி ஆட்சிக் குழு இருந்தது. அக் குழுவினர் 'ஸ்ரீகாரியம் செய்வார்', 'கோவில் கணப் பெருமக்கள்,' 'பாதமூலத்தார்' எனப் பலவாறு பெயர் பெற்றிருந்தனர் (S.I.I. 6.323, 206 of 1915, S.I.I. 5,686). அக்குழுவினருள் ஊரவையார், மாஹேசுவரர், மடத்துத்தலைவர்

---

ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யர்கள் ... ...

தான். இதனுல் கொஞ்சம் ஊக்கம் குன்றிய தேவகான நடனப்பெண் ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேசங்கள்தோறும் எம்பெருமான்களைப் பாடிக் கொண்டே வீரநாராயணம்வந்து எம்பெருமான் திருமுன்பு தேவகானத்தோடு திவ்ய ப்ரபந்தத்தைப்பாடி நடனம் செய்து தொழுதாள். அதைக்கண்ட நாதமுனிகள் ஸந்தோஷமடைந்து அவளுக்குப் பகுமானம் செய்தார். அவர் தேவகானத்தை உலகத்தில் தோற்றுவித்தவர் என்பதை யறிந்த அப்பெண் சோழ மன்னனிடம் சென்று நாதமுனிகளை வரவழைத்துத் தேவகானத்தின் பெருமையை அறியும்படி கூறினுள். சோழமன்னன் ஸ்ரீமந்நாதமுனிகளை வரவழைத்தான். மனமில்லாவிடினும் தேவ கானத்தின் பெருமையை நிலைநாட்டுவதற்காக ஸ்ரீநாதமுனிகள் கங்கை கொண்ட சோழபுரம்சென்ருர். அரசன் அவரை மரியாதையுடன் எதிர்கொண்டு அழைத்துப் போனுன். அரசனவையில் ஸ்ரீநாதமுனிகள் ஒரு கற்றூணில் தாளத்தைவைத்து அப்பெண்ணைத் தேவகானம் பண்ணச்சொன்னுர். தூண் உருகியது. பாட்டு நின்றதும் கற்றூண் மறுபடியும் இறுகியது. தாளத்தை எடுக்க முடியவில்லை. அதை அரசனுக்குக் காட்டி மறுபடியும் தேவ கானம் செய்வித்துத் தூண் உருகியதும் தாளத்தையெடுத்துக்காட்டினுர். அத்தாளம் நானூறு தாளங்களின் ஒலி படைத்திருந்தமையை அரசனுக்கு நிரூபித்துக் காண்பித்தார். அரசன் வியந்து ஸ்ரீமந்நாதமுனிகளை அடிபணிந்தான். பல வெகுமதிகள் அளித்தான். நாதமுனிகள் அவ் வெகுமதிகளைப் பெறவில்லை. அரசனை ஆசீர்வதித்துவிட்டு வீரநாராயணபுரம் எழுந்தருளி யோக சாஸ்திரங்களையும் தேவகானத்தோடு கூடிய திவ்ய ப்ரபந்தத்தையும் ப்ரசாரம் செய்து கொண்டு வாழ்ந்திருந்தார். இவர் திருநாட்டிற் கெழுந்தருளிய காலம் குறிப்பிடப் படவில்லை.

(தொடரும்)

என்பவர் இடம் பெற்றிருந்தனர் (47 of 1910, 100 of 1906). சில கோயில்களின் ஆட்சி ஊரவை, கோவிலாட்சிக்குழு, ருத்ர மாஹேசுவரர் ஆகிய மூவரிடமும் இருந்தது (152, 210 of 1929). சில பெரிய கோயில்கள் தனிப்பட்ட அதிகாரிகளின் மேற்பார்வையில் இருந்தன. அவர்கள் ஊரவையார்க்குக் கட்டுப்பட்டிருந்தனர் (100 of 1929, 605 of 1920). வேறு சில பெரிய கோயில்களில் இருந்த அதிகாரிகள் கோயிலாட்சிக் குழுவினர், ஊரவையார் ஆகியோருடன் சேர்ந்து கோயில் காரியங்களைக் கவனித்தனர், (152, 154 of 1895).

கோயிலாட்சி ஒரு குழுவினரிடம் அல்லது ஊரவையாரிடம் இருந்தாற் போலவே கோவிலிலுள்ள நடுக்கோயில் ஒரு குழுவினர் ஆட்சியில் சில இடங்களில் இருந்தது. அக் குழுவினர் திருவுண்ணாழிகைச் சபையார் எனப்பட்டனர். அக் குழுவினர் கோயில் பணத்திலிருந்து கடன் தந்தனர்; கடன் பெற்றனர்; கோவில் பணிகளைக் கவனித்தனர் (A.R.E. 1922. p-117).

கோவிலைப் பற்றிய சிறப்புடைய செய்திகள் அரசன் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டன (201, 206 of 1919). கோயிலில் இருந்த செல்வ நிலயம் ஸ்ரீ பண்டாரம் எனப்பட்டது. அது பற்றிய கணக்குப் புத்தகம் ஸ்ரீ பண்டாரப் பொத்தகம் எனப்பட்டது (327 of 1921). அப்பண்டார அதிகாரிகள் சிவபண்டாரிகள் எனப்பட்டனர் (S.I.I. 1.146) நடுக்கோயில் ஆட்சி போலவே முழுக்கோயில் ஆட்சி நடத்துவோரும் இருந்தனர். அவர்கள் கோவில் நிலங்களை விற்கவும் வாங்கவும் உரிமை பெற்றிருந்தனர் (A.R.E. 1922, p. 117). கோவிலுக்கு அவரவர் செய்த தான பத்திரங்கள் (மூலவோலைகள்) சிவபண்டாரத்தில் வைத்துப் பாது காக்கப்பட்டன; அதே சமயத்தில் அவை கோவிற் சுவர்களிலும் வெட்டுவிக்கப்பட்டன (299, 320 of 1913). சிவன் கோவிலைச் சேர்ந்த தேவரடியார் போன்ற மக்கட்கும் பசுக்கள் முதலிய கால் நடைகட்கும் சூலப்பொறி பொறிக்கப்பட்டிருந்தது (543 of 1921, 537 of 1922),

எல்லாக் கோயில்களின் வரவு செலவுக் கணக்குகளும் அரசாங்க அதிகாரிகளால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்டன. மதுராந்தகன் கண்டராதித்தன், காழி ஆதித்தன், அருமொழி மூவேந்த வேளார் முதலிய அரசாங்க அலுவலர் பலருடைய பெயர்கள் கல்வெட்டுகளிற் காணப்படுகின்றன (282 of 1906, 109 of 1914, 28 of 1919, 240 of 1931). இந்த அதிகாரிகள் கோயில் கணப் பெரு மக்கள், ஊரவையார் என்பவர் முன்னிலையில் கோயில் நகைகளைக் கணக்கிட்டு மதிப்பிட்டுக் குறித்துக் கொண்டனர் (210 of 1929 S.I.I. 3. 211); கோயில் கணக்குகளைப் பார்வையிட்டனர்; கோயில் பணத்தைக் கையாண்டவர், சொன்னபடி கோயிலுக்கு நெல் முதலிய வற்றைக் கொடுக்கத் தவறிய குத்தகையாளர், இவர் தம் நிலங்களையும் வீடுகளையும் பறிமுதல் செய் தனர். குற்றவாளிகள் 'சிவத்துரோகிகள்', 'ஊர்த்துரோகிகள்' என்று ஏசப்பட்டனர் (189 of 1929, 57 of 1914).

செய்யூரில் உள்ள இரண்டு கோயில்களிலும் பலர் செய்த தானங்களை ஏற்றுக் கொண்டு நடத்தி வந்தவர் கோயில் அர்ச்சகரே ஆவர். அவர்கள் நந்தா விளக்கு எரித்தல், சந்தி விளக்கு எரித்தல், அறம் செய்தவர் விரும்பிய நல்ல நாட்களில் குறிப்பிட்ட கடவுளர்க்குச் சிறப்புப் பூசை செய்தல், கடவுளர் திருமேனிகளை நகர்வலம் செய்வித்தல் முதலிய வற்றைச் செய்து வந்தனர்; அபூர்விகளுக்கும் தபசுவிகளுக்கும் தேவரடியார்க்கும் குறிப்பிட்ட நாட்களில் உணவு அளித்தனர்.

புற்றிடங் கொண்டார் கோயிலில் (வன்மீக நாதர் கோயில்) தட்சிணாமூர்த்தி தேவர், பிள்ளையார், அருமொழி ஈசுவரமுடைய மகா தேவர், குலோத்துங்க சோழீசுரமுடையார் என்பவர்க்குச் சிறு கோயில்கள் அமைந்திருந்தன. இவற்றுக்குச் செய்யப்பட்ட அறங்களையும் கோயில் அர்ச்சகர் ஏற்று நடத்திவந்தனர். மதுராந்தக விண்ணகர் ஆழ்வார் என்ற பெருமாள் கோவிலும் செய்யூரில் இருந்தது. அதுவும் பட்டர்கள் ஆட்சியில் இருந்தது (441, 445 of 1902).

கோவிலில் சித்திரைச் சதையம், வைகாசி மூலம், ஆனித் திருவாதிரை, ஐப்பசிப்பூரம், கார்த்திகை, மார்கழித் திருவாதிரை, தைப் பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம் முதலிய

விழாக்கள் சிறப்புற நடை பெற்றன. 12 அமாவாசைகளிலும் கிரகண நாட்களிலும் விஷு அயன நாட்களிலும் அர்ச்சகர் சிறப்புப் பூசை நிகழ்த்த ஒப்புக் கொண்டு நிறைவேற்றி வந்தனர். வன்மீக நாதர் கோயிலில் கோயில் பண்டாரம் இருந்தது (445 of 1902).

## அளவைகள்

**நீட்டலளவை :** நில அளவை வேலி, குழி, பாடகம் எனப் பெயர் பெற்றது. நிலம் அளக்கும் அரசாங்க அளவுகோல் பதினெண் சாண்கோல் எனப் பெயர் பெற்றது. வேறொரு அளவுகோல் தடி எனப் பெயர் பெற்றது. வேலியும், குழியும் இன்றும் வழக்கிலுள்ளன; மற்றவை இன்று வழக்கில் இல்லை; அவற்றின் அளவும் தெரிந்துகொள்ள முடியவில்லை. நிலம்—முதல் தரம், இரண்டாம் தரம் என்று பெயர் பெற்றன. இரண்டாம் தரத்தின், நிலத்தில் புன்செய், தாங்கல் என்பன அடங்கின (430, 432, 444 of 1902). தாங்கல் என்பது வயலுக்கு நீரைப் பாய்ச்சும் சிறிய நீர் நிலை. இப் பெயர் கொண்ட ஊர்கள் தமிழகத்தில் பல உள்ளன. பாடகம் என்பது வயலின் ஒரு பகுதி. "நிலத்தில் மூன்று பாடகம் திருத்தி" என்பது கல்வெட்டு வாசகம் (S.I.I. 3. 203).

**முகத்தலளவை :** சோழர் காலக் கல்வெட்டுகளில் கீழ்க்காணும் அளவைகள் காணப் படுகின்றன.

| | | |
|---|---|---|
| 5 செவிடு | = | 1 ஆழாக்கு |
| 2 ஆழாக்கு | = | 1 உழக்கு |
| 2 உழக்கு | = | 1 உரி |
| 2 உரி | = | 1 நாழி |
| 8 நாழி | = | 1 குறுணி |
| 2 குறுணி | = | 1 பதக்கு |
| 4 குறுணி | = | 1 தூணி |
| 12 குறுணி | = | 1 கலம் |

செய்யூர்க் கல்வெட்டுகளில் உரி, நாழி என்னும் அளவைப் பெயர்களே காணப் படுகின்றன. சோழர் காலத்தில் பொன்நிறை கீழ்வருமாறு இருந்தது.

| | | |
|---|---|---|
| 2 குன்றி | = | 1 மஞ்சாடி |
| 20 மஞ்சாடி | = | 1 கழஞ்சு |

மஞ்சாடி என்னும் நிறுத்தலளவை செய்யூர்க் கல்வெட்டில் காணப் படுகிறது (441 of 1902).

## காசுகள்

ஆண்டில் 32 நாள் திருமாளிகைப் பிள்ளையார்க்குச் சிறப்புப் பூசையும் படையலும் நடத்த இரண்டு காசுகள் வழங்கப்பட்டன. (441 of 1902) என்பது கவனிக்கத்தக்கது. இந்த இரண்டு காசின் வட்டியைக் கொண்டு ஆண்டில் 32 நாள் சிறப்புப் பூசை நிகழ்த்த வேண்டு மென்பது கருத்து. இதை நோக்க, ஒரு காசு என்பது மிக்க விலையுயர்ந்தது என்பது பெறப்படும். திருக்கேதார தேவர், விசுவேசுவர தேவர் ஆகிய இருவருக்கும் ஆண்டில் 8 நாள் பால் முழுக்குக்காகப் புதுக்காசு ஒன்று கொடுக்கப்பட்டது (443 of 1902). இதிலிருந்தும் அக்காலக் காசின் மதிப்பை நன்கறியலாம்.

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்.

| | |
|---|---|
| ஸ்ரீ ப்ரசன்ன வெங்கடாஜலபதி சுவாமி கோயில், தல்லாகுளம் | தெப்ப உத்ஸவம் |
| ,, மத் காமாக்ஷி ஏகாம்பரேஸ்வரர் தேவஸ்தானம், மதுரை | நவராத்திரித் திருவிழா |
| ,, ஏகாம்பரேச்வரர் தேவஸ்தானம், சென்னை | ,, |
| ,, சௌந்திரராஜப் பெருமாள் தேவஸ்தானம், நாகபட்டினம் | மணவாள மாமுனிகள் உத்ஸவம் |
| திருக்குற்றாலநாதசுவாமி கோயில், திருக்குற்றாலம் | ஐப்பசி விசுத் திருவிழா |
| ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ மருதீஸ்வரர் ஆலயம், திருஇடையாறு | ஸ்கந்த சஷ்டி உத்சவம் |
| ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள், பேயாழ்வார் சந்நிதி தேவஸ்தானம், மயிலாப்பூர் | பேயாழ்வார் வருஷோத்சவம் |
| சேலம் செவ்வாய்ப் பேட்டை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில் | ஸ்கந்த சஷ்டி உத்சவம் |
| சென்னை ஸ்ரீ அருணாசலேஸ்வரர், வரதராஜப் பெருமாள் கோயில் | நவராத்திரி விழா |

# திருமூலர் பரம்பரை

பாலகவி, வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார்,
தேவகோட்டை.

நமது சித்தாந்த சைவ பரமான எல்லா ஆதீனங்களும் திருக்கயிலாய மலையிலுள்ள சீகண்ட ருத்திர மூர்த்தியைத் தலைமைக் குரவராகக் கொண்டு அவரது பரம்பரையில் வந்தவையாகும். சீகண்ட முதல்வரிடம் அருளுபதேசம் பெற்ற முதன் மாணுக்கர் **நந்தியம் பெருமான்.** அவரிடம் ஞானேபதேசம் பெற்றவர் எண்மரென்று **திருமூல தேவநாயனர்** தமது திருமந்திர நூலிற் குறிப்பிடுகின்ருர். அவ்வெண்மருள் தாமும் ஒருவரென்று அவரே கூறுவதால், அவர் பெற்ற உபதேசச் சிறப்பு நன்கு விளங்கும்.

நூல்களை முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என மூன்று வகைப்படுத்தி ஆன்ருேர் கூறுவர்.

**"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்"**

என்ற இலக்கண சூத்திரத்தின்படி அனுதியில் இயப்பாகவே வினையில் நீங்கி விளங்கிய அறிவினனுகிய இறைவனுல் அருளிச் செய்யப் பெற்ற வேத சிவாகமங்கள் முதல் நூல் வகையைச் சேர்ந்தவை.

**"வேத நூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்"**

என்பது **சிவஞான சித்தியார்.** வேதத்தைப் பொது நூலெனவும், சிவாகமத்தைச் சிறப்பு நூலெனவும் ஆன்ருேர் கூறுவர்.

**"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன"**

என்று திருமந்திரம் உரைக்கின்றது. கடவுள் மற்ற உயிருலகங்களோடு கலந்திருக்குந் தன்மையை விரிவாகவும், அவற்றைக் கடந்திருக்கும் தன்மையைக் குறிப்பாகவும் வேதம் உணர்த்தி அக்கடவுளைப் பிரமம் என்ற பெயராலேயே பெரும்பாலும் குறித்துச்செல்லும். சிவாகமமோ கடவுள், உயிர், தளை ஆகிய முப்பொருள்களின் சொரூப தடத்த நிலைகளைத் தெளிவாக உணர்த்தி, அக்கடவுள் "சிவபெருமானே" என்பதைத் தெள்ளத்தெளிய அறிவித்துக் கொண்டிருக்கின்றது.

**"வேதத்தை விட்ட அறமில்லை"**

என்றும்,

**"அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றுயிரர்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்"**

என்றும் திருமந்திரம் கூறும்.

சிறப்பு நூலாகிய சிவாகமம் **காமிகம்** முதல் **வாதுளம்** ஈருக உள்ள இருபத்தெட்டு ஆகும்.

“ அஞ்சோ டிருபத்து மூன்றுள ஆகமம்”

என்பது திருமந்திரம். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் சதாசிவமூர்த்தி தமது தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகிய நான்கு முகங்களிலிருந்தும் வெளிப்படுத்திச் சனகர், சனந்தனர், சனாதனர், சனற் குமாரர் ஆகிய நான்கு முனிவருக்கும் அவற்றின் பொருளை அறிவுறுத்தி யருளினாரென்பதை “ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங் கீரிருவர்க் கிரங்கி நின்று, நேரிய நான் மறைப் பொருளை உரைத்தொளி சேர் நெறியளித்தோன் நின்ற கோயில்” என்ற திருஞான சம்பந்தப் பெருந்தகையார்து திருவாக்கினால் அறிகின்றோம்.

சிவாகமங்களெல்லாம் சதாசிவமூர்த்தியினது உச்சி முகமாகிய ஈசான முகத்திலிருந்து தோன்றியவை. இது, “அஞ்சாம் முகத்தால் அரும் பொருள் கேட்டதே” என்ற திரு மந்திரத்தால் அறியப்பெறுகின்றது. அச் சிவாகமங்கள் இருபத்தெட்டனுள் நந்தியம்பெருமான் உபதேச முறையிற் பெற்றவை ஒன்பது. அவை **காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம்** என்பனவாம்.

“ நவஆ கமம்எங்கள் நந்திபெற் றானே ”

என்பது திருமூலர் திருவாக்கு. சீகண்ட மூர்த்தியிடம் உபதேசம் பெற்ற நந்தியம் பெருமானுக்கு நன்மாணவராய் இருந்த எண்மர் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிரபாதர், திருமூலர் என்பவராவர். இவரை

“நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடில்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவ ரோடே என்மரு மாமே”

என்று திருமூலரே குறிப்பிடுகின்றார். மகாபாடியம் செய்தவரும் யோக சூத்திரம் செய்த வருமென வேறு இரண்டு பதஞ்சலிகள் உள்ளனர். அவர்களின் வேறான “ மன்று தொழுத பதஞ்சலியே” திருமூலரின் சகபாடி என்பது உணரத் தக்கதாகும்.

சனகர் முதல் திருமூலர் வரையுள்ள இவ்வெண்மராலும் இந்நிலவுலகிற் சித்தாந்தசைவ ஞானம் பரவி நிலைபெறுதற் பொருட்டுப் பத்தொன்பது சந்தானங்கள் ஏற்பட்டன. சனகரின் பரம்பரையில் சம்பு, மலையமான் சந்தானங்களும்; சனந்தனர் பரம்பரையில் சிவமண்ணியதேவர், பரமதேவர், சிவானந்தபோதர் சந்தானங்களும்; சனாதனர் பரம்பரையில் பிரமதேவர், சிங்கநாததேவர் சந்தானங்களும்; சனற்குமாரர் பரம்பரையில் விஞ்ஞான தேவர், மெய்கண்ட தேவர் சந்தானங்களும்; சிவயோக முனிவர் பரம்பரையில் வாமதேவமுனிவர் சந்தானமும்; பதஞ்சலி முனிவர் பரம்பரையில் நிறைந்த நாயனார் சந்தானமும்; வியாக்கிரபாத முனிவர் பரம்பரையில் சத்தியோசாத தேவர் சந்தானமும்; திருமூல தேவர் பரம்பரையில் இந்திரதேவர், பிரம தேவர், விஷ்ணு தேவர், உருத்திரதேவர், கந்துரு மகா இருடிகள், காலாக்கினி உருத்திரர், கஞ்சனூர் மலையமான் சந்தானங்களும் உண்டாயின. திருமூலரிடம் உபதேசம் பெற்ற எழுவரையும்,

“ மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் பிரமன் சோமன் உருந்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ
டிந்த வெழுவரு மென்வழி யாமே”

என்ற திருமந்திரச் செய்யுள் அறிவிக்கின்றது. நந்தி அருளாலே நாதனும்

பேர்பெற்ற திருமூலதேவ நாயனுர், நந்தி யருளாலே மூலனை நாடியதாகவும், அந்தி மதிபுனை அரனடி நாள்தொறும் சிந்தை செய்து ஆகமம் செப்பியதாகவும் கூறுகின்ருர்.

"சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ ஞவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியி னீழலில்
சேர்ந்திருந் தேன்சிவ ஞகமம் ஓதியே"

எனவும்,

"தப்பிலா மன்றில் தனிக் கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகமிருந் தேனே"

எனவும்,

"என்னைநன் ருக இறைவன் படைத்தனன்
தன்னைநன் ருகத் தமிழ்செய்யு மாறே"

எனவும் இவர் கூறுவது கொண்டு திருவா வடுதுறைச் சிவபோதியின் அடியில் பல ஆண்டுகள் தவ வாழ்வுடையராய்த் தங்கி யிருந்து இறைவனது அருளாணையின் வண்ணம் தமிழ்த்திருமந்திர நூலை ஆக்கி யருளினுரென்று அறிகின்ருேம்.

சைவத் திருமுறைகள் பன்னிரண் டிலும் காலத்தால் முற்பட்டது தமிழா கமமாகிய திருமந்திரம். மெய்கண்ட தேவர் தமிழிற் சிவஞான போதப் பெரு நூலை அருளிச் செய்வதற்கு முன்பு பதி, பசு, பாசமாகிய முப்பொருள்களின் உண்மைகளையும் இலக்கணங்களையும் சாதனம் பயன் ஆகியவற்றையும் தமிழிற் செம்மையாகப் புலப்படுத்திக் கொண் டிருந்த நூல் திருமந்திரமே. தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமான் திருமூல தேவ நாயனுரை "நான் மறையோ கிகள் ஒருவர், அணிமாதி சித்தி பெற்று டையார்" என்பன வாதிய சிறப்பு மொழி களாற் குறித்துப் பொது நூலாகிய வேதத்தில் அவருக்குள்ள பயிற்சியையும் அதனுல் அவர் பெற்றிருந்த அட்டமா சித்திப் பேற்றையும் விளக்கியருளினுர்.

பின்னர், "நந்தி திருவருள் பெற்றவர் சைவநெறி மெய்யுணர்ந்தோர், தவ முனிவர்" என்பன வாதிய சிறப்பு மொழிகளாற் பாராட்டி அவரது ஞானோ பதேச பரம்பரை நலத்தையும் சாதன சாத்தியச் சித்தியையும் புலப்படுத்தி யுள்ளமை ஈண்டு நினைவு கூரத் தக்க தாகும். சிவாகமங்கள் சரியாபாதம்,கிரியா பாதம்,யோகபாதம்,ஞானபாதம் என்னும் நான்கு பிரிவுகளை உடையன. இந் நான்கு பிரிவுகளுக்குட்பட்ட பொருளையே தான் திருமந்திரமும் விளக்கிக் கொண் டிருக்கிற தென்பதை

"ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்ந்துலகத் தோருய்ய
ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை"

என்ற சேக்கிழார் பெருமான் திருவாக்கு அறிவிக்கின்றது.

திருமூல தேவ நாயனுர் திருவாவடு துறைச் சிவபோதியின் கீழ் மூவாயிரம் ஆண்டுகள் தவமிருந்து ஒவ்வொருஆண் டுத் தவநிறைவின் பயனுக வெளிப்பட்ட ஒவ்வொரு பாடலைக்கொண்ட திருமந்திர மாலையை அருளித்தந்தாரென்று வரலாறு கூறுகின்றது. இது, தற்போதைய வரலாற் ருராய்ச்சியாளர்களின் முடிபோடு பெரிதும் ஒத்து நிற்கின்ற தென்பது நினைவிலிருத்த வேண்டிய ஒன்ருகும். பதஞ்சலி வியாக் கிரமராகிய இருவரும் திருமூலர் காலத் தவரென்பது அவரது திருவாக்கினுல் அறியப் பெற்றது. வியாக்கிரமருக்கு வசிட்ட முனிவரது தங்கையை மணம் செய்வித்ததும் அவருக்கு உபமந்யு மகா முனிவர் மகனுகப் பிறந்ததும் அவருக் காகக் கூத்தப் பெருமான் தில்லையில் திருப்பாற்கடலை வரவழைத்ததும் கோயிற்

புராணம் முதலியவற்ருல் தெரிகின்ற செய்திகளாம்.

வசிட்ட முனிவர் தசரதருக்கும் இராமர் முதலியோருக்கும் குலகுருவா யிருந்தவராதலின் வரலாற்ருராய்ச்சியா ளர்கள் கண்டு வெளியிட்டிருக்கிற முடி வுப்படி இராமாயண காலமாகிய கி. மு. ஆருயிரமே திரு மூலதேவர் காலமென்று கொள்ளக் கிடக்கின்றது. எனவே இற் றைக்குச் சற்றேறக் குறைய எண்ணு யிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த திரு மூலதேவர் இடையில் மூவாயிரம் ஆண்டுகள் திருவாவடுதுறைச் சிவ போதியின் கீழ்த் தவமிருந்து திருமந்திர மாலைப் பாடல்களை ஓராண்டுக் கொன்ருக வழங்கியருளினுரென்பது மறுக்க முடியாத உண்மையாய் வலுப்பெறுகின்றது. மூல னென்னும் இடையனது உடம்புக்குள் புகுந்து பல்லாண்டுகள் அவர் இருந்தா ரென்பதை

"இருந்தேனிக் காயத்தே எண்ணிலி கோடி"

என்று அவரே கூறுவதால் அறியலாம்.

திருமந்திரமாலையைச் செய்த பிறகு அதனைத் தமது மாணவருக்கு உபதே சித்து அவர்களை வைத்துப் பல மடா லயங்களை நிறுவிச் சித்தாந்த சைவ நுண் பொருள்களை இந்நில வுலகத்திற் பரவும் படி திருமூலதேவர் செய்தருளினுர். இமயம் முதல் பொதியம்வரை பல மடா லயங்கள் இருந்தனவென்று "தத்துவ ரத்திஞகரம்" என்னும் நூல் கூறும்.

மெய்கண்ட சாத்திரம் பதினுன் கினுள் சிவஞான போதத்திற்கு முந்திய திருவுந்தியாரும் திருக்களிற்றுப் படி யாரும் திருமூல தேவரது ஞான பரம் பரையில் வந்த நல்லாசிரியர்களாலேயே இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும். இதனைத் திருமந்திரத்தோடு அவ்விரு நூல்களையும் ஒப்பிட்டு பார்ப்பவர் அறிவர். இன்று தருமபுர ஆதீன நிர்வாகத்தி லிருந்து வருகிறதிருச்சிராப்பள்ளி மௌன சுவாமிகள் மடம் திருமூலர் பரம்பரையில் வந்ததென்பதும் அந்த மடாலயத்தை நிறுவிய மௌன சுவாமிகளிடத்தில்தான் தாயுமான சுவாமிகள் அருளுபதேசம் பெற்று ஞானுனுபூதி மாஞக விளங்கினுர் களென்பதும் அப்பெருந்தகையாரது திரு வாக்கிலிருந்து நாமறிந்தனவாகும்.

நலம் பெருகுக.



மதுரை வித்வத் ஸதஸ்ஸில் கலந்துகொண்ட சிவாச்சாரியப் பெருமக்கள்.

# திருக்கோயில் வழிபாட்டு முறை

திரு. ம. வெ. மு. நாகராஜக் குருக்கள்,
சிறுதையூர், லால்குடி.

## ஆலய வழிபாட்டின் பயன் :

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே திருக்கோயில் வழிபாடுகள் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன. ஆலய வழிபாடுகள் தவறாது நடைபெறுவதால் நாட்டு மக்கள் நோயின்றி நலம் பல பெருகி மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்—அவனியில் மழைவளம் சுரக்கும்—நம் நாட்டை ஆக்ரமிக்கும் வேற்று நாட்டவரை விரட்டியடிப்பதற்கு வேண்டிய போர் வலிமையும் அறிவுத்திறமையும் நாடாள்பவருக்கு இறைவன் திருவருளால் வளரும்—நாட்டில் கன்னம் களவு—பொய்—சூது—வாது, முதலிய கொடுமைகள் குன்றித் தர்மம் தழைக்கும், என்றெல்லாம் நம் நாட்டு ஞானியர்களும்—பெரியோர்களும் தாம் கண்ட உண்மை அநுபவக் கருத்துக்களை நமக்குப் போதித்துள்ளார்கள். தமிழாகமம் அருளிய நம்பிரான் திருமூலரடிகள் திருக்கோயில் பூசைகள் தடைபடுவதன் காரணமாக நாட்டிற்கு ஏற்படும் தீங்குகளைத் திருமந்திரப் பாடல்களால் எடுத்துரைத்தார்கள். இரண்டு பாடல்கள் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

" ஆற்றரு நோய்மிக் கவனிமழை யின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே "

—திருமந்திரம் 517

" முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னவர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றும்
கன்னம் களவு மிகுந்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே "

—திருமந்திரம் 518

திருக்கோயில் வழிபாடுகள் நாள்தோறும் வழிவழியாக நடைபெற்றுவரும் நம் நாட்டில் மேலே குறித்த திருமந்திரப் பாடல்கள் காட்டும் தீமைகள் நேராததுடன், அரசும் அரசாள்பவர்களும் திறமையும் பெருமையும் பெற்றுப் போற்றப்படுவார்கள் என்பது திண்ணம்.

## மூன்றுவகை வழிபாடு

திருக்கோயில் பூஜைகளை எப்படிச் செய்ய வேண்டும் என்பது பற்றிய விவரங்களை ஆகம நூல்கள் வெளியிடுகின்றன. சிவாலய பூஜா விதி அல்லது திருக்கோயில் வழிபாட்டு முறைகளைச் சிவாகமங்கள் பற்பல படலங்களில் ஆயிரக்கணக்கான சுலோகங்களால் விரித்துரைக்கின்றன. விரிந்த அவ்வாகமங் களினின்றும் திருக்கோயில் வழிபாட்டிற்கு வேண்டிய சில முக்கியமானவிதிகளை மட்டும் காரணாகமம் என்ற சிவாகமத்திலிருந்து எடுத்து எழுதுகின்றேன். பல ஆகமங்களிலிருந்து பற்பல மேற்கோள்களைக் காட்டுவதைவிட ஓர் ஆகமத்திலிருந்தே ஆலய வழிபாடுகளைத் தெளிவாகவும் எளிதாகவும் செய்வதற்குத் தேவையான ஆகமக் கருத்துக்களைப்பொறுக்கியெடுத்துத் தருவதால்,சிவாலயங்களுக்கும்—வழிபாட்டுத் துறையில் ஈடுபாடு உள்ள அன்பர்களுக்கும் பெரும் பயன் விளையும் என்று நம்பியே இக் கட்டுரையைத் தொடங்குகின்றேன்.

நித்யம் நைமித்திகம் சைவகாம்யஞ்சேதி
திரிதாபவேத்||
நித்யந்து நித்யபூஜாஞ்ச சந்தியாம் பிரதிய
ஜேத்க்ரமாத்||

இதன் பொருள் :—" ஆலயவழிபாடு நித்ய பூஜை—நைமித்திக பூசை—காமிய பூஜை என மூவகையாகும். நித்ய பூஜை என்பது நாள்தோறும் முறையே ஒவ்வொரு சந்திகளிலும் பூஜை செய்து வருவதே யாகும். "

### நாள் வழிபாட்டு முறை :

இனி நித்ய பூஜைக்குரிய காலக் கணக்கு களைக் காண்போம். பூஜா காலங்களின் ஏற்றத் தாழ்வால் நாள்வழிபாடு 'உத்தமம்—மத்திமம்—அதமம்' என்று மூன்று பிரிவுடையதாகக் கூறப்படுகிறது.

**ஸார்தேந நாடிகாஸப்த யாமம் தத்சந் திருச்யதே |**
**யஜநம்ப்ரதி யாமத்து உத்தமம்த்விதி கீர்த்திதம்||**

இதன் பொருள்:—ஏழரை நாழிகை கொண்டது ஓர் ஜாமம். இந்த ஜாமத்தையே சந்தி என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு ஜாமத்திலும் ஆலய பூசை செய்வது உத்தமம் என்று கூறப்படுகிறது.

இங்கே ஆகமம் எட்டு ஜாமத்திற்கும் எட்டு கால பூஜையைச் சிறப்பித்துக் கூறுகின்றது. பெரிய கோவில்களிலும் ஆறு கால வழிபாடு நடைபெறுவதையே அறிவோம். இனிவரும் ஆகமக் கருத்துக்களைப் பார்க்கும்போது ஆறு கால பூஜையும் உத்தமம் என்ற சிறப்புடையதாகும் என்று உணரலாம்.

**உதயே சைவமத்யான்னே ப்ரதோஷ சார்தயாமகே |**
**யஜநம் மத்யமம் மத்யே உதயேஸ்தமனே தமம்||**

இதன் பொருள்:— உதய காலத்திலும், மத்தியான காலத்திலும், பிரதோஷ காலத்திலும், அர்த்த ஜாம காலத்திலும் ஆகிய நான்கு காலங்களில் மட்டும் பூஜை செய்வது மத்திமம் என்ற நடுத்தர மாகும். 1. உதய காலத்தில்— 2. மதியத்தில்—3. அஸ்தமன காலத்தில் மட்டுமோ அல்லது உதய காலம் அஸ்தமனகாலம் ஆகிய இரண்டு காலத்தில் மட்டுமோ வழிபாடு செய்வது அதமம் என்ற கடைசிப் பிரிவைச் சேர்ந்ததாகும்.


### வழிபாட்டுக் காலங்கள் :

மேலே குறிப்பிட்ட ஆகமப் பொருள்களினின்றும் ஆலய வழிபாட்டிற் குரிய காலக் கணக்குகளைக் காண்போம்: ஓர் சந்தி (ஜாமம்) என்பது மூன்று மணி நேரம். 24 மணி கொண்ட ஒரு நாளில் மூன்று மணி நேரத்தில் ஒரு கால பூஜையாக எட்டுக்கால வழிபாடுகளை ஆகமம் குறிப்பிடுகின்றது. திருவையாறு — லால்குடி என வழங்கும் திருத்தவத்துறை போன்ற திருக் கோயில்களில் முறையே 1. உஷக்காலம், 2. காலைசந்தி, 3. உச்சிக்காலம், 4. சாய ரக்ஷை, 5. இரண்டாங் காலம், 6. அர்த்த ஜாமம் ஆகிய ஆறு கால வழிபாடுகள் நாள் தோறும் நடைபெறுகின்றன. ஆகமம் நான்கு கால வழிபாட்டையே மத்திமம் என்றதால் ஆறு கால வழிபாடு உத்தமம் என்பது நன்கு புலனாகும். திருச்சிராப்பள்ளி, திருஆனைக்கா முதலிய சிவாலயங்களில் முறையே 1. காலை சந்தி, 2. உச்சிக் காலம், 3, சாயங்காலம், 4. அர்த்த ஜாமம் ஆகிய நான்கு கால வழிபாடு களும், பெரும்பாலான மற்ற திருக்கோயில் களில் உதயகால பூஜை—உச்சிக்கால பூசை— சாயங்கால பூசை என்ற மூன்று கால வழிபாடு களோ அல்லது காலைசந்தி பூஜை—சாயரக்ஷை பூசை ஆகிய இரண்டு கால வழிபாடுகள் மட்டுமோ நடைபெறுவதை எல்லோரும் அறிவர். நாள் வழிபாடுகளை (நித்ய பூசைகளை)ச் " ஸந்தியாம்ப்ரதி சந்திகள் தோறும்," செய்ய வேண்டுமென்பது ஆகமக் கோட்பாடு. இக் கருத்துப்படி உஷக்காலபூஜையிலிருந்து அர்த்த ஜாம கால பூஜை முடிய உள்ள நம் நாட்டு சிவாலயங்களில் வழக்கத்திலுள்ள எல்லா வழி பாடுகளுக்கும் ஏற்ற முறையில் பண்டைய காலக் கணக்கிற்கேற்ற இன்றைய மணிநேரங் களை இன்னும் சில ஆகமப் பிரமாணத்துடன் எடுத்துக்காட்டப்படுகின்றன.

### புலர்வதன்முன் வழிபாடு :

**பாஸ்கரஸ் யோதயாத் பூர்வம் த்ரிபாதேநத்ரி நாடிகா |**
**ராத்திராந்த சுமிதிப் ப்ரோக்தம் ஞாத்வேவம் ஸமாசரேத்||**
**ஜலசங்கிரஹணம் புஷ்பசங்கிரஹணம் யஜநம்ததா||**

இதன் பொருள் :— " சூரிய உதயத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகை இரவின் முடிவு என்று சொல்லப்படுகிறது. இதை யறிந்து தண்ணீர் எடுப்பது, மலர் கொய்வது, உஷக் கால பூஜை செய்வது ஆகிய செயல்களில் ஈடுபடவேண்டும்."




ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் உற்சவர்,
திருவல்லிக்கேணி, சென்னை.

இரவு மூன்று மணிமுதல் ஆறு மணிவரையுள்ள மூன்று மணி நேரம் இரவின் கடைசி ஜாமமாகும். ஆகம விதிப்படி இக்காலம் "ராத்திராந்தம்-இரவின்முடிவு" என்ற பூஜைக்குரிய ஓர் சந்தியாகும். இச் சந்தியின் பிற்பகுதியிலேயே "உஷக்கால வழிபாடு" விதிக்கப்படுகிறது. ஆதலால் உஷக்கால வழிபாடு இரவு மணி 4-30 முதல் சூரியோதயம் மணி 6-க்குள் புலர்வதன்முன் செய்யவேண்டும்.

உதயகால வழிபாடு முதலியன :— காலை சந்தி பூஜை என்று வழங்கப்படுவதே ஆகமத்தில் உதய கால பூஜை என்று குறிப்பிடப்படுகிறது. சூரிய உதயத்திலிருந்து ஒருஜாமம் முடிய உள்ள காலம் உதய காலமாகும். சூரியோதயம் 6மணிக்கு என்றால் காலை 6மணிமுதல் 9மணிக்குள் காலை சந்தி பூஜை செய்ய வேண்டிய காலமாகும். இதற்கடுத்த வழிபாடு உச்சிக்கால பூஜையாகும்.

உச்சிக்கால வழிபாடு :— இப்பூஜை "மத்யான்ன கால பூஜை" என்று ஆகமம் கூறுகின்றது. பகல் முப்பது நாழிகையைக் காரணாகமம் முதற் பத்து நாழிகை பூர்வான்ன காலமென்றும்—இடையிலுள்ள பத்து நாழிகையை மத்தியான்ன காலமென்றும் — முடிவிலுள்ள பத்து நாழிகை ஸாயங்கால மென்றும் பகற்பொழுதை மூன்றாகப் பிரித்துள்ளது. இதிலிருந்து பகல் பத்து நாழிகை அல்லது பத்து மணிக்கு மேலுள்ள காலம் உச்சிக் காலம் என்று பொருள் படுகிறது, இதை ஒட்டியும் உதயகால சந்திக்கு அடுத்த சந்தி (ஜாமம்) ஆகிய 12 மணிக்குள் உச்சிக்கால வழிபாடு செய்வதே பொருத்தமானதாகும். ஆகவே உச்சிக்கால வழிபாட்டிற்குரிய மணிநேரம் பகல் 10 மணி முதல் 12 மணிவரை ஆகும்.

ஸாயரக்ஷை பூஜை :— மாலை நேரத்தில் செய்யப்படுகின்ற வழிபாட்டைப் பிரதோஷகால பூஜை என்றும், சாயங்கால அல்லது ஸாயரக்ஷை பூஜை எனவும் கூறுவதுண்டு. பிரதோஷம் என்ற சொல்லுக்கு "இரவின் முகப்பு —இருட்டுவதற்கு முன்னுள்ள நேரம்" என்று பொருள். மஹாப் பிரதோஷ பூஜை என்பது சிவாலயத்திற்கே யுரிய ஓர் சிறந்த மாலைநேர வழிபாடாகும். இது மாதம் இரு முறை மாலை நேரத்தில் திரயோதசி திதியுள்ளபோது நிகழ்வன. நாள்தோறும் மாலையில் செய்யப்படும் வழிபாட்டிற்கு ஆகமம் சொல்லிய காலக் கணக்கு அடியிற் காட்டப்படுகிறது.

ரவேரஸ்தமயாத் பூர்வே ஸாயரக்ஷா
திரிநாடிகா||
மஹாப்பிரதோஷ ஸம்பிராப்தே பூஜாசர்வம்
திரிநாடிகா||
திரிபாதே ஸாயரக்ஷாந்து திவாந்தேது
பிரஜாபதே||

இதன் பொருள்:- சூரிய அஸ்தமனத்திற்கு (சூரியன் மறைவதற்கு) முன் மூன்று நாழிகையில் ஸாயரக்ஷை (மாலை நேர) பூஜையைச் செய்ய வேண்டும். மஹாப் பிரதோஷம் வந்தால் மஹாப் பிரதோஷ வழிபாட்டையும், மற்ற எல்லா பூஜைகளையும் பகலின் முடிவான சாயரக்ஷை என்ற மாலைப் பொழுதில் மூன்றே முக்கால் நாழிகையிற் செய்யவேண்டும்.

ஆகமவிதிப்படி சாயங்கால வழிபாடு பிற்பகல் மணி 4.48 முதல் 6 மணிக்குள் செய்தல் வேண்டும். மஹாபிரதோஷத்தன்று பிற்பகல் மணி 4-30க்குத் தொடங்கி 6 மணிக்குள் ஆலய பூஜை முழுதும் (சூரியன் மறைவதற்குள்) செய்ய வேண்டும். 5 இரண்டாங் கால வழிபாடு :—

பூர்வராத்திரி என்று இக்காலம் வடமொழியில் குறிக்கப் படுகிறது. ஆலய வழிபாட்டு பணிசெய்பவர்களுக்குப் பகலில் உச்சிக் கால பூஜை முடிந்தபின் சாயரக்ஷை பூஜைக்குரிய காலம் வரும்வரை நீண்ட நேரம் ஓய்வு இருக்கிறது. இந்த நீண்ட ஓய்வு நேரத்திற்குப் பின் மாலை நேர வழிபாட்டிற்குரிய பணிகளில் ஆலய சிப்பந்திகள் ஈடு படுவார்கள். சாயங்கால பூஜைக்குப் பிறகு தொடர்ந்து சிறிது நேரத்தில் இரண்டாவதாக இவ்வழிபாடு நடைபெறுவதால் "இரண்டாங்கால வழிபாடு" என்று வழங்கப்படுகிறது போலும்.

சூரிய அஸ்தமனத்திலிருந்து ஏழரை நாழிகை அல்லது மூன்று மணிநேரம் கொண்ட காலத்தில் "இரண்டாம் கால பூஜை" செய்வதற்கு உரியது. இது ஆகமம் பூஜைக்கெனக் குறிப்பிடும் சந்திகளில் இரவின் முதற்சந்தி (ஜாமம்) ஆகும். ஆகவே மாலை 6மணி முதல் இரவு 9 மணிக்குள் இரண்டாங்கால பூஜை செய்யவேண்டும்.

6. அர்த்தஜாம கால வழிபாடு:—அர்த ஜாமம் என்பதற்கு ஜாமத்தின் பாதி என்று பொருள். ஒரு ஜாமத்தின் பாதி மூன்றேமுக் கால் நாழிகை அல்லது ஒருமணி முப்பது நிமிஷ நேரமாகும். இரண்டாங்கால வழிபாட்டிற்குப் பிறகு இரவுமணி 9க்கு மேல் 10-30 மணிக்குள் செய்வது அர்த்த ஜாமகால பூசையாகும்.

இவ்வாறு ஆறுகால வழிபாட்டிற்கும் "ஸந்தியாம்பிரதி—ஜாமங்கள் தோறும்" என்ற ஆகமக்கருத்தை அடிப்படையாகக் கொண்டும் இன்னும் பல ஆகமவிதி விலக்குகளையுற்று நோக்கியும், பற்பல திருக்கோயில்களில் தொன்று தொட்டு வரும் வழிபாட்டுக் கால நேரங்களை அநுசரித்தும், இக்கட்டுரையில் அந்தந்த பூசைக்குரிய மணி நேரங்கள் எழுதப் பட்டுள்ளன. இவற்றைச் சுருக்கமான அட்ட வணையாக அடியிற்காண்க!

## சிவாகம முறைப்படி நாள்தோறும் நடைபெறவேண்டிய வழிபாடுகளும் மணிநேரங்களும்.

1. உஷக்கால பூசை—இரவு 4-30 முதல் 6 மணி வரை.

2. காலை சந்தி பூசை—காலை 6 மணி முதல் 9 மணி வரை.

3. உச்சிக்கால பூசை-பகல் 9 மணி முதல் 12 மணி வரை.

4. சாயரக்ஷை பூசை—மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை.

5. இரண்டாங்கால பூசை—மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை.

6. அர்த்த சாமகால பூசை—இரவு 9 மணி முதல் இரவு 10-30 மணி வரை.

சில சந்தர்ப்பங்களில் மேலே குறித்த நேரங் களில் பூசைகள் நடை பெறமாட்டாது காலங் கடந்த பின் வழிபாடு செய்ய நேர்ந்து விடு கிறது. இப்படி செய்வதால் தோஷம் (குற்றம்) உண்டா? இதற்கு ஆகமம் கூறும் பதில்:—

**ஸந்தியாதிக் கிரமணாத் தோஷ:**
**கிருதஞ்சேத்து நதோஷபாக்॥**

சந்தி(யாமத்திற்கு)க்கு மேற்பட்ட காலத் தில் (அந்த காலத்திற்குரிய) பூசை செய்வதால் ஏற்படும் தோஷம் அக்கால பூசையைத் தவரு மல் செய்வதனாலேயே தோஷம் இல்லாததாக அறிக!

என்று ஆகமம் கூறுகின்றது. இதனால் காலம் மாறினாலும் வழிபாடுகளில் குறைவு வரக் கூடாது என்பது கருத்தாகும். இதுவரை நாள் தோறும் நடைபெறும் வழிபாடுகளின் காலக் கணக்குகளைக் கண்டோம். இனி நைமித்திக வழிபாடு பற்றிய ஆகமப் பொருள்களைச் சுருக் கமாகக் காண்போம்!

## நைமித்திக வழிபாடு

விசேஷ நாட்களை நிமித்த (காரண)மாகக் கொண்டு மிகச் சிறந்த முறையில் பூசைகளைச் செய்வது "நைமித்திக பூசை" என்று சொல் லப்படுகிறது. நைமித்தக வழிபாட்டிற்குரிய சிறந்த தினங்களை ஆகமம் எடுத்துக் காட்டு கின்றது. அவைகளாவன:—

**"நைமித்திக மதோ வக்ஷ்யே நித்ய பூஜாநு கூலத:|**
**ஸங்கிராந்தௌச சதுர்தஸ்யாம் பர்வண்யுபய பக்ஷயோ:॥**
**அயநேவிஷு வேராசு க்ரஸநேமாஸ பூஜகே॥**
**ஏதேஷு அன்யேஷு ஸர்வேஷு நைமித்திக மிஹோச்யதே॥**

இதன் பொருள்:—நித்ய பூசைக்கு அநு கூலமான நைமித்திக பூசைகளைச் சொல்லு கின்றேன். சங்கிராந்தியில்—சதுர்தசிகளிலும்—அமாவாசை பௌர்ணமி இவ்விரு நாட் களிலும்—தக்ஷிணாயன—உத்தராயண புண்ணிய காலங்களிலும் இரவும் பகலும் ஒத்த நாழிகை யுள்ள விஷுபுண்ய காலங்களிலும், கிரகண காலங்களிலும், மாச பூசைகளிலும் இவை போன்று வேறு பல உத்சவங்களிலும் நைமித் திக பூசையைச் செய்ய இங்கே சொல்லப் படுகிறது.

மேலேகூறிய விசேஷ பூசைக ளாகிய நைமித்திக பூசைக்குரிய மாதம்—தினம்—நக்ஷத்திரம்—திதி—கிழமை—இவைகளை எந்த சந்தர்பத்தில், எவ்வாறு தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை ஆகமங்களை நன்கு ஆராய்ந்து தெளிந்து திருவிழாக்களையும்—சிறந்த நாட்களையும் திருக்கோயில்களில் கொண்டாட வேண்டும். பொதுவான ஓர் திருவிழா அல்லது நைமித்திக வழிபாடுகளை ஒவ்வொரு கோயிலில் ஒவ்வொரு விதமாக மாறுபட்ட நாட்களில் கொண்டாடாமல் எல்லா சிவாலயங்களிலும் இறைவனுக்குரிய சிறப்பு வழிபாடுகளை ஒன்று பட்டுச் செய்வதே நாகரீகம். அறிவு நூல்களுக்கும் பொருந்துவதாகும்.

"நைமித்திகந்து நித்தியாந்தே கர்த்தவ்யமவி ரோதத: ||
நித்யே ப்ரவர்த் தமானேது யதா நைமித்திகே பவேத் ||
ஸமாப்யேகேநகாவேந நித்யம் நைமித்திகம் சரேத் ||

இதன் பொருள் :— நைமித்திக பூஜையை நித்ய பூஜைக்கு இடையூறு ஏற்படாதவாறு நித்ய பூஜை முடிந்தபின்பு செய்யவேண்டும். நித்ய பூஜை நடந்து வரும் போது நைமித்திக பூசை செய்வதற்குரிய காலமும் ஒத்துவந்தால் இவ்விரு பூசைகளையும் சேர்த்து ஒரே காலத்தில் நித்ய பூசை—நைமித்திகபூசை இவ்விரண்டையும் செய்ய வேண்டும்.

ஸந்தியாயா பரகாலேவாபூர் வேவா வித்யதேயதி||
நைமித்திகம் ஸ்வகாலேது கிருதநித்ய விரோதத:||
ஏகத்ரசைவ காலேந உபயத்ரசஸ மாசரேத்||

இதன் கருத்து : — "நித்ய பூசைக்குரிய சந்தி அல்லது ஜாமத்திற்குப்பிற் பொழுதிலோ-முன்போ நைமித்திக பூசை செய்ய வேண்டிய புண்ய காலம் வந்தால் நித்ய பூசைக்கு இடையூறு நேராமல் நைமித்திக பூசையை அதற்குரிய காலத்தில் செய்யவும். நைமித்திக பூசைகளை நித்ய பூசையோடு கலந்து ஒரே காலத்திலோ அல்லது நித்ய பூசைகளை எப்பொழுதும் போல செய்துவிட்டு நைமித்திக பூசையை இரண்டாவதாகவும் தனித்தனியும்செய்யலாம்"

"ஸ்வகாலாநுஷ்டிதாத்வைஷாக்ரியாஸர்வார்த் தஸாதநீ |

எல்லாவழிபாட்டுக் காரியங்களும் அதற்குரிய காலங்களில் அனுஷ்டிப்பதாலேயே எல்லாப் பொருளுக்கு முரியதாக ஆகிறது.

## காமிய பூஜை

மூன்றுவதாக காமிய பூசை பற்றி மிகச் சுருக்கமாக எழுது கின்றேன்.

"யை: ப்ரார்த்திதப்ரபூஜாஸ்து ஸாபூஜாகாமி கோச்யதே||

எவர்களினாலே பிரார்த்தனை செய்து கொண்டு விருப்போடு பூசைகள் செய்யப் படுகின்றதோ அவ்வழிபாடு "காமிய பூசை" என்று கூறப் படுகிறது.

மக்களின் வேண்டுதல் காரணமாக செய்யப்படும் வழிபாடுகளெல்லாம் காமிய பூசை என்று ஆகமம் அருளுகின்றது. காமியம் என்பதற்கு விரும்புவது என்று பொருள். தாம் விரும்பியவை பூர்த்தியடைந்து நலம்பெற வேண்டுமென்று தெய்வங்களை வேண்டுவதுடன் அவ்விருப்பம் நிறைவேறிய பின்பு அதற்கறிகுறியாக ஆடையில்"பணம்" முடிந்து வைத்து அவ்விருப்பம் நிறை வேறத் தோன்றுத் துணையா யிருந்து கை கூட்டிவைத்த இறைவனுக்கு ஆலயங்களுக்குச் சென்று இயன்றவாறு வழிபாடு செய்வது நம் நாட்டு மக்களின் தொன்மையான பழக்கவழக்கமாகும்.

"இம்மையேதரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே"

என்ற அருள்வாக்கு "சிவபெருமானை வேண்டினால் இம்மையில் உண்ண உணவும் உடுக்க உடையும் நிறையப் பெற்றுத் துன்பம் தொலைவதுடன் அம்மையில் சிவலோகத்தை ஆளும் பதவியும் கிடைக்கும் ; இதில் சந்தேகம் கொள்ளவேண்டாம்," என்று சைவ சமயாச்சாரியர் அருளியது.

யஜுர் வேதத்திலும்,

"க்ஷுத்பிபாஸாமலாம் ஜ்யேஷ்டாம்
அலக்ஷ்மீம் நாசயாம் யஹம்||
அபூதிம் அஸம்ருத்திஞ் சஸர்வாம்
நிர்ணுதமேக்ருஹாத்||

"பசி...தாகம்—அசுத்தம்—சோர்வு—வறுமை இவைகளை நான் ஒழிக்க விரும்புகிறேன். என்னுடைய வீட்டிலிருந்து செல்வமில்லாமை நிறைவு இல்லாமை முதலிய எல்லாத்துயரங்களையும் போக்குதல்வேண்டும்!" என்று பிரார்த்தனை கூறப்படுகிறது. நம் முயற்சியால் எல்லாக் காரியங்களையும் குறைவற நிறைவேற்றி விட இயலாது. நாம் விரும்பாமலே நம்மிடம் கலந்துள்ள எல்லாக்குறைகளையும்—துயரங்களையும் சிவபெருமானிடம் முறையிட்டு அவனருளாலே அவன் தாள் வணங்கி, எல்லா நலன்களையும் குறைவறப் பெற்று நிறைவுடன் விளங்குவோமாக!

"யாஅம் இரப்பவை பொன்னும்
பொருளும் போகமும் அல்ல, நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க்கடம் பின் ஒலிதாரோயே!"

பரிபாடல் 5-ம் பாடல்

# நிர்வாக அதிகாரிகள் மாற்றங்கள்

| பெயர் | இருந்த இடம் | மாற்றப்பட்ட இடம் |
|---|---|---|
| திரு. பி. பெரிய சாமி | ஸ்ரீ ஜகந்நாதப் பெருமாள், ஸ்ரீ திருமழிசையாழ்வார் கோவில்கள், திருமழிசை, ஸ்ரீ பெரும்புதூர் தாலுக்கா. | ஸ்ரீ தண்டு மாரியம்மன்கோயில், உப்பிலிபாளையம், கோயம்பத்தூர் டவுன். |
| திரு. ஈ. பொன்னப் பிள்ளை | ஸ்ரீ சுந்தரேஸ்வர சுவாமி கோவில், கோஹூர் | ஸ்ரீ ஜகந்நாதப் பெருமாள், ஸ்ரீ திருமழிசையாழ்வார் கோவில்கள், திருமழிசை. (முழுநேரப் பொறுப்பில்) |
| திரு. டி. ராமகிருஷ்ணன். | ஸ்ரீ நெமிலி ஆளவந்தார் நாயக்கர் அறக்கட்டளைகள், மகாபலிபுரம். | ஸ்ரீ லக்ஷ்மி நாராயணப் பெருமாள் கோவில், டி. வி. புத்தூர், விருத்தாசலம் தாலுக்கா மற்றும் அதைச் சேர்ந்த கோவில்கள். |
| திரு. என். ஆர். லிங்கமராஜா | ஸ்ரீ வைத்தியநாத சுவாமி கோயில், மடவார் விளாகம், ஸ்ரீ வில்லி புத்தூர் தாலுக்கா. | ஸ்ரீ பிரம்ம புரீஸ்வரர் கோயில், அம்பல், ஸ்ரீமகாகாள நாத சுவாமி கோயில், கோயில் திருமாகாளம், நன்னிலம் தாலுக்கா. |

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்

சென்னை ஸ்ரீ அருணாசலேசுவரர் தேவஸ்தானம்—நவராத்திரி விழா.
ஸ்ரீ காயநிர்மலே சுவரர் தேவஸ்தானம் ஆத்தூர், சேலம் மாவட்டம்—ஸ்கந்த சஷ்டி விழா.
ஸ்ரீ தில்லையம் மன்கோயில், சிதம்பரம்—மகாகும்பாபிஷேக நிறைவுவிழா.
ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் கோயில், சுந்தரப் பெருமாள் கோயில்—நவராத்திரி விழா.
ஸ்ரீ அட்சயலிங்க சுவாமி கோயில், கீழ் வேளூர்—மண்டலாபிஷேக நிறைவு விழா.
ஸ்ரீ லட்சுமி நரசிம்ம தேவஸ்தானம், சோளிங்கபுரம்—மகாசம்ப்ரோட்சணம் (31-10-63)

# தொண்டைநாட்டுத் திருப்பதியநுபவம்

மகாவித்துவான். P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

தொண்டை நாட்டுத் திருப்பதிகளுள் கச்சிப்பதியை யநுபவித்து வருகிறோம். பல திருப்பதிகள் மலிந்த இக்காஞ்சீக்ஷேத்திரத்தில் தேவப் பெருமாள் ஸன்னிதிச் சிறப்புகளையும் ஸ்ரீயதோக்தகாரி யெம்பெருமான் வைபவங்களையும் கீழிதழ்களில் அநுபவித்தோம். இப்போது அட்டபுயகரத் திருப்பதியை யநுபவிக்க விழிகின்றோம். இத்தலத்தைப் பாடியவர் பேயாழ்வாரும் திருமங்கை யாழ்வாருமாவர். பேயாழ்வாருடையது துணுக்கைப் பாசுரம். திருமங்கையாழ்வாருடையது பதிகம். பெரிய திருமொழியில் இரண்டாம் பத்தில் எட்டாவது பதிகமாகிய "திரிபுர மூன்றெரித்தானும்" என்று தொடங்கும் திருமொழியாம் அது. இதற்குக் கீழ்ப்பதிகம் திருவிட வெந்தை யென்னும் தொண்டை நாட்டுத் திருப்பதியின் அநுபவமாய் நிகழ்ந்தது. ஆழ்வார் தாமான தன்மையில் நின்று பேசாமல் பெண்மை யெய்திப் பேசின பதிகம் அது. அதாவது மகளின் நிலைமையைத் தாய் பேசுவதாக அமைக்கப்பட்ட தென்கை. அதற்கு அடுத்ததான இந்தத் திருவட்ட புயகரப் பதிகத்திலும் அந்தப் பெண்பாவனை தொடர்ந்து வருகின்றது. ஆனால் முன்பதிகம் போல் தாய் பேசுவதாக வன்றிக்கே மகள் பேசுவதாக அமைந்ததாமிப் பதிகம். இது இப்பதிகத்தின் ஆறுவது செய்யுளிலே உய்த்துணரத் தக்கது.

இராமபிரான் தண்டகாரணியத்தி லெழுந்தருளியிருந்த போது அங்குள்ள முனிவர்களெல்லாரும் திரண்டு பெருமானுடைய பரணசாலைக்கு ஓடி வந்து 'அரக்கர்களாலே நாங்கள் புண்பட்டிருக்கிறபடியைப் பாராய் பிரானே! இதுவொரு குத்து, இதுவொரு வெட்டு கண்டருளாய்' என்று சொல்லி அரக்கர் நலிந்த தங்களுடம்பைக் காட்டின போது இராமபிரான் சோதிவாய் திறந்து பணித்ததாவது.

"ப்ரஸீதந்து பவந்தோ மே
ஹ்ரீரேஷா ஹி மமா துலா,
யதீத்ருசை ரஹம் விப்ரை:
உபஸ்தேயை ருபஸ் தித:" என்று.

இதன் கருத்தாவது, மாமுனிவர்காள்! அடியேனை மிகவும் மன்னித்தருள வேணும்; இப்போது அடியேனுக் குண்டான வெட்கம் சொல்லுந் தரமன்று. உங்கட்கு ஒரு விதமான நோவும் வராதபடி நான் நோக்கிக் கொள்ள வேண்டியவன்; என் கடமையை நான் தவிர்ந்து உங்களை நோவுபட விட்டிருந்தேன். இஃது எனக்குப் பெரிய குற்றம். அதற்கு மேல் நானாகவே உங்களது ஆச்ரமங்களில் வந்து 'இப்படி நீங்கள் நோவுபட நேர்ந்ததே!' என்று உபசார வார்த்தைகளும் சொல்லப் பெற்றிலேன். நீங்கள் பட்ட வேதனைகளை நீங்களே என்னிடம் வந்து கதறும்படியாகப் பிறப்பட்டேனே! இஃது எனக்கு மிகப் பெரிய குற்றம். ஆக இவ்வளவு குற்றவாளியான நான், மாமுனிவர்களே! உங்களைக் காணும் போது மிக மிக வெள்கி நிற்கின்றேன்! என்னை மன்னித்தருள வேணும் என்பதாம்.

இம்முனிவர்கள் தங்களுடைய உடலைப் பேணுமவர்களேயன்றி உயிரை நோக்குபவர்களல்லர். எம்பெருமானுடைய வாசியை யறிந்து அவனுக்கு என்வருகிறதோ வென்று பரிந்து பல்லாண்டு பாடவல்லவர்களுமல்லர். இத்தகைய முனிவர் திறத்திலே எம்பெருமான் பேசின பேச்சுக்கள் இத்தகையன வென்றால் இவர்களினும் எத்தனையோ மடங்கு மேம்பாடு

கொண்ட ஆழ்வார்கள் திறத்திலே அவன் பேசக் கூடிய பேச்சுக்கள் எத்தகையனவா யிருக்குமோ? கீழே திருவிட வெந்தைப் பெரு மானை யநுபவிக்குமிடத்து ஆழ்வார் தாமான தன்மையை யிழந்து பட்ட பாடுகளைத் திரு வுள்ளம் பற்றின எம்பெருமான் 'இவ்வாழ் வாரை இப்படியா நாம் துடிக்க விட்டோம்! தம் துடிப்பைத் தாமே முறையிட்டுக் கொள் ளும் படியாகவும் நாம் பிற்பட்டோமே! என்று முடிமேல் மோதிக்கொண்டு, அடியார்களுக்குத் தான் உதவின குணங்களையும் பரம விலக்ஷண மான வடிவழகையும் பிரகாசப் படுத்திக் கொண்டு திருவட்டபுயகரமென்னும் கச்சித் திருப்பதியிலே ஆழ்வார்க்குப் பரம போக்கிய மாக ஸேவை ஸாதித்தான்! ஆழ்வாரும் (கீழ்த் திருமொழியின் அநுபந்தமாகவே) பரகால நாயகியான நிலைமையிலேயே நின்று ! அப் பெருமானை ஸேவித்தார்! என்றைக்கும் எங்குங் கண்டறியாத திருக்கோலமாயிருந்தது; 'ஆழி யொடும் பொன்னார் சார்ங்கமுடைய வடிகளை இன்னா ரென்றறியேன்' என்றாற்போலே அப் பெருமானை இன்னா னென்று அறிய மாட்டிற் றிலர்; அறிந்து கொள்ளாமலிருக்கவோ மன மில்லை; ஸ்வபுத்தியாலே அறிந்து கொள்ளவும் முடியவில்லை; என்ன செய்வது? 'நீர் ஆர்?' என்று கேட்கலாமென்று பார்த்தாலோ, வாய் எழும்பவில்லை. முகத்தை நேரே பார்த்து வார்த்தை சொல்ல முடியாதபடி சோதி வெள் ளம் அலையெறிந்து தள்ளுகின்றது; அதனால் முகம் நோக்கி 'நீர் ஆர்' என்று கேட்க மாட் டிற்றிலர்; 'இவர் நம்முடைய தலைமகனாகவே யிருக்கக் கூடும்' என்று நெஞ்சிலே ஒரு தோற் றமும் தோன்றினமையால் வெட்கத்தாலும் 'நீர் ஆர்' என்று கேட்க மாட்டிற்றிலர்; கேட்டுத் தெரிந்து கொள்ள விருப்பமோ அதி கரித்து விட்டது; அவர் தம்மையே நேரே முகம் பார்த்துக் கேளாமல் வேறொருவரை நோக்கி 'இப் பெரியவர் ஆர் கொல்?' என்று கேட்க, அதற்கு எம்பெருமான்றானே 'நான் அட்டபுயகரத்தேன்' என்று மறுமொழிகூற, படுக்கைத் தலையிலே இப்படி சில வார்த்தை கள் நடந்து கொண்டிருப்பதைப் பரகால நாயகியின் தாய்மார் தோழிமார் முதலானோர் செவியுற்று 'நங்காய்! ஏதேனும் ப்ரமித்தாயோ? இவை என்ன வார்த்தைகள்' என்று கேட்க 'ப்ரமித்தேனல்லேன்; ஒரு மகா புருஷரை ஸேவிக்கப் பெற்றேன், 'இவரார் கொல்?' என்று கேட்டேன்; திருவட்ட புயகரத்து நாய னார் 'நான்தான் அட்டபுய கரத்தேன்' என்று உத்தரமருளிச் செய்கிறார் காண்மின்—என்று பரகால நாயகி தன் தாய்மார்க்கும் தோழி மார்க்கும் நடந்த வரலாறு சொல்லுவதா யிருக் கிறது இப்பதிகம்.

ஆழ்வார் எம்பெருமானை அநுபவிக்கும் விதங்களில் இதுவும் ஒரு ஆச்சரியமான வித மாகுமென்றுணர்க. கீழ்ப்பதிகம்—தாய்ப் பாசு ரம்; இப் பதிகம் தலைவி பாசுரம்.

> திரி புரமூன்றெரித்தானும் மற்றைமலர்
> மிசைமேலயனும் வியப்ப
> முரிதிரை மாகடல்போல் முழங்கி
> மூவுலகும் முறையால் வணங்க
> எரியன கேசரவாளெயிற்றொடு இரணிய
> னாக மிரண்டு கூறு
> அரியுருவாமிவரார் கொலென்ன அட்டபுய
> கரத்தே னென்றாரே.

ஒரு பெரியவர் வந்து ஸேவை ஸாதித் தார், அப்போதைய நிலைமை இப்படிப்பட் டிருந்த தென்கிறாள் பரகால நாயகி: பரமசிவ னும் பிரமனும் கண்டு ஆச்சரியப்படும்படியாக வும், மூவுலகத்திலுள்ளவர்களும் அலையெறி கின்ற கடல் போல் ஸ்தோத்திர கோஷங்களைச் செய்து கொண்டு வணங்கவும், நெருப்புப் போன்ற உளை மயிர்களோடும் வாள் போன்ற கோரப் பற்களோடுங் கூடி, இரணியன் இரு பிளவாம்படியாக நரசிங்க வுருக்கொண்டு தோன்றின இம் மகானுபாவர் ஆர்? என்று நான் கேட்டேன்; அதற்கு அவர் 'நான் அட்ட —புயகரத்தேன்—அட்டபுயகரத்தில் வஸிப்ப வன் காண்; 'அன்றொரு கால் ப்ரஹ்லாதனுக் காக வந்து உதவின மாத்திரமன்று; உனக்கு உதவுகைக்காக இங்கே வந்து ஸமயம் பார்த்து நிற்கிறவனன்றோ நான்' என்றார்—என்கிறாள்.

எதிரே வந்து தோன்றினவருடைய ஸ்வ ரூப ஸ்வபாவங்கள் ஆழ்வார்க்குத் தெரியா திருந்தால் 'இவரார் கொல்?' என்று கேட்க லாம்; 'திரிபுர'மென்று தொடங்கி 'அரியுருவா மிவர்' என்னுமளவும் மூன்றரையடிகளால் அப் பெருமானுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களைத் தாம் நன்கறிந்தமையைச் சொல்லி வைத்து; 'இவரார் கொல்?' என்று கேட்பது பொருந்து

மோ? எனின்; இதற்குப் பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செல்கிறார்—'அடையாளம் சொல்லா நிற்கச் செய்தே நிச்சயிக்கவொண்ணாதபடியிறே விஷயஸ்வபாவம்!' என்று. 'இன்னாரென்றறியேன் அன்னே யாழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய வடிகளை இன்னாரென்றறியேன்' என்னுமாபோலேயாம். 'அடையாளம் சொல்லா நிற்கச் செய்தே அறியேனென்னப் பண்ணுகிறது அவன் வைலக்ஷண்யம்' என்று அவ்விடத்திலும் வியாக்கியான ஸ்ரீஸூக்தியுள்ளது. அஸாதாரண லக்ஷணங்களைத் தெரிந்து கொண்ட பின் இன்னாரென்றறியாமை யென்பதொன்றுண்டோ வென்று பலர்க்கும் நெஞ்சில் கலக்கமாகவே யிருக்கும்; ஆழ்வாருடைய நிலைமை வாய்ந்தாலன்றித் தெளிவு பிறவாது; என் செய்வோர்? 'எதிரே வந்து தோன்றுகின்ற இவருடைய லக்ஷணங்களைப் பார்த்தால் இவர் எம்பெருமானாயிருக்கக் கூடும்' என்று நினைக்கலாகிறது; ஆனால் 'தௌர்ப்பாக்கிய சாலிகளான நமக்கு அவர் இவ்வளவு சுலபமாக ஸேவை ஸாதிக்க ப்ராப்தி இருக்க மாட்டாதே' என்று நம்முடைய தண்மையைக் கூடவே நினைத்துக் கொண்டால் 'வேறு யாரேனுமொருவரோ இவர்' என்று சந்தேகிக்க இடமுண்டாகிறது—என்பதாகக் கொள்க. பிராட்டி அசோகவனிகையில் வருந்திக் கிடந்த போது சிறிய திருவடி (அனுமந்) வந்து எதிரே கைகூப்பி நின்று மெய்யே வார்த்தை சொல்லச் செய்தேயும் 'இஃது இந்நிலத்தில் ஸம்பாவிதமாகக் கூடியதன்றே' என்று சிந்தித்த பிராட்டி,

> கிம் நு ஸ்யாத் சித்த மோஹோயம்
> பவேத் வாதக திஸ்த்
> வியம்—உந்மாதஜோ விகாரோவா
> ஸ்யாதியம் ம்ருகத்ருஷ்ணிகா

என்று, 'இது மதி மயக்கத்தால் வந்ததோ? காற்றுப் போக்கின் தோற்றரவோ? பித்த விகாரத் தோற்றமோ? கானல் காட்சியோ? என்று பல வகையாகச் சங்கிக்கவில்லையா? நிற்க.

**திரிபுரம் மூன்றும் எரித்தானும்**—முற்காலத்தில் தாரகாசுரனுடைய புத்திரர்களாகிய வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்க தவஞ் செய்து பிரமனிடம் பெருவரம் பெற்று வானத்துப் பறந்து செல்லுந் தன்மை வாய்ந்த மூன்று பட்டணங்களையடைந்து மற்றும் பல அசுரர்களோடு அந்நகரங்களுடனே தாம் நினைத்த விடங்களிற் பறந்து சென்று பலவிடங்களின் மேலும் விழுந்து அவ்விடங்களைப் பாழாக்கி வருகையில் அத் துன்பத்தைப் பொறுக்க மாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் சிவபெருமான் பூமியைத் தேராகவும் சந்த்ரஸூர்யர்களைத் தேர்ச் சக்கரங்களாகவும் நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும் மஹாமேருவை வில்லாகவும் ஆதி சேஷனை வில் நாணியாகவும், விஷ்ணுவை வாயுவாகிய சிறகமைந்து அக்நியை முனையாகவுடைய அம்பாகவும் அமைத்துக் கொண்டு யுத்தஸந்நத்தனாய்ச் சென்று போர் தொடங்கும் போது சிரித்து அச்சிரிப்பில் நின்று உண்டான நெருப்பினால் அவ்வசுரர்களை அந்நகரங்களுடனே எரித்திட்டனன்—என்பது திரிபுர மூன்றெரித்த வரலாறு.

**திரிபுரம்**—திரிந்து கொண்டிருந்த பட்டணங்கள் எனப் பொருள் படுதலால் வினைத்தொகை; இனி, 'த்ரிபுரம்' என்னும் வடசொல் திரிபுர மெனத் திரிந்ததாகவுங் கொள்ளலாம். இங்ஙனாகில், "திரிபுரமெரித்தான்" என்னுமளவே போதுமாயிருக்கத் 'திரிபுர மூன்று' என்றது ஏன்? என்று கேள்விபிறக்கும்; இதற்குப் பெரியவாச்சான் பிள்ளையருளிச் செயல்—'பஞ்சு பஞ்சஜநா:, ஸப்த ஸப்தர்ஷய:' என்னுமா போலே தனித்தனியே நாமதேயமாகவுமாம்" என்று.

சிவனும் பிரமனும், தாங்களும் சில அற்புதமான காரியங்களைச் செய்பவர்களாயிருந்தாலும் எம்பெருமானுடைய அரிய பெரிய செயல்களைக் கண்டு, ஆச்சரியப்படுவர்களென்பது தோன்ற வியப்ப என்றது.

**முரிதிரை மாகடல்**—மடிந்து மடிந்து எறிகின்ற அலைகளையுடைய கடல் என்றபடி. **எரியன**—'அன்ன' என்னும் குறிப்புப் பெயரெச்சம் 'அன' என்று தொக்கிக் கிடக்கிறது. **கேசரம்**—'கேஸரம்' என்ற வட சொல் விகாரம். சிங்கத்தின் பிடரி மயிர்கட்குக் கேஸரமென்று பெயர். (கேஸரீ—சிங்கம்)

"அரியுருவாகியநீர் ஆர்?"என்று அப்பெரிய வரையே முகம் நோக்கிக் கேட்க முடியாமல்

தலை குனிந்து வேருெருவரை நோக்கிக் கேட்பதுபோல் இவரார் கொல்? என்று நான் கேட்டேன், அதற்கு அவர் தாமே 'நான் அட்டபுயகரத்தேன்' என்று மறுமொழி கூறினர் என்கிருள் பரகால நாயகி.

அட்ட புயகரத்தேன்—அட்ட புயகர்த்திலுள்ளவன் நான் என்று பொருள். 'அஷ்ட புஜன்' என்பது எம் பெருமானுடைய திருநாமம்; எட்டுத் திருக்கைகளையுடையவன் என்று பொருள். க்ருஹம் என்ற வட சொல் க்ரமெனத்திரியும்; ஆகவே அஷ்ட புஜனுடைய க்ருஹம்—அட்டபுயகரம்; (திவ்ய தேசத்தைச் சொன்னது.) அவ்விடத்திலுள்ளவன் நான் என்றதாயிற்று. 'நான் அட்டபுயன்' என்றே எம்பெருமான் மறுமொழி கூறியிருக்கலாமே? தலையைச் சுற்றி மூக்கைப் பிடிப்பது போல இங்ஙனே எதுக்குச் சொன்ஞன் ? என்று கேள்வி பிறக்கும்; கேண்மின்; 'நான் அட்டபுயன்' என்று சொல்லிக் கொண்டால் தன்னை எம்பெருமாஞகத்தானே வெளியிட்டதாக விளங்கிவிடும்; அப்படி ஸ்பஷ்டமாகச் சொல்லிக் கொள்ள எம் பெருமானுக்குத் திருவுள்ளமில்லை; வேற்று மனிதஞகப் பொய் சொல்லிக் கொள்ளவும் விருப்பமில்லை; ஆகவே வெகு சாதுர்யமாகச் சொல்லிக் கொள்ளுகிருன் அட்டபுயகரத்தேன் என்று. 'அஷ்ட புஜக்ஷேத்திரத்திற்கு நான் அதிபதி' என்றதாகவுமாம், 'அஷ்டபுஜக்ஷேத்திரத்திலே கிடப்பாஞெருவன் நான்' என்று ஸர்மாந்யமாகச் சொல்லிக்கொண்டதாகவுமாம்.

துஷ்யந்த மஹாராசன் வேட்டையாடிக் கொண்டே சகுந்தலையின் இருப்பிடத்தை அடைந்தபோது இவனின்னுனென்று தெரிந்து கொள்ள விரும்பி 'நீ யார்' என்று கேட்டார்க்கு அரசன் விடை கூறும் போது ''யః 'பௌரவேண' ராஜ்ஞா தர்மாதிகாரே 'நியுக்த:' ஸோஹம்'' என்று விடை கூறினனரசன்.

[புரு வம்சத்து அரசனலே தரும காரியங்களைச் செய்யுமாறு நியமிக்கப் பட்டவன் நான்] என்று சாதுரியமாக விடை கூறினது இங்கு நினைக்கத்தக்கது. புரு வம்சத்து அரசஞகிய தன் தந்தையினுல் நியமிக்கப்பட்ட அரசன் தான் என்றும், புரு வம்சத்து ராசாவுக்கு வேலைக்காரன் என்றும் இருவகையாகப் பொருள் படுமாறு உரைத்தது காண்க.

"அட்டபுயவகரம்" என்பது அட்டபுயகரம் எனமருவிற்றென்றலும் பொருந்தும்; அகரமாவது அக்ரஹாரம்.

(தொடரும்)

* * *

## செய்திகள் :

திருமயிலைக் கபாலீச்சுரம் நவராத்திரி விழாவில், அருண்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் சொற் பொழிவு, 18-10-63முதல் 27-10-63வரை சிறப்புற நடைபெற்றது. தமிழ் நாடு முதலமைச்சர் கனம் திரு. M. **பக்தவத்சலம் B.A.,B.L.,** அவர்கள் சொற்பொழிவுகளைத் தொடங்கி வைத்தார்கள்.

தருமையாதீனம் தருமபுரத்திலுள்ள ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காம்பிகைக்கு 13 ஆவது சதசண்டி யக்ஞ நிகழ்ச்சி, 12-10-63 முதல் 27-10-63 வரை பகலிலும் இரவிலும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனை லட்சார்ச்சனைகளுடன், சிறப்புற நடைபெற்றது. அது போது ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழாவில், இலக்கியச் சொற்பொழிவுகளும் அறிஞர்களால் நிகழ்த்தப் பெற்றன.

### மகாகும்பாபிஷேகம்

**அய்யம் பேட்டை ஸ்ரீ தண்டாயுதபாணி கோவில்** சத்குரு ஸ்ரீ சதாசிவபிர்மேந்திர சுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தஞ்சை ஜில்லா—அய்யம் பேட்டை ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி அஷ்ட பந்தனமஹா கும்பாபிஷேகம் தமிழ் நாடு முதலமைச்சர் ஸ்ரீ **எம். பக்தவத்சலம் B.A.,B.L.,** அவர்கள் முன்பாக 6-9-63-இல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கனம் அமைச்சர் அவர்கள் புதிதாகக் கட்டப்பட்ட ராய கோபுரத்தைத் திறந்துவைத்துத் திருப்பணியைப் பற்றி புகழ்ந்து பேசினுர். மந்திரி அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரத்தை டிரஸ்டி ஸ்ரீ கிரி. ரா. குப்புசாமி வாசித்தளித்து மாலை சூட்டினுர்.

### மஹாமண்டபத் திறப்பு விழா

தமிழ் நாடு அறநிலைய ஆணையர் ஸ்ரீ M. S. சார்ங்கபாணி முதலியார் அவர்கள் மஹாமண்டபத்தைத் திறந்து வைத்துமின் விளக்குகளை ஏற்றிவைத்தார். பின்னர், அழகிய சரவிளக்குகளை ஏற்றிவைத்தார்.

# எண்ணாயிரம் கல்வெட்டுச் செய்திகள்

வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

எண்ணாயிரம் என்பது தென்னார்க்காடு ஜில்லா விழுப்புரந் தாலுகாவிலுள்ள ஒரு ஊராகும். விழுப்புரத்திலிருந்து செஞ்சிக்குப் போகும் பெருவழியில் (Road) உள்ள முட்டத்தூர் என்னும் ஊரில் இறங்கிக் கிழக்கே மூன்றரைமைல் தூரம் சென்றால் இவ்வூரை அடையலாம். இவ்வூரின் பழையபெயர் இராச ராச சதுர்வேதி மங்கலம் என்பதாகும்.

இவ்வூரிலுள்ள அழகிய நரசிங்கப் பெருமாள் கோயிலில் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகள் பிற்காலச் சோழமன்னர்களில், முதலாம் இராசேந்திர சோழன், முதலாம் இராசாதிராசன், முதற் குலோத்துங்க சோழன், பரகேசரி திரிபுவனச் சக்கரவர்த்தி இராச ராசதேவன், மகாமண்டலேசுவரன் இராச ராசேந்திர சோழதேவன் இவர்கள் காலங்களிலும்; விசய நகர மன்னர்களில் அச்சுததேவ மகாராயர், அவரது மகனார் சதாசிவ மகாராயர் காலங்களிலும் செதுக்கப்பட்டனவாகும்.

## கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்ட செய்திகள்

முதலாம் இராசேந்திர சோழ தேவன் கட்டளைப்படி, இராசராச சதுர்வேதி மங்கலத்துச் சபையார், இராச ராச விண்ணகர் ஆழ்வார்க்குத் திருவமுது திருவிழா திருவாய் மொழி விண்ணப்பித்தல் இவைகளுக்கும்; வியாகரணம், மீமாம்சம், வேதாந்தம் இவைகளைக் கற்பிக்கும் கல்லூரிக்கும் ஆக ஆநாங்கூராகிய இராச ராச நல்லூரில் 46 வேலி நிலத்தைக் கொடுத்துள்ளனர்.

See the annual report on South Indian epigraphy for the year 1917 Nos. 330—351; and A.R.E. for the year 1918, Part II Pages 144 and 145, Paras 26 and 27.

இது கொடுக்கப்பட்ட காலம் கல்வெட்டில் சிதைந்துபோய் விட்டது. இம்மன்னனது கட்டளைப்படி இராசராச சதுர்வேதி மங்கலத்துச் சபையார், அச்சதுர்வேதி மங்கலத்தை ஆட்சி செய்த நம்பி உடுத்தூருடையாருடனிருந்து, இராச ராச விண்ணகர ஆள்வார், குந்தவை விண்ணகர ஆள்வார், தேவேந்திரன், சரஸ்வதி, ஸ்ரீ பட்டாரகியார், மகாமோடியார், சூரிய தேவர், சப்தமாதர், சிங்கவேள் குன்றுள்வார், ஜேஷ்டையார் முதலானவர்களுக்குரிய நிலங்களின் வருவாய்களைப்பற்றி ஒரு வியவஸ்தை (a settlement) செய்துள்ளனர். இம்மன்னனது முப்பதாம் ஆட்சியாண்டு, நாள் 27-இல் இராச ராச சதுர்வேதி மங்கலத்தார், இராசராச ஈஸ்வரம் உடையார் கோயிலில் கூடி, சித்திரைச் சதய விழாவிற்கும், இராசராச விண்ணகர ஆள்வார் கோயிலிலுள்ள இராகவ சக்கரவர்த்தியின் மாசிப் புனர் பூச விழாவிற்கும் ஆக நிலங்களை அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

முதலாம் இராசாதிராச தேவனின் (1018–1054) முப்பதாம் ஆட்சி ஆண்டில் அதாவது கி.பி. 1048-இல் இராசராச சதுர்வேதி மங்கலத்துச் சபையார், அச்சதுர்வேதிமங்கலத்தை ஆண்ட அரங்கன் வீற்றிருந்தானை நிருபேந்திரசோழ மூவேந்த வேளாருடன் மும்மடி சோழன் மண்டபத்தில் கூடி இராசராச விண்ணகரதேவர்-குந்தவை விண்ணகரதேவர் இவர்களுக்குரிய நிலங்களுக்குக் குறைந்த அளவில் வசூலிக்கப்படும் வரிகளைப்போல, திருவாப் பாடி தேவர்க்குரிய நிலங்களுக்கும் வரி வசூலிக்கப்படவேண்டு மென்று உத்தர விட்டனர்.

முதற்குலோத்துங்க சோழதேவரின் 7-ஆம் இராச்சிய ஆண்டில் இராசராச சதுர்வேதி மங்கலத்தில் உள்ள இராசராச விண்ணகர ஆள்வார் கோயிலுக்குப் பத்துப் பசுக்களை, களத்தூர் உலகளந்தான் திருவரங்கதேவன்

விளக்கின் பொருட்டுக் கொடுத்துள்ளான். அழகிய நரசிங்கப் பெருமாள் கோயிலின் முன் மண்டபம், திரிபுவனச் சக்கர வர்த்தி வீர ராசேந்திர தேவனின் ஆறும் ஆட்சி யாண்டில் அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டான் சூரியனை இராசராசச் சம்புவராயனுல் கட்டப் பட்டுள்ளது என்பதை அங்குத் தூணில் உள்ள கல்வெட்டு உணர்த்துகின்றது.

சகம் 1268 அதாவது கி.பி. 1346-இல் சோழன் மகாமண்டலேசுவரன் இராச இரா சேந்திர சோழ தேவன், பழக் குன்றக் கோட் டத்து, சிங்கம் பொருத வள நாட்டுப் பொன் னூரின் சிற்றூர்களாகிய நிகனூர், முத்தக்கூர், விரவ நல்லூர், சாத்தனூர் இவைகளைக் கோயி லுக்கும் கொடுத்துள்ளான்.

இராசராச சதுர்வேதி மங்கலத்துச் சபையார், இச்சதுர்வேதி மங்கலத்துக்குட் பட்ட சிற்றூராகிய இடையாற்றில் உள்ள திரு விராமேஸ் வரம் உடையாரின் தேவதானமான நண்ணேர்ப் பாக்கமாகிய விக்கிரமசோழ நல் லூரை, அருமொழி தேவ வள நாட்டுப் புலியூர் நாட்டு வாஞ்சியூர் உடையான் உய்யக் கொண் டான் பஞ்ச நதி வாணனுக்கு ஜன்மக் காணி யாகக் கொடுத்துள்ளனர். இவ்வாறு கொடுக் கப்பட்ட ஊர்க்கு இராசராச வாஞ்சியூர் என்று பெயரிடப்பட்டு, வரிப்புத்தகத்திலும் பதிவு செய்யப் பட்டுள்ளது. இக்காலத்தில் திருமந் திரவோலை என்னும் உத்தியோகத்தில் இருந் தவன் சோழேந்திர சிங்க மூவேந்த வேளான் ஆவன். (திருமந்திரவோலை = அரசனது ஆணையை எழுதுவோர்) இது நிகழ்ந்தது பரகேசரிவர்மனாகிய திரிபுவனச் சக்கரவர்த்தி இராச ராச தேவரின் 11-ஆம் ஆட்சியாண் டாகும்.

விசயநகரவேந்தராகிய சதாசிவமகாராயர் காலத்தில் வேங்கடாத்திரி நாயக்கர், பெரிய ஆகூர் என்னும் ஊரை அழகிய சிங்கப் பெரு மாளுக்குக் கொடுத்துள்ளார்.

எண்ணாயிரத்தைத் தன்னகத்துக் கொண் டுள்ள நாடு :—

முதலாம் இராசேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டு இவ்வூரை ஜயங் கொண்ட சோழ வளநாட்டுத் தனியூர் என்றும்; முதலாம் இராசா திராசன் காலத்துக் கல்வெட்டு இவ்வூரை இரா சேந்திர சோழ வள நாட்டுப் பனையூர் நாட்டுப் பிரம்மதேயம் தனியூராகிய இராசராச சதுர் வேதிமங்கலம் என்றும்; முதற் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டு இவ்வூரை, கங்கை கொண்ட சோழ வளநாட்டுப் பனையூர் நாட்டுப் பிரமதேயம் தனியூர் இராச ராச சதுர் வேதி மங்கலம் என்றும், பரகேசரி திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவரின் 11-ஆம் ஆண்டுக் கல்வெட்டு இவ்வூரை இராசராச வள நாட்டு இராச ராச சதுர் வேதி மங்கலம் என்றும், வீரப் பிரதாப நரசிங்க தேவமகா ராயரின் மகனாகிய அச்சுத தேவ மகாராயர் காலத்துக் கல்வெட்டு (சகம் 1461) இவ்வூரைச் சயங் கொண்ட சோழ மண்டலத்து, பழக் குன்றக் கோட்டத்துப் பனையூர் நாட்டு இராச ராச சதுர்வேதி மங்கலம் என்றும், குறிப்பிடு கின்றன.

## வரலாற்றுக் குறிப்பு

முதலாம் இராசேந்திர சோழன் வட இந்தி யாவிற்கு (உத்தரபாதத்துக்குத்) தானும் நேரில் சென்று வட நாட்டு மன்னர்களை வென்று கங்கை கொண்ட சோழன் என்ற பட்டத்துடன் வந்து, எண்ணாயிரத்தில் கங்கை கொண்ட சோழன் மண்டபம் என்னும் ஒரு மண்ட பத்தைக் கட்டியுள்ளான். என இவ்வூர்க் கோயில் கல்வெட்டு அறிவிக்கின்றது: ஆனல் திருவாலங்காட்டுச் செப்பேடு, முதலாம் இரா சேந்திர சோழனின் சேனாதிபதியே கங்கை நீரைக்கொண்டு வந்ததாகவும், இராசேந்திர சோழன் அவனைக் கோதாவரிக் கரையில் சந்தித்ததாகவும் கூறுகின்றது. (South Indian Inscription volume III, Part III Page 388.)

பழங்காலத்தில் திருக்கோயில்களே கல்வி நிலையங்களாக விளங்கி இருந்தன. திருப் பதியம், திருவாய்மொழி இவைகளை விண்ணப் பித்தற்கும், வேதத்தை அத்தியயனம் பண் ணுவதற்கும் நிவந்தங்கள் கோவில்களுக்கு அளிக்கப் பட்டிருந்தன. தஞ்சாவூர்ச் சில்லா தஞ்சாவூர் தாலுகாவில் செந்தலை என்னும் ஊரில் உள்ள சுந்தரேஸ்வரர் கோயில் கல் வெட்டு, அக்கோயிலில் மகாபாரதம் படிப் பதற்கு நிவந்தம் அளிக்கப் பட்டிருந்ததை உணர்த்துகின்றது. (A. R. E. 1897 Page 4)

குடந்தைக் கீழ்க்கோட்டமாகிய நாகேஸ்வரர் கோயிலில் பிரபாகரம் வக்கணிப்பதற்கு(விவரித் துரைப்பதற்கு நிலம்) அளிக்கப் பட்டிருந்தது. (A.R.E. 1912 Page 65) திருவொற்றியூர் உடையார் கோயிலில் உள்ள வியாகரண தான வியாக்கியான மண்டபத்தில் படிக்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உணவு முதலியவைகளுக்கும், வியாகரணதானப் பெருமாளுக்கு வழிபாட்டிற்கும் அறுபது வேலி நிலம் கொடுக்கப் பட்டிருந்தது. அதே கோயிலில் சிவதர்மம் சித்தாந்தம் இவைகளும் கற்பிக்கப்பட்டு வந்தன. இவைகளை அக் கோயில் கல்வெட்டு உணர்த்து கின்றது. (A.R.E. 1913 Page 110)

## கோயில்களிற் கல்வி நிலையங்கள் :

எண்ணாயிரத்தில் ஒரு வேத கலாசாலை இருந்தது. இதில் இருக்குவேதம் படிப்பார் எழுபத்தைவர், யசுர் வேதம் படிப்பார் எழுபதைவர், சந்தோக சாமம் படிப்பார் இருபதின்மர், தலவகார சாமம் படிப்பார் இருபதின்மர், வாஜசானியம் படிப்பார் இருபதின்மர் அதர்வம் படிப்பார் பதின்மர், போதாயனீயக் கிரியை கல்பம், கணம் இவைகளைப் படிப்பார் பதின்மர் ஆக இருநூற்று முப்பது பிரமசாரிகளும், ரூபாவதாரம் கேட்பார் நாற்பதின்மரும், ஆக இருநூற்று எழுபதின்மர்களுக்கு நாளொன்றுக்குத் தலைக்கு ஆறு நாழி நெல்லும் வியாகரணம் கேட்பார் இருபத்தைவர் பிரபாகரம் கேட்பார் முப்பத்தைவர், வேதாந்தம் கேட்பார் பதின்மர் ஆக எழுபதின்மர்களுக்கு, தலைக்கு நாளொன்றுக்கு ஒரு குறுணி இரு நாழி நெல்லும்; வியாகரணம் கற்பிக்கும் நம்பிக்கு ஒரு கலமும், பிரபாகரம் கற்பிப்பார் மற்றொருவர்க்கு ஒரு கலமும், வேதாந்தம் கற்பிக்கும் மற்றொருவருக்கு ஒரு கலமும் தூணியும் கொடுக்கப்பெற்று வந்தன. இருக்கு வேதம் கற்பிக்க மூவர், யசுர் வேதம் கற்பிக்க மூவர், சந்தோகசாமம் கற்பிக்க ஒருவர், தலவகார சாமம் கற்பிக்க ஒருவர், வாஜசானீயம் கற்பிக்க ஒருவர், போதாயனீயக் கிரியை கல்பம், கணம் இவைகளைக் கற்பிப்பார் ஒருவர் ஆகப் பத்துப் பேராசிரியர்கள் நியமனஞ் செய்யப் பெற்றிருந்தனர். ரூபாவதாரம் கற்பிக்கும் ஆசிரியர்க்கு ஒரு நாளைக்கு மூன்று குறுணி நெல் கொடுக்கப்பட்டன. இங்ஙனம் ஒரு நாளைக்கு இராசராசன் மரக் காலால் அளக்கப் பெற முப்பது கல நெல் வேண்டியுள்ளன. இங்ஙனம் ஆண்டு ஒன்றுக்கு 10500 கலங்கள் நெல் தேவைப் பட்டன.

இவைகளன்றி வியாகரணம் கற்பிக்கும் ஆசிரியர்க்கு அத்தியாயம் ஒன்றுக்கு ஒரு கழஞ்சு வீதம் எட்டு அத்தியாயங்கள் கற்பிப்பதற்கு எட்டு கழஞ்சுத் தங்கமும், மீமாம்சம் கற்பிக்கும் ஆசிரியர்க்கு அத்தியாயம் ஒன்றுக்கு ஒரு கழஞ்சு வீதம் பன்னிரண்டு அத்தியாயங்களுக்குப் பன்னிரண்டு கழஞ்சும், வேதம் கற்பிக்கும் பதின் மூன்று ஆசிரியர்களுக்கு, தலைக்கு அரைகழஞ்சு வீதம் ஆறரை கழஞ்சும் வியாகரணம், மீமாம்சம் இவைகளைக் கேட்கும் மாணவர்கள் எழுபதின்மர்களுக்குந் தலைக்கு அரைக் கழஞ்சு வீதம் முப்பத்தைந்து கழஞ்சும் ஆக அறுபத்தொன்றரைக்கழஞ்சு தங்கங்களும் வேண்டியிருந்தன. இவைகளின் பொருட்டு அரசன் அநுமதியுடன் இராசராச சதுர்வேதி மங்கலத்துச் சபையார், ஆநாங் கூராகிய இராசராச நல்லூர், மேலக் கூடலூராகிய புருஷ நாராயண நல்லூர் இவைகளின் பகுதியாயமைந்த மாம்பாக்கச்சேரியாகிய பவித்திர மாணிக்க நல்லூரில் நாற்பத்தைந்து வேலி நிலத்தைக் கோயிலுக்கு விட்டிருந்தனர்.

ஆசிரியர்களும் மாணவர்களும் உண்பதற்கு ஒரு உணவு விடுதியும் (a hostel) இங்கு இருந்தது. இதில் இவர்களுக்கு மட்டுமல்லாமல், வேதம் வல்ல பிராமணர், வேதம் வல்லவரல்லாத பிராமணர், ஸ்ரீவைஷ்ணவர் இவர்களுக்கும் உணவு அளிக்கப்பட்டு வந்தது. இவ்வுணவு விடுதிக்கு வேண்டியவைகளை வியாபாரிகள் பணம் பெற்று அளித்து வந்தனர்.

உணவுவிடுதிக்கு வேண்டிய விறகுகளை ஊர்வாரியஞ் செய்வார் கவனித்து வந்தனர். வியாபாரஞ்செய்துவந்த வளஞ்சியப் பிராமணர் சர்க்கரை முதலியவைகளுக்கு முன் பணம் பெற்று அளித்து வந்தனர். கோயிலுக்கு வேண்டியவை போக எஞ்சிய பால், தயிர், நெய் இவைகள் இந்த உணவு விடுதிக்கு அளிக்கப் பட்டு வந்தன. இந்த உணவு விடுதி கங்கை கொண்ட சோழன் மண்டபத்தில் நடை பெற்று வந்தது. எண்ணாயிரத்தில் உள்ள இக் கல்வெட்டுப்பலவகையிலும் சிறந்ததாகும்.

—★—

# அன்பின் என்பு

வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், தருமபுரம்.

**அன்பின் என்பு**

உயிரின் உயர் பண்புகள் பலவற்றினும் உயர்ந்தது அன்பு. அவ்வன்பினைக் கூறு மிடங்களிலெல்லாம் பெரியோர் பெரும் பான்மையும் என்போடு இணைத்துக் கூறுதலைக் காண் கின்றோம்.

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு"**
**"அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போ டியைந்த தொடர்பு"**

**"என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்"**
**"அன்பின் வழியது உயிர் நிலை அஃதிலார்க்கு**
**என்பு தோல் போர்த்த உடம்பு"**
*என்னும் திருக்குறள் களிலும்,*

**"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்**
**பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்**
**அன்போடுருகி அகங்குழைவார்க்கன்றி**
**என்போன் மணியினை எய்தவொண்ணாதே"**
என்னும் திருமந்திரத்திலும்,

**"இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்**
**படரும் நெறிபணியாரேனும்—சுடருருவில்**
**என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு**
**அன்பறா தென்னெஞ் சவர்க்கு"**


**"மகிழ்தி மட நெஞ்சே மானுடரில் நீயும்**
**திகழ்தி பெருஞ் சேமம் சேர்ந்தாய்—இகழாதே**
**யாரென்பே யேனும் அணிந்துழல் வார்க்காட்பட்ட**
**பேரன்பே இன்னும் பெருக்கு"**

**"அவனோர் குலமங்கை பாகத் தகலான்**
**இவனோர் சவமகளு மீதே—தவள நீ**
**றென்பணிவீர் என்றும் பிரிந்தறியீர் ஈங்கிவருள்**
**அன்பணியார் சொல்லுமின் இங்காரர்"**

என்னும் அற்புதத் திருவந்தாதியிலும் அமைந்துள்ள தொடர்கள் நோக்கற்பாலன. 'அன்பு, என்பு என்னும் சொற்கள் செய்யுள் இன்பமாய் அமைதற்கு உரிய எதுகை நயம் பெற்றிருத்தலே அவைகளை ஆசிரியர்கள் இணைத்துக் கூறுதற்குக் காரணம்' என்று மட்டும் கருதி விடுதல் கூடாது; ஏனெனின், எதுகை அமைந்துள்ள சொற்கள், தாம் கருதும் பொருளோடு பொருந்தாது நிற்குமாயின் அவற்றைப் புலவர் பெருமக்கள் கைக்கொள்ளா தொழிவராதலின். ஆகவே, அன்போடு என்பைப் பிணைத்துக் கூறுதலில் ஒரு சிறப்பு இருத்தல் திண்ணம்.

உடம்பிற்கு முதலாய் உள்ளவை சோரி, தோல், இறைச்சி முதலிய ஏழ் என்பர். அவற்றுள் என்பு ஒன்றே ஏனைய எல்லாவற்றிற்கும் பற்றுக் கோடாய் இருப்பது. ஏனைய தாதுக்கள் அழியினும் என்பு நிலை பெற்று நின்று உடம்பாய்க் காணப்படும் தன்மையுடையதாகும். ஆகவே உடம்பை உருவாக்கி நிற்பது என்பு என்பது தெளியப்படும். அது போலவே உயிரின் நற்பண்புகள் பலவற்றிற்கும் அன்பே அடிநிலையாவது, என்பில்லாத உடம்பு உடம்பாகாதவாறு போல, அன்பில்லாத உயிர் உயிராகாது.


( தொடரும் )



திருவெண்காட்டில் கவர்னர் திரு. விஷ்ணுராம்மேதி அவர்கள் உரை நிகழ்த்துதல்.




கீழ்வேளூர் அஞ்சுவட்டத் தம்மன் வளைவை
அமைச்சர் திரு. N. S. S. மன்ருடியார் அவர்கள் திறந்து வைத்தல்.



கீழ்வேளூர்க் கேடிலியப்பர் கோயில் மகாகும்பாபிஷேகக் காட்சி.



மதுரை வித்வத் ஸதஸ்ஸிற் கலந்துகொண்ட தென் நான்கு
மாவட்டங்களின் அறநிலைய இறைபணியாளர்கள்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras-34. Printed at The United Printers, 3/27 Broadway, Madras-1.